பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 03 ஞாயிற்றுக்கிழமை (19.10.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 326

## வடக்கின் நிலைமை பற்றிய

# இந்தியாவின் கவலை குறித்து

# நாம் மிகு சிரத்தை கொள்கிறோம்

## மன்மோகனை தொலைபேசியில் அழைத்து மஹிந்த விளக்கம்





கொழும்பு, ஒக்ரோபர்.19

இலங்கையின் வடபகுதி நிலைமை தொடர்பாக, இந்தியா கவலை கொண்டிருப்பது குறித்து நாம் மிகுந்த சிரத்தையாக உள்ளோம். எத்தகைய சூழ்நிலையில் தாங்கள் அக்கறை தெரிவிக்கிறீர்கள் என்பதனையும் நாம் நன்கு உணர்ந்துள்ளோம்.

வடக்கில் நடைபெறும் இராணுவ நடவடிக்கையில் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாதிருக்கப் பார்த்துக்கொள்ளுமாறு படையினருக்குக் கண்டிப்பாக உத்தரவிட்டுள்ளோம் என்பதையும் உங்களுக்கு அறியத்தருகிறோம்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை, நேற்றுத் தொலைபேசியில் அழைத்துப் பேசிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவரிடம் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதங்களைக் களைந்து, வடக்கில் ஜனநாயகத்தையும் அமைதியையும் ஸ்திரத்தன்மையையும் உருவாக்குவதற்காகவே அங்கு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தியப் பிரதமரிடம் விளக்கினார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், ஜனாதிபதி மகிந்தவின் அழைப்பை ஏற்றுப் பேசிய போது -

இலங்கையின் வடக்கில் நடத்தப்படும் இராணுவ நடவடிக்கையின் போது எந்த விலை கொடுத்தும் தமிழ்ப் பொது மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்; அதனை உத்தரவாதம் செய்து கொள்ள வேண்டும் - என்று வலியுறுத்திக் கூறியதாக புதுடில்லியில் இரு நாட்டு தலைவர்களினதும் தொலைபேசி உரையாடலின் பின்னர் வெளியிடப்படுள்ளது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

வடக்கில் நடைபெற்று வரும் மோதல்களில் சிக்குண்டுள்ள சிவிலியன்களின் பாதுகாப்பும் பாதிப்பின்மையும் உறுதி செய்யப்பட வேண்டும். அங்கு நாளுக்கு நாள் மோசமுற்று வரும் மனிதாபிமான சீரழிவு (20 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிலைமை குறித்து நேரில் கேட்டறிய அமைச்சர் பிரணாப் முகர்ஜி கொழும்பு வருவார்



புதுடில்லி, ஒக். 19

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து கொழும்பில் அரசுத்தலைவர்களுடன் நேரில் பேச்சு நடத்தி, நிலைமையைக் கண்டறிவதற்காக வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி இரண்டொருநாள்களில் அங்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் நேற்றுத் தொலைபேசியில் கலந்துரையாடியதையடுத்தே முகர்ஜி கொழும்புக்குச் செல்லவுள்ளார்.

இலங்கையின் வட பகுதியில் இலங்கை அரசு மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளால் உருவாகியுள்ள - குறிப்பாக தமிழ்ப் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள - அவல நிலை குறித்து மதிப்பீடு (20 ஆம் பக்கம் பார்க்க)

## நிலைமையை விளக்குவதற்கு இந்தியாவுக்கு கோத்தபாய, பஸில், லலித் வீரதுங்க தூதுக்குழு







கொழும்பு, ஒக்.19

இலங்கையின் தற்போதைய நிலையை விளக்க பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான குழு ஒன்று இன்று இந்தியாவுக்குச் செல்லவுள்ளது எனத் தெரியவந்தது.

கோத்தபாயவுடன் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் செல்வர் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவே இத் தூதுக்குழு இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளது.

இந்தக் குழுவுக்கு புறம்பாக அரசில் அங்கம் வகிக்கும் அரசியல் (20 ஆம் பக்கம் பார்க்க)

## நாச்சிக்குடாவுக்கு வடக்கே நேற்று நாள் முழுவதும் கடும் சண்டை

கொழும்பு, ஒக்.19

நாச்சிக்குடாவுக்கு வடக்கிலும் அக்கராயன்குளத்துக்கு மேற்கேயும் நேற்று முழுநாளும் கடும் சண்டை இடம்பெற்றது என்று பாதுகாப்புத்தரப்பு அறிவித்தது.

படையினரின் காவலரண்களுக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவ முற்பட்ட போது சண்டை மூண்டது என்றும் -இச் சண்டையில் விடுதலைப்புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது (20 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா செல்லும் உத்தேச எம்.பிக்கள் குழுவில் அங்கம் வகிக்க மலையகக் கட்சிகள் பின்னடிப்பு!

கொழும்பு, ஒக்.19

இலங்கையின் இப்போதைய நிலைவரம் தொடர்பாக தமிழக அரசு மற்றும் மத்திய அரசாங்கத் தலைவர்களுக்கு விளக்கம் அளிக்க செல்லும் குழுவில் அங்கம் வகிப்பதற்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள்- குறிப்பாக மலையகக் கட்சித் தலைவர்கள் - பின்னடிப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழக மற்றும் மத்திய அரசுத் தலைவர்களை சந்தித்து தற்போதைய நிலைமை குறித்து விளக்க ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் (20 ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கை விவகாரத்தில்

## இந்தியா தலையிட்டால் நாடளாவிய ரீதியில் பெரும் போராட்டம் நடத்துவோம் - வீரவன்ச



கொழும்பு, ஒக். 19

இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடுமானால் அதற்கு எதிராக பெரும் எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகத் தேசிய விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

இந்த முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரத்தில் இந்தியா (20 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்த மக்கள் உணவுக்குப் புறம்பாக மற்றும் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றார்கள்

### கிளிநொச்சி அரச அதிபர் சொல்கிறார்



கிளிநொச்சி, ஒக். 19

கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்குகிறார்கள். உணவுக்குப் புறம்பாக அவர்களுக்கு பல்வேறு உதவிகள் தேவைப்படுகின்றன. கிளிநொச்சி அரச அதிபர் நா.வேதநாயகன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் வசதிகள் ஏதும் இன்றி அவல வாழ்வைத் தொடர்கின்றனர். எனினும் அவர்களுக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை (20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

மாபெரும்
தீபாவளி கொண்டாட்டத்தை முன்னிட்டு
உள்நாட்டு வெளிநாட்டுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை
FedEx Express
(யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்)
வாடிக்கையாளரின் நலன்கருதி
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும்.
கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kgபொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் மிக விரைவாகப்
பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
MMBL Money Master
Money Master
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் ஆதிமூல லக்ஷ்மி நாராயண அமுத சுரபி அன்னதான பணிக்கான
## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு விவரம்

மேற்படி பணிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு 16.10.2008 ஆம் திகதி ஆலயத்தின் தர்மகாத்தா சபைத் தலைவர் எஸ்.அன்னலிங்கம் தலைமையில் ஆலய முன்றிலில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது. அதிர்ஷ்டசாலிகள் இலக்க விவரம் பின் வருமாறு உள்ளது. ரிக்கற் காண்பித்து ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலய மடத்தில் பரிசுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முதலாம் பரிசு 1994
2ஆம் பரிசு 1260
3ஆம் பரிசு 1294

ஆறுதல் பரிசுகள் 10

| | | |
|---|---|---|
| 1)1512 | 5)107 | 9)1252 |
| 2)1190 | 6) 2241 | 10)1197 |
| 3)926 | 7) 2188 | |
| 4)461 | 8)3346 | |

குறிப்பாக மேற்படி மகோற்சவ நாள்களில் அன்னதானப் பணிகள் சிறப்பாக நடத் துவதற்கு சகல வழிகளிலும் பொருள் உதவிகள், நிதி உதவிகள் புரிந்த அடியவர்களுக்கு நன்றி கூறுவதுடன் காக்கும் கடவுள் கண்ணனின் அருளாசிகள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
சி.இராமஜெயம்
கற்கோவளம். (சி-555498)

ஆதிமூல லக்ஷ்மி நாராயண அமுதசுரபி நிர்வாகம், ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய தேவஸ்தானம்.

## 31 ஆம் நாள் நிகழ்வும் நன்றி நவிலலும்

தோற்றம் 17 - 04 - 1926



மறைவு 20 - 09 - 2008

### திருமதி ஆனந்தம் கிறிஸ்தோப்பர்

20.09.2008 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கு திருமதி ஆனந்தம் கிறிஸ்தோப்பர் அவர்களின் மரணச் செய்தி கேட்டு எமது துயரில் நேரில் கலந்துகொண்டோருக்கும், தொலைபேசி, தந்தி மூலம் ஆறுதல்வார்த்தை கூறியோருக்கும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் கண்ணீர் அஞ்சலிகள் செலுத்தியோருக்கும் மற்றும் 22.09.2008 அன்று இடம்பெற்ற இறுதி நிகழ்வில் பெருந் தொகையில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்,-நண்பர்கள், உத்தியோக உறவுகள், பொதுமக்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (20.10.2008) திங்கள் முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டு நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.18, செல்லர் வீதி,
செம்மணி வீதி,
நல்லூர். (79341)

சி.ஏ.மோகன்றாஸ்(பிரதேச செயலர், கோப்பாய்) -மகன்,
மருமகள்- ஜக்குலின்.

## மரண அறிவித்தல்

### சுப்பையாக்குருக்கள் முத்துக்குமாரசாமிக்குருக்கள்

திருகோணமலை, ஆலடிப்பிள்ளையார் கோவில் பிரதம குருக்கள் சுப்பையாக்குருக்கள் முத்துக்குமாரசாமிக்குருக்கள் 17.10.2008 வெள்ளிக்கிழமை திருகோணமலையில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று(18.10.2008) சனிக்கிழமை திருகோணமலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

யாழ். பருத்தித்துறை வீதி,
புத்தூர்.

தகவல்:
சிவராஜ ஐயா.

## உலர் உணவு விநியோகம்

தென்மராட்சிப் பிரதேசத்தில் யுத்த வேளையில் குடும்பத்தலைவனை இழந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன.

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான யாழ். மாவட்ட பணியகத்தினால் இப்பொருள்கள் சாவகச்சேரி நகர சபை கேட்போர் கூடத்தில் வைத்து வழங் கப்பட்டன.

குடும்பத் தலைவரை இழந்த பெண்களுக்கான கருத்தரங்கும் இடம்பெற்றது.

## திருநெல்வேலி லயன்ஸ் கழக சமூகப்பணி நயத்தல் நிகழ்வு

திருநெல்வேலி லயன்ஸ் கழகத்தினர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனின் சமூகப்பணியை நயக்கும் நிகழ்வு ஒன்றை இன்று நடத்துகிறார்கள்.

லயன் கலாநிதி க. குணராசாவின் பிறவுண் வீதியில் உள்ள இல்லத்தில் பி.ப. 4மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வுக்கு கழகத் தலைவர் எஸ்.தனபாலசிங்கம் தலைமைவகிப்பார். வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு இந் நிகழ்வில் வைத்து உதவிகள் வழங்கப்படும். (204)

## மாடு விற்பனைக்கு

நல்லின ஜெசி நிறை சினையுடன் கன்னி நாகு விற்பனைக்குண்டு.

தொடர்பு- அ.செல்வரட்ணம்,
96, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

## வான் விற்பனைக்கு

1998ஆம் ஆண்டு உற்பத்தியான ரொயாட்டா சுப்பர் GL LH 172 மொடல், pc 99 XX தொடர் இலக்கமுடைய DUAL AC உடன் கூடிய சில்வர்/வெள்ளை நிற வான் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0714262034

## காணவில்லை

மா வெள்ளை நிற, கொம்பு முன்பக்கமாக வளைந்திருக்கும் பின்பக்கத்தில் கம்பி கீறிய அடையாளமிட்ட மாட்டை 13.10.2008 முதல் காணவில்லை. இதனைக் கண்டவர்கள் பொ. சண்முகம், தலங்காவல் பிள்ளையார் கோயிலடி, திருநெல்வேலி என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

## தவறிவிட்டது

நீர்வேலி மேற்கு, நீர்வேலி எனும் முகவரியுடைய இரத்தினம் சுதாகரன் என்பவரது சாரதி அனுமதிப் பத்திரம் கடந்த (16.10.2008) வியாழக்கிழமை நீர்வேலிக்கும் சங்கானைக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முக வரிக்கோ அல்லது 0602218776,0771630988 எனும் தொலைபேசி இலக்கங்களுடனோ தொடர்பு கொண்டு தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## விற்பனைக்கு

மல்லாகம், கே.கே.எஸ். வீதி சோடா கம்பனி ஒழுங்கையில் கடை, வீடு உடன் கூடிய 2 1/2 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:அன்னம் ஸ்ரோர்ஸ், சோடா கம்பனி ஒழுங்கை, மல்லாகம்.

## இளையதம்பி தேவாசீர்வாதம் -(மரண அறிவித்தல்)

நேற்றைய (18.10.2008) உதயன் பத்திரிகையின் பன்னிரண்டாம் பக்கத்தில் வெளியான கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட அன்னாரின் மரண அறி வித்தலில் பிரசுரமான விலாசத்தை பின்வருமாறு திருத்தி வாசிக்கவும்.

63, Dunmurray BLVD
Scarborough
Ontario- M1T-2K2
CANADA
T.P.No.: 4162994292

## திறப்புவிழா

அனலைதீவு ப.நோ.கூ.சங்கத்தின் கூட்டுறவு நகர் திறப்பு விழா நாளை மு.ப 10.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

அனலைதீவு ப.நோ.கூ.ச. தலைவர் வே. கிரிதரன் தலைமையில்இடம் பெறும் இந் நிழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் அமைச்சின் யாழ். மாவட்ட பொது சன தொடர்பு அதிகாரி எஸ். உதயன் கலந்து கொள்வார். (2)

## பழுவம்

கணக்காய்வு பரீட்சகர் தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்தபோட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

Rajathy Pathippakam
430, K. K. S. Road, Jaffna.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அழகம்மா தில்லைநாதன்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, கட்டப்பிராய் - குப்பிளான்)



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் கலைமணி வீதி, கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அழகம்மா தில்லைநாதன் (ஓய்வு பெற்ற ஆசிரியை, யா/குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்) நேற்று (18.10.2008) சனிக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் தில்லைநாதனின் (M.L.T) அன்பு மனைவியும் ரவீந்திரநாதனின் (ஆசிரியர், யா/செங்குந்தா இந்துக் கல்லூரி) தாயாரும் திருமதி ர.றஜனி (ஆசிரியை, யா/கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை)யின் மாமியாரும் ர.கம்ஷாயினி, ர.காயத்திரி (வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள்), ர.அபிஜா (ஞானக்குழந்தை பாலர் பாடசாலை) ஆகியோரின் அன்புமிகு அப்பம்மாவும் காலஞ்சென்ற ஆ.சிவபாதசுந்தரம், ஆ.அமுதலிங்கம் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் க.கிருஷ்ணர் (சிங்கப்பூர்), காலஞ்சென்றவர்களான நா.நல்லமுத்து, க.தில்லைநாதன், க.நடராஜா மற்றும் செ.நாகம்மா (மலேசியா), க.கனகம்மா (கனடா), க.சின்னராசா (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும் வே.பொன்னம்பலம்-கமலம்மா தம்பதியரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2008) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கலைமணி வீதி, கட்டப்பிராயில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(79349)

தகவல்:தில்லை. ரவீந்திரநாதன்
மகன் (ஆசிரியர்).

### திருமதி சதாசிவம் சரஸ்வதி

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சதாசிவம் சரஸ்வதி நேற்று (18.10.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனிவாசகம் - நாகம்மா தம்பதியினரின் ஏக புத்திரியும் காலஞ்சென்றவர்களான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குமாரசாமி - பொன்னம்மா தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடராஜா, இரத்தினம், கனகரத்தினம், சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குப்பிளான் காடா கடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

தகவல்:
மருமக்கள்.

### திருமதி பொன்னையா நல்லம்மா

(கிளாக்கற்றமோள்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நல்லம்மா நேற்று (18.10.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராமநாதனின் அன்புச் சகோரியும், சு.நவரத்தினத்தின் மைத்துனியும், சரஸ்வதி (லண்டன்), குணேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் கனகசபாவதி (இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர், இலங்கை மின்சாரசபை) ஆகியோரின் அன்பு மாமியாரும், தமிழ்வாணி, சிவகுமார், வதனி, நந்தகுமார் ஆகியோரின் பேர்த்தியும், பொழில், மதுசா, ஜெனகன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்கா இன்று (19.10.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் சித்துப்பாத்தி இந்து மயா னத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42, திருமகள் வீதி,
அரியாலை. (79348)

தகவல்:
க.கனகசபாபதி (மருமகன்).

## மரண அறிவித்தல்

### திருமதி ஐயாத்துரை மேரி மெக்டலின் (ராசம்மா)



யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டலேனைச் சேர்ந்த திருமதி ஐயாத்துரை மேரி மெக்டலின் (ராசம்மா) 17.10.2008 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பதியினரின் அன்பு மகளும் சந்தியாப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசையா, மரியம்மா, பொன்னம்மா, சவுணம்மா, திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் குணாளன் (ஸ்ரார் சலூன், மருதானை), கலா, சுகுமார் (பிரான்ஸ்), சவுதா, இரத்தினகுமார்(கனடா), றமணி (ஹொலண்ட்), சேக்ஸ்பியர் (கனடா), திலகா ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வம், அழகு (ஜெமினி சலூன் - நவீன சந்தை), ரவி (ஹொலண்ட்), இராசதுரை (நியூ ராஜா சலூன் - யாழ்.) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைக்காக நாளை (20.10.2008) திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து யாழ். அடைக்கல அன்னை தேவாலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, திருப்பலியின் பின் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

5/2, இராசாவின் தோட்ட லேன்,
யாழ்ப்பாணம். (79342)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் ஆட்டம் காணுகிறது விவசாயம்!

யாழ்ப்பாணத்துக் கறுத்தக் கொழும்பான் மாம்பழத்துக்கும், வாழைப்பழத்துக்கும் பனம்பொருள்களுக்கும், புகையிலைக்கும், கடலுணவுகளுக்கும் இலங்கை முழுவதிலுமே தனி மதிப்புண்டு. தமிழ் மக்களுக்கு மாத்திர மல்லாது சிங்கள மக்களுக்கும் யாழ்ப்பா ணத்து உற்பத்திப் பொருள்களின் மீது அலாதிப்பிரியம். கொழும்பில் கொடிகட் டிப் பறந்த தமிழ் வர்த்தகர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்து உற்பத்திப் பொருள்களின் கடைக்கண் பார்வையாலேயே பல தலைமுறைகளுக்குத் தேவையான செல்வத்தை சேமிக்க முடிந்தது. இலங்கைக்கு வருகின்ற உல்லாசப் பயணிகளிடையேயும் வடபுலத்துப் பண்டங்கள் செல்வாக் குப் பெற்றிருந்தன. இதனால் உள்நாட்டில் மட்டு மன்றி சர்வதேச ரீதியாகவும் பொருளாதாரத்தைப் பெருக்குவதற்கு இவை துணை புரிந்தன.

ஆனால் இன்று இந்த நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. ஏ-9 வீதி மீளவும் அடைபட்டதன் பின்னர் உள்ளூர் விவசாய விளைபொருள்கள் குடாநாட்டுக்குள்ளேயே முடங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் குடாநாட்டின் பிரதான தொழிலான விவ சாயத்தின் அத்திவாரமே ஆட்டங்காணத் தொடங்கியுள்ளது.

தற்போது குடாநாட்டில் நிலவுகின்ற இறுக்கமான நடைமுறைச் சூழல் கார


பொருள்களின் விலைகள், அடிக்கடி 'டிமிக்கி' கொடுக்கின்ற மின்சாரம் என்பவை காரணமாக நீர்ப்பாசனமும் சீரற்றதாகவே இருக்கின்றது.

இத்தனை சவால்களையும் சமாளித்து இயற்கையின் ஆட்டங்களுக்கெல்லாம் ஈடுகொடுத்து, விவசாயம் செய்தால், விளைபொருள்களை சந்தைப்படுத்த முடியாத நிலை தோன்றியிருக்கின்றது. உள்ளூர் சந்தையின் நுகர்ச்சி அளவைக் காட்டிலும் மேலதிகமான விளைபொருள்களை வீணே கொட்ட வேண்டிய நிலைக்கே தள்ளப்பட்டுள்ளனர். இதற்கு மிக முக்கியமான காரணம், குடாநாட்டின் உற்பத்திப் பொருள்கள் வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படாது தேங்கிக் கிடப்பதுதான்.

யாழ்.குடாநாட்டுக்குத் தேவையான பொருள்களை சீரான முறையில் கப்பல்கள் மூலம் தருவிப்பது போன்று, இங்குள்ள பொருள்களையும் வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். ஆனால் அதற்கான நடவடிக்கைகள் முழுமூச்சில் எந்தத் தரப்பினரும் ஈடுபடுவதாகத் தெரியவில்லை.


குடாநாட்டு விவசாயிகளின் இடர் நிலையைக் கருத்திற்கொண்டு அவர்களின் உற்பத்திப் பொருள்களை தென்னிலங்கைக்கு அனுப்பி வைத்து வருகின்றோம். அவ்வாறு அனுப்பி வைக்கப்

ஆனால் மா, திராட்சை போன்ற பழவகைகளோ வசதியீனங்கள் நிறைந்த யாழ்-கொழும்பு சரக்கு விநியோகத்தில் ஈடுபடுகின்ற கப்பல்களில் ஏற்றப்பட்டு அடுத்த நாளே பாவனைக்கு உதவாதவையாக



மாறிவிடுகின்றன. பதப்படுத்தப்ப டாத கடலுணவுகளுக்கும் இதே கதி தான்! இதனைத் தெரிந்து கொண்டும் எதற்காகக் கையைச் சுட்டுக் கொள்ள வேண்டும்? என்ற நோக்கில் உள்ளூர் விளை பொருள்களை ஏற்றுமதி செய்வ தைத் தவிர்த்து

யப்படுகின்ற அப்பிள், ஒரேஞ் போன்ற பழங்களின் விலை ஏறிக்கொண்டே போக, உள்ளூர் பழங்களின் விலை கள் சடுதியாகச் சரிவ டைந்து கொண்டே செல்கின்றன. ஆனால் தென்னிலங்கையில் பெரும் வரவேற்பைப் பெற்ற யாழ்ப்



பாணத்து பழங்களை ஏற்றுமதி செய்தால் இவ்வாறான 'தளம் பல் நிலை' உள்ளூர் உற்பத்திகளின் பெறு மதியில் தோன்றியிருக்காது. உற்பத்தி யாளர்களும் இலாபமடையமுடியும்.

வேறு தொழில்களை

# இயற்கையின் சோதனைகளுக்கு ஈடுகொடுத்து கிடைக்கும் விளைபொருள்களும் நாசமாகும் மோசநிலை

ணமாக பல தொழில்துறைகள் வீழ்ச்சியை நோக்கி விரைந்து கொண்டிருக் கின்றன. அவற்றுள் அடிமேல் அடிவாங்கிக் கொண்டிருப்பது விவசாயத்துறையேயாகும். உயர்பாதுகாப்பு வலயங்கள், பெருகி வரும் கட்டட நிர்மாணிப்புப் பணிகள் என்பன காரணமாக யாழ்.குடாநாட்டின் 1/3 பகுதி விவசாய நிலப்பரப்புக் கள் தமது பயன்பாட்டினை இழந்திருப்ப தாக ஆய்வறிக்கைகள் கூறுகின்றன. எஞ்சிய பகுதிகளும் பூரணமாக விவசாயத் துக்குப் பயன்படுத்தப்படவில்லை. உயிர்ப் பயம் காரணமாகவும், வாழ்க்கைத் தகைமை விருத்தி செய்வதற்காகவும் குடாநாட்டின் இளை ஞர்களெல்லோரும் வெளிநாடுகளுக்குப் பறந்தோடிக் கொண்டு இருக் கின்றார் கள்.

### விவசாயம் இப்போது இளைஞர்களுக்கு கேவலமான தொழிலாகிவிட்டது

இதனால் பல இடங்களில் போதிய ளவு விவசாய நிலப்பரப்புகள் இருந்தும், அதில் செய்கையை மேற்கொள்வதற்கான ஆளணி வளமும் குறைந்தளவிலேயே காணப்படுவதனால் பெரும்பாலான விவசாயக் காணிகள் பற்றைகள் படர்ந்து தரிசு நிலங்களாக மாறிக் கொண்டு வருகின்றன. இதை விட குடாநாட்டில் வசிக்கின்ற ஏனையோரிடத்தேயும், விவசாயம் மீதான ஆர்வம் அற்றுப் போய்வருகின்றது. அரச, தனியார் அலுவலகங்களில் கூலி வேலை செய்வதைக்கூடப் பெருமையாகக் கருதும் இவர்கள், தமது சொந்தக் காலில் நின்று தொழில் செய்து எல்லோரும் சோற் றினை அளிக்கின்ற விவசாயத்தைக் கேவலமான தொழிலாகக் கருதும் மனோபாவமே பெரும்பாலான இளைஞர்களிடத்தே ஊறிப்போய்க் கிடக்கின்றது.

இதனையும் மீறி குடாநாட்டின் விவசாயத்துறையை உயர்ப்பூட்டி வருகின்ற விவசாயிகள் எதிர்கொள்கின்ற இடர்கள் கொஞ்ச நஞ்சமல்ல. விதைபொருள்கள், உரவகைவகைகள், கிருமி நாசினிகள், விவசாய உபகரணங்கள் என்பவற்றை தரைவழி மார்க்கமில்லாத குடாநாட்டில் பெற்றுக்கொள்வதென்பது குதிரைக் கொம்பாகவே இருந்து வருகின்றது. அப்படியே அவை கிடைப்பதாக இருந்தாலும் அவற்றின் விலையைக் கேட்டவுடனேயே தலை கிறுகிறுக்கத் தொடங்கிவிடும். அந்தளவிற்கு அதியுச்சப் பெறுமதியினை இந்தப்பொருள்களுக்குச் செலுத்த வேண்டியுள்ளது. இதனைவிட விவசாயத்திற்குத் தேவையான நீர்ப்பாசனமும் விவசாயிகளைப் பாடாய் படுத்தி வருகின்றது. பருவம் தவறிப் பொழிகின்ற மழை, புவி வெப்பமடைதல் காரணமாய் வற்றிக் கொண்டே செல்கின்ற கிணறுக்கள், ஏறிக்கொண்டே செல்கின்ற எரி

படும் பொருள்களின் அளவை காலப் போக்கில் அதிகரிப்போம்'' என்று அண்மையில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி தெரிவித்திருக்கிறார். அவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமானால் ஓரளவுக் கேனும் விவசாயப் பொருள்கள் தேக்கமடை வது தவிர்க்கப் பட்டு, பொருளாதார ரீதியிலும் முன்னேற்ற நிலை ஏற்படலாம்.

குடாநாட்டு வர்த்தகர்கள் அப்பிள், ஒரேஞ், அன்னாசி என்பவற்றைக் கப்பல் கப்பலாய் இறக்கி அதிக விலையில் விற்பனை செய்து வருகின்றார்களே தவிர, குடாநாட்டில் உற்பத்திச் செலவைக் காட்டிலும், மிகக் குறைவான விலைக்கு - அடிமாட்டு விலைக்கு- விற்பனையாகிக் கொண்டிருக்கும் திராட்சை, மாம்பழம், வெங்காயம் என்பவற்றைக் கொள்வனவு செய்து, கொழும்பில் விற்பனை செய்யத் தயக்கம் காட்டியே வருகின்ற னர்.



அதற்கும் காரணம் இல்லாமலில்லை. கொழும்பிலிருந்து இறக்குமதி செய்யப் படுகின்ற பொருள் கள் கப்பலில் கொண்டு வரக்கூடிய மாதிரிப் பதப்படுத்தப்பட்டவையாக வும், நவீன முறையில் பொதி

வருகின்றார்கள் குடாநாட்டு வர்த்தகர் கள்.

இதுதவிர கப்பல் பிரயாணத்துக்கு ஓரளவு ஒத்துழைக்கக் கூடியதும், தண்ணீர் பட்டால் மாத்திரமே பழுதாகக் கூடியதுமான புகையிலை, பனம்பொருள்கள் போன்றவற்றையும் தென்னிலங்கைக்கு அனுப்பி வைக்க முடியாதுள்ளது. ஏனெனில் இவற்றை அனுப்பி வைப் பதற்கும் பெருந் தொகைப் பணத்தைத் தண்ணீரா கச் செலவிட வேண்டி யுள்ளது.

ஒரு பண்டல் புகையிலையை (ஒரு பண்டலில் 1000 புகையிலைகள்) அனுப்பி வைப்பதற்கு 3,000 ரூபாவும் ஒரு மெற்றிக் தொன் வெங்காயத்துக்கு 6,500 ரூபாவும் அறவிடப்படுகின்றன. ஏற்க னவே பெருமளவு பணத்திற்கு பொருள் களைக் கொள்வனவு செய்து விட்டு, இவ்வா றான கரணம் தப்பினால் மரணம் என்கிற வர்த்தக விளையாட் டில் ஈடு பட யாழ். குடாநாட்டு வர்த்தகர் கள் தயங்குவதிலும் நியாயமிருப்பது போலவே தோன்றுகின்றது.

ஏற்றுமதியின் அளவு வீழ்ச்சியடைந்ததால், அமோக விளைச்சலைப் பெற்றாலும் நஷ்டத்திலேயே உழன்று, குத்து

### நாட வேண்டிய நிர்ப்பந்தம்

விவசாயிகளின் கையைக் கடிப்பதையே முழுநேரத் தொழிலாக விவசாயம் கொண்டிருப்பதனால் பல விவசாயிகள் வேறு தொழில்களை நாடிச்செல்ல முனை கின்றனர். சில விவசாயிகள் ஒரு காலத்தில் பணப்பயிர்கள் எனக் கருதப்பட்ட பயிர் வகைகளைச் செய்கை பண்ணுவதைக் கைவிட்டு, முழுமையான விவசாயப் பயிர்களையே பயிரிடத் தொடங்கியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் உள்ள உரும்பிராய் பிரதேசத்தில் காலங்காலமாய் திராட்சை செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்த பல விவசாய நிலங்களில் இப்போது பாகல் கொடிகளும், புடோல் கொடிகளுமே படரத் தொடங்கியுள்ளன.

குடாநாட்டுப் பொருள்கள் ஏற்றுமதிக் காகத் தவங்கிடக்க, கொழும்பிலிருந்து பொருள்களை இறக்கி விட்டுச் செல்லும் கப்பல்கள் எல்லாமே வெறுமையாகவே திருப்பிச் செல்கின்றன என்பதுதான் வேடிக்கையான விடயம்.

இலங்கை அரசும் அரச அதிகாரிகளும் உண்மையிலேயே, யாழ்.உற்பத்தியாளர்களுக்கு உதவ வேண்டும் என்ற இதய சுத்தியோடு செயற்பட்டால், இவ்வாறு வெறுமையாகச் செல்லும் கப்பல்களில் குடாநாட்டின் உற்பதிப் பொருள்களை -மனம்வைத்தால்-இலவசமாகவே அனுப்பி

# அதிகாரிகள் விழித்தால் வழி ஒன்று பிறக்கும்

செய்யப்பட்ட வையாகவும், இலகுவில் பழுதடையாத வையாகவும் காணப்படுகின்றன. ஆனால் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களில் விவசாயப் பொருள்களாக இருந்தாலும் சரி, கடலுணவுப் பொருள்களாக இருந்தாலும் சரி அவை யெல்லாம் மேற்குறித்த தன்மைகளைக் கொண்டிருப்பதில்லை.

சென்றவருடம் விவசாயிகளிடம் பெருந்தொகையான வெங்காயத்தைக் கொள்வனவு செய்து கொழும்புக்குக் கொண்டு சென்றார் வர்த்தகர் ஒருவர். ஆனால் கப்பல் கொழும்பைச் சென்றடைந்தபின் பார்த்தால், கொண்டு செல்லப்பட்ட வெங்காயம் அத்தனையும் அழுகிப் போயிருந்தது. அதனால் ஏற்பட்ட நஷ்டத்தினால், - சூடுகண்ட பூனைபோல- குடாநாட்டுப் பொருள்களைக் கொள்வனவு செய்து ''ஏற்றுமதி'' செய்வதையே நிறுத்தி விட்டார் அந்த வர்த்தகர்.

வெங்காயமாவது கப்பல் பிரயாணத்தை ஓரிரண்டு நாள்கள் தாக்குப் பிடிக்கும்.

விளக்கில்தான் குடாநாட்டு உற்பத்தியாளர்கள் இன் னமும் கணக்குப் பார்த் துக் கொண்டிருக்கின் றார்கள். முன்னெரெல்லாம் அறுவடை பெருக வேண்டும் முன்னரைக் காட்டிலும் பலமடங்கு லாபம் கிடைக்க வேண்டும் என்றுதான் விவசாயிகள் சிந்திப்பார்கள். இப்போது லாபம் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. போட்ட முதல் திரும்பக் கிடைத்தாலே போதும் என்ற ரீதியில் எண்ணத் தலைப் பட்டுள்ளனர். ஏனெனில் ஒவ்வொரு விளைபொருளுக்குமான பருவகாலங்களில் மிதமிஞ்சியளவு அதன் அறுவடை இருக்கும். உதாரணமாக இப்போது மாம்பழம்,திராட்சை என்பவற்றின் 'சீசன்' நடக்கிறது. அதனால் பார்க்கு மிடமெல்லாம் மாம்பழ வாசனையும், திராட்சைப் பழக் குவியல்களும் எல்லோரையும் சுண்டியிழுத்து வருகின்றன. இவை பருவகால ஆரம்பத்தில் விற்கப்பட்ட விலையை விட தற்போது விற்கப்படுகின்ற விலை [illegible] விசித்திர தன்மையான தாகவே [illegible]. இறக் குமதி செய்

வைக்க முடியும். அல்லது மிகக் குறைந்த கட்டணத்திலாவது அனுப்பி வைப்பதற்கான ஒழுங்குகளைச் செய்ய லாம். அப்படி நிகழ்ந்தால் சிறு முதலீட்டா ளர்கள் ஓரளவுக்கேனும் உள்ளூர் விளை பொருள்களைக் கொள்வனவு செய்து தென்னிலங்கைக்கு அனுப்பி வைக்க முன்வரு வார்கள்.

அத்தோடு குளிரூட்டி வசதிகள் கொண்ட

**- ஓவியன் -**

நவீனமாக சரக்குக்கப்பல்களை, பழங்கள் இலகுவில் பழுதடையக் கூடிய தன்மை கொண்ட பொருள்களை ஏற்று மதி செய்வதற்காக பணியிலமர்த்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென யாழ்.மாவட்ட உற்பத்தியாளர்கள் எதிர் பார்க்கின்றனர்.

உற்பத்தியாளர்களின் துயரங்களை இத்தனைநாளும் கண்டும் காணாதது போல் காலத்தை ''ஓட்டும்'' அதிகாரிகள் இனியாவது விழித்தெழுவார்களா? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நிகழ்வுகள்

நல்லூர்,ஒக்.19

நயினாதீவு மணிபல்லவ கலாமன்ற நிறுவுனர் அமரர் க.க. சந்திரனின் அஞ்சலிக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நயினாதீவு மணிபல்லவ கலாமன்றத்தின் ஆதரவில் இடம் பெறும் இந்த நிகழ்வுக்கு யாழ்.இந்துக் கல்லூரி முதல்வர் வி.கணேசராசா தலைமை வகிப்பார். (202-111)

* * *

சுழிபுரம், ஒக்.19

சுழிபுரம் மேற்கு பாரதி கலைமன்றம் நடத்தும் பாரதி முன் பள்ளிச்சிறார்களினதும், பழைய மாணவர்களி னதும் கலை விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சுழிபுரம் மேற்கு ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலய அருகில் நடைபெறவுள்ளன.

திருமதி ஜெ.சுதாகரன் தலைமை யில் நடைபெறும் இந்த விழாவில், சுழிபுரம் பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி பிரதம விருந்தினராகவும், வலிமேற்கு பிரதேசசபை சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஞானவேல்ராசா, சுழிபுரம் மேற்கு கிராம அலுவலர் ஆர்.சிறீரஞ்சன், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர் திருமதி ஸ்ரீ.கண்ணதாசன், சுழிபுரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.தவேதன், சுழிபுரம் சமுர்த்தி உத்தியோகத்தர் அ.சிவானந்தன், வலி.மேற்கு முன்பள்ளிகள் இணைப்பாளர் செல்வி நா.நிரஞ்சனா, சுழிபுரம் மேற்கு ஸ்ரீகணேச சனசமூக நிலையச் செயலாளர் ஞா.விமல்ராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (28-204)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.19

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனின் சமூகப்பணி நயத்தல் நிகழ்வு நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் உள்ள குணராசாவின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. (204)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தவராசா - ஜெயாநிதி தம்பதியரின்
செல்வப் புதல்வனும்
யா/குட்டியப்புலம் அ.த.க.
பாடசாலை மாணவனுமாகிய
**செல்வன் த.கிருசாந்**
2008ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்
பரிசில் பரீட்சையில் 134 புள்ளிகள்
பெற்றுச் சித்தியடைந்தமைக்காகப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
அப்பப்பா, அம்மம்மா, அப்பா, அம்மா, மாமா, அத்தை, சின்னமாமா.
குட்டியப்புலம், வயாவிளான். (79338)

## தீபத்திருநாளை முன்னிட்டு அதிரடி விலைக் கழிவில்

அதிநவீன கையடக்கத் தொலைபேசிகள்
உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள

கையடக்கத் தொலைபேசி உதிரிப்பாகங்கள்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ளலாம்

Kit card களை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்

**K.K. PHONE SERVICE**
**NO.1, MODERN MARKET,**
**JAFFNA.**

## பிரத்தியேக வகுப்பு - ஆங்கிலம்

மாணவர்கள், அலுவலர்கள் ஆகிய ஆண், பெண் இருபாலாருக்கும் ஆங்கில இலக்கணம் மற்றும் கதைக்க, வாசிக்க தனிப்பட்ட முறையில் வகுப்புக்கள் எடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
A.அமிர்தவர்ஷினி
0774611367 (79333)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

நிறைகூடிய தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள், முட்டை என்பன விற்பனைக்குண்டு. மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

**செம்மணி பாம்**
77/3, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு. (79326)

## தேவை

"லண்டன் மெடிக்" (பாமசி)
மருந்தகத்துக்கு மருந்தாளர் உடன்
தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்.
இல.56, மணிக்கூட்டுக் கோபுரவீதி,
யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரிக்கு முன்பாக)
T.P: 021 222 2960 (79327)

## ஐங்கரன் திருமண சேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் USA கனடா, லண்டன், ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, டென்மார்க், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் PR உள்ள மணமகன்மார் உள்ளனர். எல்லா வயதுகளிலும் உள்ளனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு.

லண்டன் தொடர்பு:
0044 7535 384166
0044 7961139759
0044 7502340714
Fax No: - 00442086810707 (79328)

## காணி விற்பனைக்கு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள், பிரதான வீதியில் புதிய நீதிமன்றத்திற்கு முன்பாக 4 பரப்புக் காணி தண்ணீர் வசதியுடன் விற்பனைக்குண்டு. மேலும் பாங்சால் வீதி தொடர்புடன் மூன்றாம் குறுக்குத் தெருவில் 4½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- நவலிங்கம் - 0779522521, 0776111419,
அல்லது
றெகான் கச்சேரியடி- 0776589415, 021 222 2426 (79335)

## மரண அறிவித்தல்

### திருமதி லீலாவதி கணேஷன்



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லீலாவதி கணேஷன் 18.10.2008 சனிக்கிழமை வட்டுக்கோட்டையில் அமரத்துவமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா செல்லையா கணேஷனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகேசு-பகவதிபிள்ளை தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - விசாலாட்சி தம்பதியரின் அருமை மருமகளும் அன்ரன் செல்வஜோதி கணேஷன் (London) டோனி பாக்கியஜோதி கணேஷன்(பரியோவான் கல்லூரி), ஜெயஜோதி கணேஷ (யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தாயும் பாம (London), இந்திராணி (யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அருமை மாமியும் டிரினா (London), தரளன் (London), ஷர்மினி (உலக உணவுத் திட்டம்) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் சரஸ்வதி இரத்தினராசா (அமெரிக்கா), காலஞ்சென்ற இராசலட்சுமி குணசெக்கரா Sister மேரி லூசி, காலஞ்சென்ற முத்துக்குமாரு, முருகேசு, இரத்தினவதி ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற மகேஸ்வரன் காலஞ்சென்ற தர்மதாசன், தர்மவதி, தேவராணி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.10.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு வழுக்கையாறு மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வட்டுக்கோட்டை. (79340) டோனி பா.கணேஷன்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் நாகநாதர் ஆறுமுகம் நமசிவாயம்

(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர், பரீட்சைத் திணைக்களம், கொழும்பு, தீவுத்தொகுதி ப.நோ.கூ. சங்கங்களின் முன்னாள் உத்தியோக பற்றற்ற மேற்பார்வை அதிகாரியும் புங்குடுதீவு திடீர் மரணவிசாரணை அதிகாரியும் சமாதான நீதிவானும்)

மலர்வு
18-03-1927

உதிர்வு
19-09-2008



விதையிட்டுக் காத்தீரே விருட்சமாகும் வரை...
விருட்சங்கள் தழைத்தபோது விலகிப் போனீரே..
நெடிய முழக்கமென்ன கம்பீரப் பேச்சும்
எது நடப்பினும் தளராத மனமும்
காண்பது எப்போ அறியோமே..
பிள்ளைகள் ஐந்தையும் தலைநிமிரச் செய்தீர்
மூன்றொடு பத்தாம் பேரரையும் கண்டீர்
செவ்வனே பிள்ளைகளை வளர்த்தீர் - இறுதிவரை
மூன்று பேரப்பிள்ளைகளையும் வளர்த்தீர்

புங்குடுதீவில் வீசிய உங்கள் காற்று...
அறியாதோர் மனதில் கூட ஆக்கியது
தலைமகனாய்
ஊரை மறவாது மூத்தோனோடு வாசம் செய்தீர்
எமது உள்ளங்கள் உம்மை மறவாது
அன்பே சிவம் என்றாராம் மூலர்
அன்பே உருவமாய் வாழ்ந்து காட்டினீர்...
சிவத்துள் வாழ்ந்திட பிரார்த்தித்து நிற்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மரணச்செய்தி அறிந்து நேரில் வந்து துயர் பகிர்ந்தோருக்கும் தொலைபேசி, தந்தி ஊடாகவும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (19.10.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

…க்குவில் கிழக்கு. (79336) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலக்கெடு முடிந்ததும்

உணர்வெழுச்சிச் சீற்றத்தில் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியும், அவர் கூட்டிய சர்வகட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஏனைய கட்சியினரும் இந்திய மத்திய அரசுக்குக் காலக்கெடு விதித்து ஒரு தீர்மானத்தை எடுத்து, அந்த வேகத்திலேயே அறிவித்தும் விட்டார்கள். இனி என்னாகப்போகின்றது என்பதுதான் கேள்வி.

இந்தத் தீர்மானத்தை வைத்தே தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியையும், அவர் கூட்டிய மாநாட்டில் கலந்து கொண்டவர்களையும் பிய்த்து உதறப் போகின்றன ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.கவும், இவ்விடயத்தில் - சர்வகட்சி மாநாட்டு விவகாரத்தில் - கலைஞருடன் இணங்கி வராத ம.தி.மு.க., பாரதீய ஜனதா கட்சி போன்றவையும்.

கலைஞர் கூட்டிய சர்வகட்சி மாநாட்டில், உணர்ச்சிப் பெருக்கில் எடுக்கப்பட்ட முடிவுகள் ஈழத் தமிழர்களின் - ஏன் உலகத் தமிழர்களின் - நலனைப் பொறுத்தவரை உத்தமமானவைதான்.

ஆனால், காலக்கெடு குறிப்பிட்டு, தமது எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாவிட்டால், தமிழக எம்.பிக்கள் அனைவரும் கூண்டோடு இராஜிநாமா என்று அறிவித்தமைதான் தமிழக எதிரணிக்கு வாய்ப்பாகப் போய்விட்டிருக்கிறது.


அதுவும் காலக்கெடு நீண்டதல்ல. அதிக காலம் காத்திருக்கத் தேவையில்லை. ஆக, இரண்டே இரண்டு வாரம். அது முடிய, தங்கள் கைவரிசையைக் காட்டலாம் என்று உஷாராகி - முன் ஆயத்தங்கள், தயாரிப்புகளோடு - காத்திருக்கின்றன எதிரணிகள்.

இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசப் படைகள் கட்டவிழ்த்து விட்டிருக்கும் கொடூர யுத்தத்தை உடனடியாக நிறுத்துவதற்கு இந்திய மத்திய அரசு காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் தமிழக எம்.பிக்கள் தமது பதவிகளை இராஜிநாமாச் செய்வர் - இதுதான் நிபந்தனை.

மன்மோகன் சிங்கைப் போன்ற - அதிரடி அரசியல் முடிவுகளை எடுக்கும் முதுகெலும்பில்லாத - 'சமாளிப்பு' ரக - தலைவர் ஒருவரைப் பிரதமராக வைத்துக் கொண்டு, இரு வார கால அவகாசத்துக்குள் இலங்கையில் யுத்தத்தை நிறுத்துவதற்குக் காத்திரமான நடவடிக்கை எடுங்கள் என்று நிபந்தனை விதித்து, அதனடிப்படையில் அறிவிப்பு விடுத்த கலைஞர் தரப்பின் எத்தனம் புத்திசாலித்தனமானதல்ல.

அதற்குப் பல காரணங்கள் உள்ளன.

ஒன்று - நாம் முன்னர் குறிப்பிட்டமை போல பிரதமர் மன்மோகன் சிங்கோ அல்லது அவரது அரசின் தலைவர்களோ அண்டை நாடுகள் விவகாரத்தில்



அதிரடி நடவடிக்கைகளை எடுப்பதற்கான துணிச்சல் கொண்டவர்கள் அல்லர்.

அடுத்தது - இலங்கைக்கு இதுவரை இராணுவத் தளபாட மற்றும் படைப் பயிற்சி உதவிகளை இந்தியா வழங்கிவந்தது என்றால், அதன் உட்பொருள் இலங்கை மீது இந்தியா ஆதிக்கம் - செல்வாக்கு - செலுத்துவதின் விளைவே அது என்பதல்ல. அப்படி உதவிகளை வழங்கியாவது - தாஜா செய்தாவது - இலங்கை மீது செல்வாக்குச் செலுத்தும் ஓர் அதிகாரத்தை நாம் கொண்டிருக்க முடியாதா என்ற புதுடில்லியின் ஆதங்கத்தின் - நப்பாசையின் -



விளைவே அது.

மூன்றாவது - இலங்கை இனப் பிரச்சினை தொடர்பான விடயத்தில் இராணுவ வெறித்தனத்தோடு, யுத்தத் தீவிரத்தோடு, தமிழர் தாயகம் மீது போரைத் தொடுக்கும் உறுதியில் நிற்கிறது மஹிந்த அரசு. அது, யுத்தத்தை நிறுத்துமாறு புதுடில்லி விடுக்கக் கூடிய 'அன்பு' வேண்டுகோளுக்கோ அல்லது இராஜதந்திர அழுத்தத்துக்கோ அடிபணியும் இரண்டும் கெட்டான் நிலையில் இல்லை என்பது உறுதி. எந்த அழுத்தம், எத்தரப்பிடமிருந்து வந்தாலும் அதனை உதாசீனம் செய்து, புறக்கணித்து, நிராகரித்து விட்டு, வன்னியை முற்றாக ஆக்கிரமித்தே தீருவது என்று யுத்த சந்நதத்தில்

## அதிரடி அரங்கு

நிற்கிறது கொழும்பு. மன்மோகன் சிங் போன்ற - மென்மையான இராஜதந்திர வார்த்தைகள் மூலம் அழுத்தமான காய் நகர்த்தல்களை மேற்கொள்ளும் - இராஜதந்திரிகளின் முயற்சிகளுக்கு போர் வெறி கொண்டலையும் மஹிந்தர் அரசு மசியாது என்பதும், அதையும் தாண்டி சாம, பேத, தான, தண்டம் என்ற நால்வகை எத்தனங்களையும் தேவைப்படும்போது உசிதமாகப் பயன்படுத்தி மஹிந்தர் அரசை மடக்கிப் பணிய வைக்கும் தந்திரோபாயமோ, அதிகாரவலுவோ, துணிச்சலோ, அரசியல் தற்றுணிபுத் தைரியமோ கொண்டதல்ல மன்மோகன் சிங்கின் இந்தக் கூட்டரசு என்பதும் வெளிப்படை.

இந்தப் பின்புலத்தில்தான், இலங்கையில் இரண்டு வாரங்களுக்குள் யுத்தத்தை நிறுத்தாவிட்டால் கூண்டோடு எம்.பி. பதவிகளை இராஜிநாமாச் செய்வோம் என்ற நிபந்தனையை விதித்திருக்கின்றது கருணாநிதி தலைமையிலான அனைத்துக் கட்சி மாநாடு.

இந்தத் தீர்மாணம் வெளியானதுமே தனது 'இரண்டும் கெட்டான்' நிலைப்பாட்டை ... விட்டது ஆளும் ...

இலங்கைத் தமிழர் விவகாரத்தை ஒட்டித் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் சிரத்தையை - கவலையை - உள்வாங்கிச் சமாளிக்கும் விதத்தில் பிரதமர் மன்மோகன் சிங் கருத்து வெளியிட்ட போதிலும் -

இந்தியாவின் ஆளும் காங்கிரஸ் கட்சியின் பேச்சாளர் அத்தகைய நிலைப்பாட்டை எடுக்கவில்லை. அவர் வெளிவெளியாகப் பேசி தங்களின் கருத்தை வெளிப்படுத்திவிட்டார்.

தமிழக முதல்வர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் தமிழகத் தலைவர்களும் கலந்து கொண்டார்கள். அவர்களின் இணக்கத்துடன்தான் ஆளும் காங்கிரஸ் கட்சிக்கு இரண்டு வார காலக்கெடு கொடுக்கும் தீர்மானம் அங்கு நிறைவேற்றப்பட்டது.

ஆனால், அந்தக் காலக்கெடுவுக்குள் தமிழக அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட விடயம் எதுவும் செயலுருப் பெற சந்தர்ப்பம் இல்லை என்பதை அடுத்த நாளே காங்கிரஸின் பேச்சாளர் உறுதிப்படுத்திவிட்டார்.

''இந்தியாவின் இறைமை அதன் எல்லைக்குள் அடங்கி விடும். அதற்கு வெளியே இந்தியாவுக்கு இறைமை இல்லை. இலங்கையில் யுத்தத்தைத் தொடர்வதும் நிறுத்துவதும் இலங்கை அரசின் இறைமைக்கு உட்பட்ட விடயம். அதில் இந்தியா நேரடியாகத் தலையிட முடியாது.'' - இப்படியெல்லாம் இந்தியாவின் ஆளும் கூட்டமைப்பின் பிரதான கட்சியான காங்கிரஸ் சார்பில் அதன் பேச்சாளர் கூறியிருக்கின்றார்.

இது, தமிழக அரசு கூட்டிய சர்வகட்சி மாநாட்டின் தீர்மானத்தை இந்திய மத்திய அரசு எவ்வளவு தூரம் மதிப்புக் கொடுத்து, அந்தக் கோரிக்கைக்கு செவிசாய்த்து நடவடிக்கை எடுக்கும் என்பது குறித்து முடிவெடுக்க நல்ல சான்றாக அமைகிறது.

இந்த சர்வ கட்சி மாநாட்டில் காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர்கள் கலந்து கொண்டார்கள். அவர்களின் சம்மதத்துடனேயே மேற்படி மாநாட்டின் முடிவு எடுக்கப்பட்டது என்றெல்லாம் கூறப்பட்டாலும் -

அந்தத் தீர்மானத்துக்கு ஆளும் காங்கிரஸ் கட்சி முழு உடன்பாடு கொண்டுள்ளது என்பது ஏற்றுக் கொள்ளதக்கதல்ல.

ஏற்கனவே, தமிழகத்தில் காங்கிரஸின் முக்கிய புள்ளி என்று கருதப்படும் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் சர்வ கட்சி மாநாட்டின் தீர்மானம் பயங்காரவாதிகளான புலிகளுக்குத் துணை போகும் தவறான நடவடிக்கை என விமர்சித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த மாதம் முடியும்போது இலங்கையில் யுத்தத்தை நிறுத்துவதற்கான காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்திய மத்திய அரசுக்கு தமிழக அனைத்துக் கட்சிக் கூட்டம் கொடுத்த காலக்கெடு முடிந்து போய்விடும்.

ஆனால், அதற்கு இடையில், யுத்த வெறி கொண்டலையும் இலங்கையின்

# கலைஞர் கதி என்னாகும்?

மஹிந்தர் அரசை, அந்த நடவடிக்கையிலிருந்து விலகச் செய்வதோ அல்லது அது தொடர்பாக மத்திய அரசு காத்திரமான நடவடிக்கைகளை எடுத்து, அப்படித் தான் நடவடிக்கை எடுத்தமையை நிரூபிப்பதோ துர்பலம்.

இச்சூழலில், தான் நிபந்தனையாக அறிவித்தபடி, தமிழகத்தின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பதவி விலகச் செய்ய வேண்டிய கட்டாயம் கலைஞருக்கு ஏற்படும்.

அப்போது இலங்கைத் தமிழர் தாயகத்தில் யுத்த களம் அகோர சூடு பிடித்திருப்பது போல -

தமிழக அரசியல் களமும் நல்ல சூடு பிடிக்கும் என எதிர்பார்க்கலாம். *

## 1200 பேர் கொண்ட போர்த்துக்கீசப் படை 1560 ஆம் ஆண்டு யாழ்.சிறுத்தீவில் தரை இறங்கியது

**இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

1560 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இந்தியாவின் கோவாவிலிருந்து ஏழு போர்க்கப்பல்களுடனும் 92 மரக்கலங்களுடனும் 1200 பேர் கொண்ட படையுடன போர்த்துக் கீசப்படைகள் 'கொன்ஸ்தாந்தி றூடீ பிறகன்சா' என்ற போர்த்துக்கீசத் தளபதியின் தலைமையில் யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்பட்டன.

ஒக்ரோபர் மாதம் சிறுத்தீவில் தரையிறங்கிய போர்த்துக்கீசப் படைகள் பண்ணைப் பக்கமாக முன்னேறின. சங்கிலியின் மகனான சேது 2000 பேர் கொண்ட படையுடன் போர்த்துக்கீசப் படைகளை எதிர்கொண்டான். போர்த்துக்கீசப் படைகள் குண்டுமாரி பொழிந்தவாறு சேதுவின் படையைப் பின்வாங்கச் செய்து தரையிறங்கின.

### சங்கிலி மன்னனின் மகன் சேது 2000 படையுடன் எதிர்த்தான்

தரையிறங்கிய போர்த்துக்கீசப் படைகள் நல்லூரை நோக்கி முன்னேறின. நல்லூரில் போர்த்துக்கீசப்படைகளுக்கும், தமிழ்ப்படைகளுக்கும் இடையே கடும் யுத்தம் மூண்டது. உக்கிரச்சமரின் பின் தமிழ்ப்படைகள் நல்லூரிலிருந்த கோட்டைக்குள் புகுந்தன. கோட்டை தவிர்ந்த பிற பகுதிகள் போர்த்துக்கீசர் வசமாகின. இரண்டாம் நாள் போர்த்துக்கீசப் படைகள் நல்லூரிலிருந்த சங்கிலியின் கோட்டையைக் கைப்பற்றின. சங்கிலி கோட்டைக்கு நெருப்பு வைத்துவிட்டுக் ... கோட்டைக்குத் தப்பிச் சென்றான்.

- தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J.C.Medical Clinic

Main Street Maruthady, Point Pedro

## ஜே.சி.மெடிக்கல் கிளினிக்

(ஆங்கில வைத்தியசாலை)

பிரதான வீதி (C.T.B Depot முன்பாக) மருதடி, பருத்தித்துறை

## திறப்பு விழா அழைப்பு

**காலம்:**

சர்வதாரி வருடம் ஐப்பசி மாதம் 3ஆம் நாள் (19.10.2008) ஞாயிற்றுக்கிழமை

**நேரம்:**

காலை 09.02 முதல் 10.32 வரையுள்ள சுபவேளையில்

**இடம்:**

பிரதான வீதி மருதடி, பருத்தித்துறை.

உயர்திரு.இ.வரதீஸ்வரன்
(பிரதேச செயலர், வடமராட்சி வடக்கு)
அவர்கள் திறந்து வைப்பார்கள்.

இவ்விழாவிற்கு அன்பர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஜே.சி.மெடிக்கல் கிளினிக்
நிர்வாகத்தினர்.

(சி/555499)

தேசிய சேமிப்பு வங்கி
பருத்தித்துறை கிளை.

ஹற்றன் நஷனல் வங்கி
நெல்லியடி.

சிதம்பரப்பிள்ளை புத்தகநிலையம்,
நெல்லியடி, கரவெட்டி.


## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.19

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி நடத்தும் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கே.ஆர்.ராஜசேகரம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகவும், லயன் டாக்டர் வி.தியாகராஜா சிறப்பு விருந்தினராகவும், மக்கள் வங்கிக் கன்னாதிட்டிக் கிளை முகாமையாளர் எஸ்.சிவபாலன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (204)

## முழு இரவு ஜெபம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ்ப்பாணம், மானிப்பாயில் அமைந்துள்ள அசெம்பிளி ஒப் கோட் சபைகள் இணைந்து நடத்தும், நாட்டிற்காக ஜெபிக்கும் முழு இரவு ஜெபம் எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 6 மணி தொடக்கம் காலை 6 மணி வரை மானிப்பாய் சர்வதேச பாடசாலையில் நடைபெறவுள்ளது.

(204)

## சிறுவர், முதியோர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.19

வேலணைப் பிரதேச செயலகப் பிரிவினர் நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீவுகள் தெற்கு வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகவும், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பு.ஆ.இராதாகிருஷ்ணன், யாழ்.கரிதாஸ் கியுடெக் சிறுவர் திட்ட முகாமையாளர் கே.அஜந்தன், வேலணைப் பிரதேச வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ஆ.திருநாவுக்கரசு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

(204)


## நன்றி கூறுகின்றோம்



ஹாட்லிக் கல்லூரி மாணவனும்
எனது மகனுமான
செல்வன் ராஜகுலேந்திரன் நிலோஜன்
அவர்களின் இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்து உடனடியாக மாற்றவேண்டிய நிர்ப்பந்தம் நேரிட்டவேளை எம்மீது கருணைகொண்டு நிதி உதவி உட்பட சகலவித உதவிகளையும் செய்த கருணை உள்ளங்களால் என் மகனின் சத்திர சிகிச்சை வெற்றிகரமாக முடிவடைந்தது.

குறிப்பாக எனது வேண்டுகோளுக்கு உடனடியாகச் செவிசாய்த்து ஒரு பெருந்தொகையான பணத்தை 'த பினான்ஸ்' நிறுவனம் வழங்கி உதவியது. இதற்குக் காரணமாயிருந்த இந்நிறுவனத்தின் திருகோணமலைக் கிளை முகாமையாளர் Rtn ஜெய்சங்கர், யாழ்.கிளை முகாமையாளர் திரு.ரகுநாதன் அவர்களுக்கும் மற்றும் நெல்லியடிக் கிளை முகாமையாளருக்கும் 'த பினான்ஸ்' நிறுவனத் தலைமையகத்துக்கும் வார்த்தைகளால் வடிக்க முடியாத நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திரு.சி.ராஜகுலேந்திரன்
திருமதி ரா.தேவிகா (பெற்றோர்).

பருத்தித்துறை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2008ஆம் ஆண்டு புத்தாக்க ஆணைக்குழுவினால் ஆசிரியர்கள்,பல்கலைக்கழக மாணவர்களிடையே நடத்தப்பட்ட மாவட்ட மட்ட புத்தாக்கக் கண்காட்சிப் போட்டியில் எமது கல்லூரியின் ஆசிரியர்

**திரு.முத்திலிங்கம் செல்வச்சந்திரன் (B.Sc.)**

அவர்கள் முதலாம் இடத்தில் தங்கப்பதக்கத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமையீட்டித் தந்துள்ளார். இவர் இதுபோன்று புத்தாக்கங்களில் ஈடுபடுவதுடன் ஆசிரியர் சேவையிலும் மேலும் உயர் நிலையை அடைய வேண்டும் என பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/விக்னேஸ்வரக் கல்லூரி,
கரவெட்டி.

ஆசிரியர்கள்
நண்பர்கள்.

(79311)

## தங்கம் ரூ.24000 ஆனால் தங்கமெடலோ ரூ.300....!



ஆச்சரியமா...?
புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவச் செல்வங்களுக்கு ஓர் தங்கமெடல் கொடுத்து கல்வியினை வளர்க்க ஊக்குவியுங்கள்.

மேலதிக விவரங்களுக்கு:

எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்
212, கோயில் வீதி, நல்லூர்.
021 222 9607, 0777-110610

(555482)

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம் - பதவி வெற்றிடம்

கொழும்பிலிருந்து கப்பலில் வரும் பொருள்களை செவ்வை பார்க்கும் உத்தியோகத்தர்களிற்கான (Tally Clerk) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 30 வயதிற்கு மேற்பட்டவர்கள் 25.10.2008ற்கு முன் சுயவிவரத்துடன் விண்ணப்பங்களை யாழ்.வணிகர் கழகத்திற்கு சமர்ப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். சிங்களம் பேசத் தெரிந்திருப்பது மேலதிக தகைமையாகக் கணிக்கப்படும்.

165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (சி/555486)

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.


## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01 | 29 |
| 04 | 10 |
| 1942 | 1999 |



### அமரர் தம்பிமுத்து சோமசுந்தரம்

திதி:பஞ்சமி (19.10.2008)

நிலையில்லா இவ்வுலகில் நிலைத்துவிட்ட உம் அன்பால்
நினைவிழக்க முடியாமல் நீந்துகிறேன் கண்ணீரில்
நீரின்றி நான் இங்கே நிழலின்றித் தவிக்கின்றேன்
காலன் கண்ணுற்று கணக்கை முடித்து விட்டான்
காலங்கள் ஒன்பது கணக்கின்றி கடந்தன
காலத்தால் அழியாது காவலனே உம் நினைவு.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (79305)

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி.


## சிங்காரச் சிங்கப்பூரிலும் இப்போது நீங்கள் திருமணம் செய்யலாம்...

சிங்கப்பூரில் ஈழத்தமிழருக்காக ஈழத்தமிழரினால் ஒழுங்கு செய்யப்படும் அனைத்து வகையான திருமண சேவைகள் மற்றும் தங்குமிட வசதிகளும்

திருமணப் பதிவு அலுவல்களும் மணமக்களின் கடவுச் சீட்டுடன் மட்டும் செய்து தரப்படும்.

அனைத்தும் மிகவும் சௌகரியமான கட்டணங்களில்

தொடர்புகளுக்கு:

**SHANTHAN@0065 9846 3624**

SHANTH CONSULTANCY & SERVICES
SINGAPORE
Email: shanthconsultancysvs2yahoo.com.sg

(சி/555470)

## விற்பனைக்கு

வெஸ்பா ஸ்கூட்டர் (இத்தாலி), கட்டில்கள் (டபிள், சிங்கிள்), 100 W AMP ஸ்பீக்கர் Box 02, 10" என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: சி.சி.நாதன்
16/3, விநாயகர் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
T.P. 077 6146434

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய நல்ல இன பெண் அல்சேஷன் நாய் விற்பனைக்குண்டு.

தொடர்பு: P.விவேகானந்தன் (Banker),
ஒன்பதாம் கட்டையடி,
புத்தூர் மேற்கு, புத்தூர்.
T.P.0777 149162

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவகுடும்பம், 1981 உத்திராட நட்சத்திரம் கிரகபாவம் 3 ¾, நோர்வே P.R உடைய மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

தொடர்பு: LUXMYNARAJANA MARRIGE SERVICE
NO.30, MAREAMMEN LANE. THRUNELVELE.
T.P.0771971667. FAX: 021 222 2996.

## விற்பனைக்கு

ISUZU (கன்ரர்) NP.HD - XXX இலக்கமுடைய, 4HF - 1 எலக்ரோனிக் மொடல், 14x6 அடி நீள, அகலம் கொண்ட மிகவும் நல்ல நிலையில் உள்ள வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 115, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
T.P.:0777734083


## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் நாகரத்தினம்



மாரீசன்கூடல், இளவாலையைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியம்நாகரத்தினம் (16.10.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் கந்தப்பிள்ளை நாகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, சிவசுந்தரம், துரைராஜா மற்றும் திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாந்தி, ஜெயந்தி (ஆசிரியை யா/புனித ஹென்றியரசர் கல்லூரி), வசந்தா (சுவிஸ்), கதிர்காமதாஸன் (பிரான்ஸ்), விக்கினேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் கணேஸ்வரன், சற்குணராசா, பவானி (பிரான்ஸ்), சித்திரா (சுவிஸ்), பிரசாத் (யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியும் திருமதி அரியமலர் செல்லத்துரை (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை) அவர்களின் அன்பு மைத்துனியும் தபேஷன், டிஹறான், கீர்த்திகா, விதுஷன், யதுஷாயினி, றஜிந்தா, வைதீஸன், ரகுபரன், ஜனனி, லோர்ஷன், தக்சினி, தக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இராமலிங்கம் சின்னத்தம்பியின் பெறாமகளும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.10.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டிவளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மாரீசன்கூடல்,
இளவாலை. (79323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இலவச மருத்துவ ஆலோசனை

# மாதவிலக்கு நாள்களில் பெண்கள் தவிர்க்கவேண்டியவை எவை?

**கேள்வி:** எனது மனைவி. வயது 48. அவருக்கு கதிரையில் இருக்க முடியாது. முதுகெலும்பின் இறுதி எலும்பான Coccyx, இருந்தால் தாங்கொண்ணாத வலியைத் தருகின்றது. நின்றால், நடந்தால் வலியில்லை. பரிகாரம் கூறவும்.

**பதில்:** இம்மாதிரியான வலி Coccygodynia என்று மருத்துவத்தில் அழைக்கப்படுகிறது. திடீரென்று உட்காரும்போது இந்தச் சிறு எலும்பு தாக்கப்பட்டு வலி ஏற்படுகிறது. உதாரணமாக ஓடும் பஸ்ஸில் திடீரென்று இருக்கையில் அமரும்போது ஏற்படுவதுண்டு. ஒரு சிலருக்கு இது எதுவித காரணமும் இல்லாமல் ஏற்படலாம். அநேகருக்கு ஒரு சில மாதங்களில் இந்த வலி தானாகவே குறைந்து மறைந்துபோகும்.

இப்படியாக பிரச்சினையால் பாதிக்கப்படுபவர்கள் தமது எடை அந்த எலும்பைப் பாதிக்காதவாறு கதிரையில் உட்காரும்போது ஸ்கூட்டர் டயர் அமைப்பு 'குஷன்' (Air Cushion) காற்று மெத்தைகளை உபயோகிக்கலாம். வலி அதிகமாயிருந்தால் வலிநீக்கி மாத்திரைகளை உபயோகிக்கலாம். தொடர்ந்து 2 மாதத்துக்கு மேலாக வலி தொடர்ந்தால் Orthopaedic Surgeon என்கின்ற எலும்பு சம்பந்த விசேட நிபுணரின் ஆலோசனை பெறுதல் அவசியம்.

***

**கேள்வி:** வயது 16. பெண் பூப்படைந்து 3 வருடமாகின்றது. மாதவிலக்கு காலத்தில் அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே என்றெல்லாம் வீட்டிலும் எனது சிநேகிதிகளும் சொல்கின்றார்கள். ஏனென்று கேட்டால் சரியான விளக்கம் தருகின்றார்கள் இல்லை. 'அது அப்படித்தான்' என்ற ரீதியில் வீட்டில் எரிந்து விழுகின்றார்கள். சிநேகிதிகளுக்கும் சரியான விளக்கமில்லை. மாதவிலக்கு நாள்களில் தவிர்க்கவேண்டிய விஷயங்கள் என்ன என்று கூறுவீர்களா? என்னைப் போன்ற பருவத்தில் உள்ளவர்களுக்கு உங்கள் அறிவுரை பேருதவியாக இருக்கும்.

**பதில்:** மாதவிலக்கு பற்றி சரியான அறிவு இன்று பெரியவர்களிடம் கூட இல்லை. இந்த நிலையில் தங்களுக்கே புரிந்திராத விஷயங்களை உங்களுக்கு புரியும்படி எப்படி கூறுவார்கள். குருடன் குருடனுக்கு வழிகாட்டிய கதைதான் இது. மாதவிலக்கு என்பது பெண்களுக்கு மாதம் மாதம் ஏற்படும் சாதாரண உடலியல் தொழிற்பாடு. மாதம் மாதம் என்று சொல்லும்போது நேரசூசி போட்டது போல் சரியாக 30 நாள்களில் எல்லோருக்கும் இது ஏற்படுவதில்லை. ஒருசிலருக்கு 28 நாள்களுக்கு ஒரு தடவையும், ஒரு சிலருக்கு 45 நாட்களுக்கு ஒருதடவையும் ஏற்படலாம். ஆகவே, நாள்களின் இடைவெளி பற்றி பெரிதாக கணக்கெடுக்க வேண்டாம். மாதவிலக்கு வந்தால் அது போதும். மாதவிலக்கு வந்தால் 3 தொடக்கம் 5 நாள்களுக்கு இரத்தப்பெருக்கு இருக்கும். இதற்கு அதிகமாக இருந்தால் அல்லது ஒருநாள் மாத்திரம் இருந்தால் வைத்திய ஆலோசனை தேவைப்படும்.

மாதவிலக்கு ஏற்படுவதற்கு முன்னரும் - முடிந்தபின்னரும் ஒருசிலருக்கு வெள்ளைத் திரவம் வடிவதுண்டு, இது சாதாரணமானது. இந்தத் திரவம் அதிகமாக வழிந்தாலோ பெண் உறுப்புகளில் அரிச்சல் இருந்தாலோ நிறம் மஞ்சளாக - திரவம் தடிப்பாக இருந்தாலோ மருத்துவ ஆலோசனை தேவை. ஒரு சிலருக்கு மாதவிலக்கு ஏற்படமுன்னரோ அல்லது மாதவிலக்கு காலத்திலோ அடிவயிற்றில் வலி ஏற்படுவதுண்டு. கருப்பையின் தசைகள் இறுகுவதால் இது ஏற்படும். ஓய்வும், வலிநீக்கி மருந்துகளும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும். வலி அதிகமாக தாங்கமுடியாமல் நடைமுறை வாழ்க் கைக்குக் கஷ்டமாக இருந்தால்





மருத்துவ ஆலோசனை தேவை. மாதவிலக்கு பற்றிய சில மருத்துவக் கருத்துகள் இவை.

ஒருகாலத்தில் மாதவிலக்கு என்பதை ஒரு தீட்டாகக் கருதினார்கள். மாதவிலக்கு எற்பட்ட பெண்களை வீட்டின் ஒரு புறத்தில் ஒதுக்கிவைப்பார்கள். பெரிய வீடுகளில் இதற்கென்று தனி அறை இருப்பதுண்டு. சில சமூகங்களில் மாதவிலக்கு ஏற்பட்ட பெண்ணை வீட்டின் வெளியே கொட்டிலில் தங்கவைப்பார்கள். 'மாதத்தீட்டு', 'வீட்டுக்குத்தூரம்' என்றெல்லாம் மாதவிலக்குக்கு மறுபெயர்கள் இப்படித்தான் ஏற்பட்டன. 'விலக்கு' என்ற வார்த்தைக்கு விலக்கப்பட வேண்டிய தொன்று என்று பொருள்படுத்துவது கவலைக்குரிய விஷயம். இப்படி முன்னோர் விஷயமறியாமல் மாதவிலக்குக்கு கொடுத்த தப்பான விளக்கங்கள் இன்று ஓரளவு மறைந்துபோயிருந்தாலும் தற்காலத்தில் மாதவிலக்குப் பற்றி சில தவறான கருத்துக்கள் நிலவிவருகின்றன. அவற்றைப் பார்ப்போம்.

மாதவிலக்கு காலங்களில் விளை யாடக்கூடாது, நீந்தக்கூடாது, பாரிய வேலைகள் செய்யக்கூடாது என்று சொல்வதெல்லாம் தவறு. Sanitary Napkins, Tampons போன்ற பொருள்கள் உள்ள இந்தக் காலத்தில் இவற்றை அணிந்துகொண்டு பயப்படாமல் விளை யாடலாம், நீந்தலாம். ஒரு சிலருக்கு மாதவிலக்கின் போது அடிவயிற்றுவலி ஏற்படுவதுண்டு. இவர்கள் உடல் களைக்க விளையாடுவது சிலவேளை வலியை அதிகரிக்கும்.

மாதவிலக்கு காலங்களில் அடிக்கடி குளிப்பது, தலைமுழுகுவது தவிர்க்கப் படவேண்டும் என்று தப்பான கருத்து உண்டு. வெதுவெதுப்பான நீரில் இந்தக் காலங்களில் குளிப்பதோ, முழுகுவதோ மாதவிலக்கு காலங்களில் ஏற்படும் வலியைக் குறைக்கும். மிகவும் குளிரான நீரில் குளித்தால் ஒரு சிலருக்கு கருப்பை சுருங்கி வலி ஏற்படலாம். மற்றப்படி மாதவிலக்கு காலங்களில் குளிப்பதும் முழுகுவதும் உடலைச் சுத்தமாக வைத்துக்கொள்ள உதவும்.

பெண்கள் குறிப்பாக பெற்றோரும் இளம் பெண்களும் மாதவிலக்கு சம்பந்தமாக சரியான கருத்துகளை அறிந்திருப்பது அவசியம்.

***

**கேள்வி:** பெண். வயது 20. எனக்கு மாதவிலக்கு வராமல் இருந்ததால் பரிசோதித்துப் பார்த்ததில் எனக்கு கருப்பை (Uterus) என்றொரு உறுப்பு இல்லை என்று தெரியவந்தது. ஆனால், சூலகங்கள் சாதாரணமாக இருப்பதாகச் சொன்னார்கள். தோற்றத்தில் நான் மற்றப் பெண்களைப் போல் சாதாரண பெண்ணாகவே தோற்றமளிக்கின்றேன். எனக்குப் பால் உணர்வுகள் ஏற்படுகின் றன. எனது கேள்வி என்னவென்றால்

இலவச மருத்துவ ஆலோசனை பொழுதுகள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் விஞ்ஞானத்துறை எழுத்தாளருமான
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நானும் மற்றவர்களைப் போல் திரு மணம் செய்து குடும்ப உறவுகொண்டு குழந்தைகள் பெறமுடியுமா?

**பதில்:** கருவில் பிறப்புறுப்புகள் உருவாகும்பொழுது மற்றைய சூலகங் கள், பெண்ணுறுப்பு என்பவை உங் களுக்கு உருவாகியிருந்தாலும் கருப்பை முழுதாக வளர்ச்சி பெறவில்லை. கருப்பை என்று சொல்லக்கூடிய உறுப் பின் Vestigeal என்ற ஆரம்ப வளர்ச்சி மட்டுமே நடைபெற்றுள்ளது. எனவே, முறையான கருப்பை இல்லை. சூலகங் களிலிருந்து கருமுட்டைகள் வந்தாலும் கருக்கட்டல் நடைபெற்று கரு பதியம் செய்யப்பட கருப்பை என்று ஒன்றில்லை. இதனால் உங்களால் குழந்தை ஒன்று பெற்றுக்கொள்ளமுடியாது. ஆனால், சிலவேளைகளில் உங்கள் யோனிப்பாதை (Vaginal Canal) சரியானமுறையில் வளர்ச்சி யடைந்திருந்தால் உடல்உறவு கொள்ள ஏதுவாக இருக்கும். கருப்பை சரியாக விருத்தியடையாத நிலையில் சிலவேளைகளில் யோனிப்பாதையின் நீளம் குறுகிய தாக அமைந்துவிட சந்தர்ப்பம் உண்டு. ஒரு பெண்ணியல் நிபுணரின் (Gynaecologist) ஆலோசனை பெற்று பரிசோதனை செய்யுங்கள். குறுந்தூர யோனிப்பாதை உங்களுக்கிருந்தால் ஒரு சிறு சத்திர சிகிச்சை மூலம் அதனை நீளமாக்கி சாதாரண குடும்ப உறவு அனுபவிப்பதற்கு ஏற்றவாறு மாற்றிவிட லாம். சூலகங்கள் இருப்பதால் ஹோர் மோன் பிரச்சினைகள் ஏற்படாது. வெளித் தோற்றத்தில், வளர்ச்சியில் சாதாரண பெண் போல இருப்பீர்கள்.

இனி திருமணம் பற்றி யோசிப்போம். திருமணம் செய்பவர்கள் எல்லோருக்கும் குழந்தைப் பாக்கியம் கிடைப்பதில்லை. ஒருவரை ஒருவர் புரிந்துகொண்ட தம்பதி களானால் குழந்தையில்லாப் பிரச்சினை அவர்கள் குடும்ப வாழ்க்கையை பாதிப்பதில்லை.

எனவே, உங்கள் உடல் பிரச்சினையை புரிந்துகொண்ட ஒருவரை அல்லது குழந் தைகள் பெறுவது அவசியமில்லை என்ற மனப்பாங்கு கொண்ட ஒருவரை அல்லது குழந்தைகள் உள்ள மனைவியை இழந்த ஒருவரை - உங்கள் பிரச்சினையை திருமணத்திற்கு முன்னரே கூறி - திரு மணம் செய்துகொள்ளலாம்.

***

**கேள்வி:** எனது நண்பர் விளையாட் டாக எனது கன்னத்தை பொத்தி அறைந் தார். அதன் பின்னர் அந்தப் பக்க காது வலித்தது. வீட்டில் உள்ளவர்கள் காது வலிக்கு கற்பூரத்தை எண்ணெயில் காய்ச்சி அந்தக் காதுக்குள் விட்டார்கள். ஆனால், வலி குறையவில்லை. பின்னர் நான் காதுசம்பந்தப்பட்ட வைத்தியரின் ஆலோசனை பெற்றேன். பின்னர் நான் காது சம்பந்தப்பட்ட வைத்தியரின் ஆலோசனை பெற்றேன். அவர் எனது செவிப்பறை கிழிந்துபோய்விட்டதாக கூறி மருந்துகள் தந்தார். இப்பொழுது வலி கொஞ்சம் குறைந்திருந்தாலும் அந்தப் பக்கத்து கேட்கும்திறன் குறைந் துள்ளதாக எனக்குத் தெரிகிறது. இதற்கு பரிகாரம் உண்டா?

**பதில்:** கன்னத்தை பொத்தி அறையும் போதும் Under Water Swimmers எனப் படும் நீருக்கடியில் நீந்தும்போதும், Divers எனப்படும் நீரில் மூழ்கி தொழில் செய்யும்போதும் செவிப்பறை எனப் படும் Ear Drum கிழிபடுதல் சாதாரண மானதே. இதனால், பெரிய அளவில் கேட்கும் திறன் குறையாது. மிகவும் நுண்ணிய அதிர்வுகளைக் கொண்ட ஒலி கள்தான் கேட்காது. இது நாளாந்த வாழ்க் கையில் பெரிய பிரச்சினைகள் தராது. உங்களுக்கு இப்போது கேட்கும் திறன் குறைவாகத் தெரிவது உட்காயம் மாறும் வரைக்கும் இருக்கத்தான் செய்யும். தொடர்ந்தும் இருந்தால் ஒரு Hearing Test செய்யவேண்டி நேரும்.

கிழிந்த செவிப்பறை - முக்கியமாக கன்னத்தில் அறைவதால் கிழிந்த செவிப் பறையின் பாகங்கள் - அருகருகே இருப்ப தால் தானாகவே அவை ஒட்டிக்கொண்டு குணமாகிவிடும் சந்தர்ப்பம் அதிகம். அது வரை காதுக்குள் நீர்போகாமல், நீச்சல் போன்றவற்றில் ஈடுபடாமல் இருப்பது நல்லது.

நன்றாக செவிப்பறை கிழிந்திருந்தால் காயம் ஆறிய பின்பும் Plastic Surgery மூலம் சரிப்படுத்த முடியும்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்து, பேச்சு, ஊடகம் ஆகியவற்றின்
சுதந்திர உரிமைக்காக உயிர்
பறிக்கப்பட்ட உண்மையாளனின்

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



செய்தியாய்
05.06.1961

செய்திக்காக
19.10.2000

அமரர்

# மயில்வாகனம் நிமலராஜன்

உன் மரணம்
உலகின் நரம்புகளை அதிரவைத்தது
வானலைகள் சோகம் இசைத்தன
உன் குருதி உறைந்த
இம் மண்ணில் இருந்து
நாளை நீ உயிர்ப்பாய்.

**உனது குரல் ஓங்கி ஒலிக்கட்டும்!**

என்றும் உன் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் எங்கும் இருக்கின்றார்

ஓர் ஊரிலே மாடசாமி என்ற ஓர் ஏழை இருந்தான். அவன் தனது மகன் பாலனுக்கு ஒருநாள் இரவு நித்திரைக்குச் செல்லும் முன் " இறைவன் எங்கும் இருக்கின்றார். அத்துடன் நாம் எந்தத் தவறு செய்தாலும் எம்மைத் தண்டிப்பார்'' எனக் கூறினான். அதற்குப் பாலன் " அப்பா! நாமோ ஒரு கிராமத்தில் இருக்கின்றோம். ஆனால் கடவுளோ எங்கே இருக்கின்றார் என்று தெரியாது. அப்படி இருக்கையில் கடவுள் எம்மை எப்படிக் கவனிப்பார்?'' எனக் கேட்டான். அதற்கு மாடசாமி "கடவுள் எங்கும் இருக்கின்றார்.



அவருக்கு எம்மை நன்றாகத் தெரியும். எமக்குத் தான் அவரைத் தெரியாது'' எனக் கூறினான். ஒருமுறை அந்தக் கிராமத்தில் பஞ்சம் ஏற்பட்டது. ஆகையால் மாடசாமி பாலனையும் அழைத்துக் கொண்டு, அயலூரில் நெல் திருடிக்கொண்டு வருவதற்காகச் சென்றான். அப்போது மகனை வரம்பிலே ஏற்றிவிட்டு "மகனே நான் இந்த வயலில் நெல் திருடுகின்றேன். அப்படித் திருடும் போது யாராவது நம்மைப் பார்க்கின்றார்களா? எனப் பார்த்துக் கூறு'' என்றான். அதற்குப் பாலன் "ஆம் அப்பா, நம்மைக் கடவுள் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்'' என்றான். பாலன் கூறிய பிறகுதான் மகனுக்குக் கூறிய அறிவுரை மாடசாமிக்கு நினைவு வந்தது. அதன் பின் திருடுவதை விட்டு விட்டு மறுபடியும் மகனை அழைத்துக் கொண்டு வீடு திரும்பினான்.

***

வி.ஜெவிதா, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.




நந்திவர்மனை அடர்கானகத்துக்குள், தன்னுடைய மாயாஜால விளையாட்டைப் பயன்படுத்தி வரவழைத்ததன் காரணத்தை மாயக்கிழவி விவரிக்கத் தொடங்கினாள்.

"நந்திவர்மா! நான் என்னதான் மந்திர தந்திரங்களில் தேர்ந்தவளாக இருந்தாலும் என்னால் வெல்ல முடியாத ஒரு விடயமும் உள்ளது'' என்று கொஞ்சம் சோகம் இழையோடும் குரலில் கிழவி கூறினாள்.

"பஞ்சமா பாதகங்களையும் ஈவிரக்கமின்றி மந்திர சக்தியால் நிறைவேற்றிக் கொள்ளும் உன்னாலும் வெல்லப்பட முடியாத விடயமொன்று உள்ளதா? ஆச்சரியமாக இருக்கின்றதே!'' என்று ஓரளவு துணிச்சலை வரவழைத்துக் கொண்டு நந்திவர்மன் கேட்டான்.

" ஆமாம் நந்திவர்மா! இதுவரையும் என்னால் மரணத்தை வெல்லும் சக்தியை அடைய முடியவில்லை. அதை அடைவதற்காகவே உன்னை வரவழைத்தேன்'' என மந்திரக்கிழவி சொன்னதும் நந்திவர்மன் வியப்படைந்தான்.

"நீ மரணத்தை வெல்வதற்கு நான் என்ன செய்ய முடியும்?'' என அவன் வினவினான்.

"முடியும் மன்னா! உனக்கு இன்னும் இரண்டு மாதத்தில் இரட்டைப் புதல்வர்கள் பிறப்பார்கள். அவர்களுக்குப் பதினைந்து வயது நிரம்பியதும், காளி தேவிக்குப் பலி கொடுத்தால், நான் மரணத்தை வென்று, பதினாறு வயது மங்கையைப் போல இளமையும் பெற்று விடுவேன். மன்னா! இப்போது சொல்! எனக்காக உன் மகன்களைத் தருகிறாயா?''



கெஞ்சும் குரலில் கிழவி கேட்டாள்.

"முடியாது! சாக வேண்டிய நீ வாழ்வதற்காக என் புதல்வர்களைப் பலிக்கடாவாக்க முடியாது!'' எனச் சீறும் குரலில் மன்னன் கூறினான்.

அதற்குக் கிழவி சொன்ன பதில் நந்திவர்வனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

(தொடரும்)




## முக்கியமானவை மூன்று

★ மதிக்க வேண்டிய மூன்று
- முதுமையானோர்
- மார்க்கம்
- சட்டம்

★ நேசிக்க வேண்டிய மூன்று
- நேர்மை
- தூய்மை
- கடின உழைப்பு

★ போற்ற வேண்டிய மூன்று
- அறிவு
- அழகு
- பண்பு

★ பேணி வளர்க்க வேண்டிய மூன்று
- திருப்தி
- தைரியம்
- மனமகிழ்ச்சி

★ தவிர்க்க வேண்டிய மூன்று
- புகைத்தல்
- மதுவருந்துதல்
- சூதாடுதல்

★ வெற்றிக்கு வேண்டிய மூன்று
- தனித்திருத்தல்
- பசித்திருத்தல்
- விழித்திருத்தல்

ச.யனந்தினி, தரம் 7 சி, யா/கொ.இ.க.

## பொது அறிவு உலகில் நீளமானவை, ஆழமானவை



1) உலகில் நீளமான மலைத் தொடர் - அன்டிஸ்
2) உலகில் நீளமான அணை - ஹிராகுட்
3) உலகில் நீளமான சுவர் - சீனப் பெருஞ்சுவர்
4) உலகில் நீளமான சாலை - சென்னை - கல்கத்தா சாலை
5) உலகில் நீளமான புகையிரதப் பாலம் - அமெரிக்காவில் உள்ளது.
6) உலகில் நீளமான பாம்பினம் - அனகொண்டா
7) உலகில் நீளமானநதி - நைல் நதி
8) உலகில் ஆழமான குகை - ஜின்பொனாட்
9) உலகில் ஆழமான ஏரி - பைக்கால் ஏரி
8) உலகில் ஆழமான கடல் பள்ளம் - பசுபிக் மரியான்.

ஞா.ரஜீவன், தரம் 8 ஏ, யா/தமிழ்க் கந்தையா வித்தி.

## தாய்

★ தரணியே கல்லறை ஆகலாம் - ஆனாலும் தாயின் வயிற்றில்தான் கருவறை உண்டு.
★ தாய் கண்ணீர் விட்டு அழும் போது இறைவன் தானாகவே இறக்கின்றான்.
★ தாயை மதித்தால் ஊர் சுற்றும் தறுதலையும் தெய்வமாகக் காட்சி அளிப்பான்.
★ தாயைப் போல இளகிய மனதைத் தவத்தாலும் பெற முடியாது.
★ தாயின் மடியில் உள்ள சுகம் தரணியில் எங்குமில்லை.
★ தாயால் மாத்திரமே பட்ட மரத்தையும் துளிர்விடச் செய்யமுடியும்.
★ தாய் ஒரு நாள் அருகில் இருந்தால் நரகமும் வந்த வழியே ஓடிவிடும்.



சு.ஜெயரூபன், பருத்தித்துறை.

## பள்ளிக் கால ஞாபகம்

நட்பாக வந்த கவிதை
என் உயிரில் கலந்தது - காற்றின்
ஓசை உன் பெயரை
இசை அமைக்கிறது



நண்பியே நாம் படித்த
பாடசாலைக்கு சொல்!
எம் உயிர் உன்னோடு
தான் இருக்குது என்று!

க.கிந்துஜா,
தரம் 8,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



## அழகு நிலா

நீலவானில் எழுந்து எழுந்து
நீந்தும் அழகுப் புது நிலா
கோல எழிலை அள்ளி எங்கும்
கொட்டிச் சிந்தும் விந்தை பார்
உள்ளக் கமலம் தன்னில் எதையும்
ஒளித்து வையா எழில் நிலா
பிள்ளை மனது கொண்டு ஒளியைப்
பெய்து எங்கும் செல்லுதோ?

அ.அஸ்வீகா
தரம் 8 ஏ,
யா/வட இந்து மகளிர் கல்லூரி.

## மாணவர் தூரிகை

ஸ்ரீ.அபிஷைனா,
தரம் - 6 ஏ,
யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்.



ச.மதுராஜினி
தரம் 8, கொழும்புத் துறை இந்து மகா வித்தியாலயம்.



சி.தர்சிகா,
தரம் 4 சி, யாழ்ப்பாணக் கல்லூரி,வட்டுக்கோட்டை.



## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அணிக்கு 188 கோடி ரூபா 'இந்தியன் பிறிமியர் லீக்' வழங்குகின்றது




அடுத்த ஆண்டு நடைபெறும் ஐ.பி.எல் (இந்தியன் பிரீமியர் லீக்) 20 ஓவர் போட்டிக்காக இலங்கை கிரிக்கெட் அணி இங்கிலாந்து பயணத்தை ரத்து செய்தது. ஐ.பி.எல் போட்டி நடைபெறும் மாதத்தில் இந்தச் சுற்றுப்பயணம் இருப்பதால் இலங்கை வீரர்கள் விளையாட மாட்டோம் என்று தெரிவித்தனர்.

இதை இலங்கை கிரிக்கெட்சபை ஏற்று இங்கிலாந்து பயணத்தை ரத்து செய்தது. ஜயசூரியா ஜயவர்தன, முரளிதரன் உட்படப் 12 இலங்கை வீரர்கள் ஐ.பி.எல் போட்டியில் ஆடுகிறார்கள்.

இதற்கிடையே இங்கிலாந்து பயணத்தை ரத்து செய்ததால் ஏற்பட்ட இழப்புக்கு ஐ.பி.எல் 188 கோடி ரூபாவை இலங்கை கிரிக்கெட் சபைக்கு வழங்குகிறது. ஐ.பி.எல் தலைவர் லலித் மோடி இலங்கை கிரிக்கெட் வீரர்கள் சங்க செயலாளர் லெபராய் ஆகியோர் இடையே நடந்த பேச்சுவார்த்தையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. ஆண்டுக்கு ரூபா 18.8 கோடி வீதம் 10 ஆண்டுகளில் இந்தப் பணம் வழங்கப்படும் என்று லலித்மோடி தெரிவித்தார். ***

# வெற்றியை எதிர்பார்த்தோம் - பொண்டிங்



பெங்களூர் கிரிக்கெட் டெஸ்ட்டில் ஆஸ்திரேலிய அணி மட்டுமே வெற்றிபெற வேண்டும் என்னும் நோக்கத்தோடு விளையாடியதாக அந்த அணியின் தலைவர் ரிக்கி பொண்டிங் கூறியுள்ளார்.

பெங்களூரில் நடைபெற்ற இந்தியா - ஆஸ்திரேலியா இடையிலான முதல் டெஸ்ட் போட்டி சம நிலையில் முடிவடைந்தது.

இந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய அணி தடுப்பாட்டம் ஆடியதாக இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜாகீர்கான் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆட்ட நாயகன் விருதை வென்ற ஜாகீர்கான் இதுவரை எந்த ஆஸ்திரேலிய அணியும் பின்பற்றாத செயலாகத் தற்போதைய ஆஸ்திரேலிய அணி தற்காப்பு ஆட்டத்தை ஆடியதாகக் குறை கூறியிருந்தார்.

20 விக்கெட்களை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை ஆஸ்திரேலிய அணிக்கு இருக்கவில்லை என்றும் அவர் கூறியிருந்தார். இந்நிலையில் போட்டி முடிந்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ஆஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங், பெங்களூர் டெஸ்ட்டில் ஆஸ்திரேலிய மட்டுமே வெற்றிக்காக விளையாடிய அணி என்று கூறினார்.

ஆஸ்திரேலிய வீரர்கள் ஆக்ரோஷமாக விளையாடியதாக க்கூறிய அவர் இந்திய அணி வழக்கம் போல சமநிலை செய்யும் உத்தேசத்தோடு விளையாடியதாகத் தெரிவித்தார். ஆஸ்திரேலியா சிறப்பாக ஆடி ஆதிக்கம் செலுத்தியதாகவும் அவர் தெரிவித்தார். இது இந்த டெஸ்ட் தொடருக்கு இது நல்ல தொடக்கமாக அமைந்திருக்கிறது என்றும் அவர் கூறினார்.

வெற்றிபெறுவதற்காக ஆஸ்திரேலிய அணி தீவிரமாக முயற்சித்தாலும் போதிய வாய்ப்பு கிடைக்கவில்லை என்று கூறிய அவர் முதல் இன்னிங்சில் ஜாகீர்கான் மற்றும் ஹர்பஜன்சிங் ஜோடி குவித்த ஓட்டங்கள் ஆஸ்திரேலிய வெற்றியைத் தடுத்து விட்டதாகக் கூறினார். ***

## விளையாட்டு அரங்குகளில்

# சச்சினுக்குச் சரிவு......!



ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் 24 ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டார்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) துபாயில் கடந்த 14 ஆம் திகதி தரவரிசைப் பட்டியலை வெளியிட்டது. டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களை எடுத்தவர் என்ற பெருமையைப் பெற்றுள்ள டெண்டுல்கர், சரிவை சந்தித்து 24 ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார்.

இதேபோல சேவாக் (11 ஆவது இடம்), டிராவிட் (18ஆவது இடம்) ஆகியோரும் பின்தங்கியுள்ளனர். எனினும் வி.வி.எஸ்.லக்ஸ்மன் மட்டும் தரவரிசையில் முன்னேறி 14 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

டெஸ்ட் தரவரிசையில் ஆஸ்திரேலிய வீரர் மைக் ஹஸி முதலிடத்தில் உள்ளார்.

பந்து வீச்சாளர்களைப் பொறுத்தவரை இந்தியாவின் ஜாகிர்கான் 07 இடங்கள் முன்னேறி 11 ஆவது இடத்தில் உள்ளார். அணித்தலைவர் கும்ளே 8 இடங்கள் பின்தங்கி 18 ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டார். இஷாந்த் சர்மா ஓர் இடம் முன்னேறி 40 ஆவது இடத்தில் உள்ளார். ***

# ஹர்பஜனுக்கு எதிராக வழக்கு



தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் நடிகை மோனா சிங்குடன் சேர்ந்து கிரிக்கெட் வீரர் ஹர்ப்பஜன் சிங். இராவணன் வேடமிட்டு நடனமாடியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து விஸ்வ இந்து பரிஷத் மற்றும் 'பஜ்ரங் தள்' ஆகிய அமைப்புக்கள் அவருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளன.

இந்த வழக்குக் குறித்த விசாரணை எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறுகிறது.

ஹர்ப்பஜன் நடித்த ''ஏக் கிலாடி ஏக் ஹசினா'' நிகழ்ச்சி அண்மையில் தனியார் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டது. அதில் இராவணன் போல் உடையணிந்து, நெற்றியில் திலகமிட்டு நடிகை ஒருவருடன் ஆடிப் பாடுவதுபோல் காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இது இந்துக்களை ஆத்திரம் கொள்ளச் செய்ததோடு அவர்களது மத உணர்வை இழிவுபடுத்துவதாகவும் அமைந்துள்ளது. பதிவு செய்யப்பட்ட இந்தக் காட்சி பல தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டது. இதை எதிர்த்து சண்டீகரில் உள்ள நீதிமன்றத்தில் விஸ்வ இந்து பரிஷத் மற்றும் பஜ்ரங் தள் அமைப்புக்களின் பஞ்சாப் பிரிவு சார்பில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இதற்கிடையே ஹர்ப்பஜனின் செயலுக்குச் சீக்கிய அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன. இது தொடர்பாக அவர் பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும் எனவும் அவை வலியுறுத்தியுள்ளன. ***

# பெலாரஸை வீழ்த்தியது இங்கிலாந்து!



உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தகுதிச் சுற்றுப் போட்டியில் பெலாரஸ் அணியை இங்கிலாந்து 3 இற்கு 1 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்தியது. இங்கிலாந்தின் நட்சத்திர வீரர் வெய்ன் ரூனி இரண்டு கோல்களை அடித்தார். ரூனி தற்போது சர்வதேச உதைபந்தாட்டப் போட்டிகளில் 5 கோல்களை அடித்துள்ளார். இந்த வெற்றி மூலம் உலகக் கிண்ண உதைபந்தாட்ட தகுதிச் சுற்றுகளில் முதல் 4 போட்டிகளையும் வென்று இங்கிலாந்து புதிய சாதனை படைத்துள்ளது.

மற்றத் தகுதிச் சுற்றுப் போட்டிகளில் இத்தாலி அணியும் ஸ்பெயின் அணியும் வெற்றி பெற்றுள்ளன. போர்த்துக்கல் அணி பலவீனமான அல்பேனியா அணியுடன் கோல்கள் எதுவும் போடாமல் சமநிலையில் முடிந்துள்ளது. ***

# ஒரு மாதத்துக்குள் மூன்று கிண்ணங்கள்

உலகின் முதல் நிலை வீராங்கனை ஜலீனா ஜங்கோவிக் கிரெம்ளின் கிண்ண டென்னிஸ் போட்டியிலும் சாம்பியன் பட்டம் வென்றார். இதன்மூலம் அவர் ஒரு மாதத்துக்குள் மூன்றாவது சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். இதற்கு முன்னர் 23 வயதான ஜங்கோவிக் சீன ஓபன் மற்றும் ஜேர்மனியில் நடைபெற்ற போர்ஸ்ச் கிராண்ட்பிரிக்ஸ் போட்டிகளில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார். ரஷ்யாவில் கடந்தவாரம் நடந்த கிரெம்ளின் கிண்ண இறுதிப்போட்டியில் சேர்பியாவின் ஜங்கோவிக் ரஷ்யாவின் வேரா ஸ்வொனேராவை சந்தித்தார். ஒரு மணி 21 நிமிடங்கள் நீடித்த இந்தப் போட்டியில் ஜங்கோவிக் 62, 64 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். ***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளைய தளபதி விஜய் நடித்த குருவி படத்தின் நாயகியாக முதலில் நயன்தாராவே நடிப்பதாக அறிவிப்பு வெளிவந்தது. ஆனால் என்ன மாயா ஜாலமோ தெரியவில்லை. அடுத்த நாளே குருவி படத்தின் நாயகியாக த்ரிஷா நடிக்கத் தொடங்கினார்.

குருவி படம் வெளிவந்து 150 நாள்கள் ஓடினாலும், தான் எதிர்பார்த்தளவு ஓடவில்லை என்பது விஜயின் கவலை. இதற்கு த்ரிஷாவை நாயகியாக்கியதும் ஒரு காரணமென எண்ணிய விஜய், தற்போது தான் நடித்துவரும் 'வில்லு' படநாயகி நயன்தாராவை ஊடகங்களிடம் அதிகளவு புகழ்ந்து வருகிறார்.

இதனால் கடுப்பாகிப் போன த்ரிஷா அண்மையில் நடந்த குருவி பட 150 ஆவது நாள் வெற்றி விழாவில் விஜயைப் பார்த்துச் சிரிக்கவேயில்லை. விஜயும் த்ரிஷாவைக் கண்டுகொள்ளவில்லை. ம்ம்! யார் கண் பட்டதோ?

# விஜய் - த்ரிஷா கூட்டணியில் விரிசல்



## விஷாலின் பொறுமை

புரட்சித் தளபதி என்று பட்டப்பெயர் சூட்டிக் கொண்ட ராசியோ என்னவோ விஷாலைக் கெட்டகாலம் கெட்டியாகப் பிடித்துவிட்டது. விஷாலின் படங்களிலேயே அதிக செலவில் தயாரான 'சத்யம்' படம், வந்த வேகத்திலேயே திரையரங்குகளை விட்டு ஓடிவிட்டது. இதன் தயாரிப்பாளர்கள் விஷாலும், அவருடைய அண்ணனும்தான். சத்யம் தந்த நஷ்டத்தினால் நொந்து போன விஷால் தன்னுடைய அடுத்த படத்தைப் பொறுமையோடு தெரிவு செய்திருக்கிறார். ஏற்கனவே ஒப்புக் கொண்ட 'சூப்பர் ஹீரோ' படம், 'இரட்டை வேடப் படம்' என்பவற்றை ஒதுக்கி வைத்து விட்டு, அய்யப்பன் என்ற புதுமுக இயக்குநரின் படத்தில் நடிப்பதென முடிவு செய்திருக்கிறார் விஷால்!




## புயலாகும் சினேகா



கவர்ச்சி என்பதை மருந்துக்குக்கூடக் காட்டாது, குடும்பப் பாங்கான வேடங்களில் தோன்றி ரசிகர்களிடையே தனிமதிப்பைப் பெற்றவர் நடிகை சினேகா.

இதுவரையும் தொட்டால் உடைந்து விடக்கூடிய மென்மையான கதாபாத்திரங்களில் மட்டுமே நடித்து வந்த இந்தப் புன்னகை இளவரசி, இப்போது அடிதடி செய்யும் அதிரடிப் பெண் பொலிஸ் பாத்திரத்தில் நடிக்க இருக்கிறார்.

விஜயசாந்தியின் நடிப்பில் வெளிவந்து வெற்றிகரமாக ஓடிய 'வைஜெயந்தி ஐ.பி.எஸ்' என்ற படத்தின் கதையை மையமாக வைத்து, உருவாகிவரும் புதிய படத்திலேயே இப்படி ருத்ரதாண்டவ அவதாரம் எடுத்திருக்கிறார் சினேகா!

# விஜயகாந்தின் 'மரியாதை'



தமிழ்த் திரையுலகில் அதிகளவு வசூலை வாரிக்குவித்த படங்களில் 'வானத்தைப்போல' படமும் ஒன்று. இந்தப் படத்தைத் தந்த நடிகர் விஜயகாந்த் இயக்குநர் - விக்கிரமன் வெற்றிக்கூட்டணி 'மரியாதை' என்ற படத்தில் மீண்டும் இணைந்துள்ளார். அம்மா கிரியேஷன்ஸ் தயாரிப்பில் விக்கிரமன் இயக்கவுள்ள 'மரியாதை' படத்தில், தந்தை - மகன் என்ற இரட்டை வேடத்தில் விஜயகாந்த் நடிக்கிறார். மீனா, மீராஜஸ்மின், அம்பிகா, ரமேஷ்கண்ணா, சண்முகராஜ், சம்பத் போன்றோரும் இப்படத்தில் கலந்து கலக்கவுள்ளனர். "தமிழ்த் திரையுலகில் சரிந்து செல்லும் விஜயகாந்தின் செல்வாக்கை மீண்டும் உயர்த்தி, அவருக்குத் தேசிய விருதையும் மரியாதை படம் பெற்றுத்தரும்" என இயக்குநர் விக்கிரமன் நம்பிக்கையோடு கூறியுள்ளார்.

# திரை விமர்சனம்

## நேற்று இன்று நாளை?

படத்தின் தலைப்பில் ஏதோ பழைய வாசனை வீசினாலும் ஆட்டம், பாட்டம், விறுவிறுப்பென நேற்று, இன்று, நாளை படத்தில் இளமை ஊஞ்சலாடுகிறது. ரவி கிருஷ்ணா, கருணாஸ், அஜய், அக்ஷரா, தமன்னா ஆகியோரின் நடிப்பில், லட்சுமி காந்தின் இயக்கத்தில், சூர்யபிரகாஷ்ராவின் தயாரிப்பில் வெளிவந்துள்ள படமே நேற்று, இன்று, நாளை.

லட்ச, லட்சமாய் சம்பாதிக்க வேண்டும் என்ற வெறியோடு சென்னைக்கு வருகின்ற ரவி கிருஷ்ணாவுக்கு, வேலை தேடும் போது ஏமாற்றமே மிஞ்சுகிறது. வேலை கிடைக்காத சோகத்தில், தன் கதையை முடித்துக் கொள்ளத் தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்திருக்கிறார் ரவிகிருஷ்ணா. அப்போது அவருக்கு அடிக்கிறது அதிஷ்டம்! ரவி கிருஷ்ணா தற்கொலை செய்யச் சென்ற ரயில் தண்டவாளத்தில் ஏற்கனவே இறந்து கிடக்கும் வாலிபனின் செல்போனால், ரவி கிருஷ்ணா குபேரனாகின்றார். அதன் பிறகு ஏகப்பட்டவர்களை ஏமாளிகளாக்கி பணத்தில் மிதக்கத் தொடங்குகிறார். ரவி கிருஷ்ணாவிடம் ஏமாந்தவர்களும், ரவுடிகளும் அவரைப் போட்டுத் தள்ள முனைகிறார்கள். அதை நாயகன் எப்படி எதிர்கொள்கிறான் என்பதே நேற்று, இன்று,நாளை படத்தின் கதை. ஒன்றுக்கு, இரண்டு நாயகிகள் இருந்தும், எப்போதாவதுதான் கண்ணில்படுகிறார்கள். நீண்ட காலத்திற்குப் பிறகு நகைச்சுவையில் கருணாஸ் பின்னியெடுத்திருக்கிறார். நாயகன் ரவி கிருஷ்ணாவின் நடிப்பில் நல்ல முன்னேற்றம். படத்தில் நாயகன் இறப்பது போலவும், ரவுடிகளிடமிருந்து தப்பிக் காதலியோடு [illegible] இரண்டு இறுதிக் காட்சிகளைப் பயன்படுத்தியுள்ளார் இயக்குநர். இது 12B படத்தை ஞாபகமூட்டுகின்றது. குறைகளையும், நிறைகளையும் சம அளவில் கலந்து, ஒரு ஆங்கிலப்படம் போல வெளி வந்துள்ளது 'நேற்று, இன்று, நாளை' திரைப்படம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசீகர தோற்றத்திற்கு

# சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)



யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்

'சிவா நறுமணைப் பூங்கா' 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO A/L 250



# E.G மின்சார உற்பத்திப் பொருள்கள்

(LAMP HOLDER, CEILING ROSE, STRAIGHT BATTON, ANGLE BATTON & PLUG TOPS)

European General Company இடமிருந்து BAKE LITE மூலப்பொருள்கள் கொண்டும், தரமான BRASS PIN கொண்டும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் முதற்தரமான மின்சாரப் பொருள்கள்

"தீயில் இருந்து முற்றிலும் பாதுகாப்பானது"



Marketed BY
JAFFNA ELECTRICALS
No. 94 (6), Stanley Road,, JAFFNA
Tel: 021 2222353

MANUFACTURED BY
European General Company
Colombo


# துயர் பகிர்வு



யாழ்.போதனா வைத்தியசாலையில் X-Ray பிரிவில் கதிரியலாளராகக் கடமையாற்றும் ந.சத்தியேந்திரன் அவர்களது மூத்த சகோதரனான ந.கணேஸ்வரன் அவர்களினது மறைவினால் துயருறும் அவர்களின் குடும்பத்தாருடன் நாமும் துயர் பகிர்ந்து கொள்கின்றோம.

அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்போமாக.

சாந்தி! சாந்தி! சாந்தி!

X-Ray பிரிவு ஊழியர்கள்,
யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## அமரர் நடராசா கணேஸ்வரன்

**(Former Assistant farm Manager N.L.D.B)**



பருத்தித்துறை தும்பளையைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியா NSW ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ந.கணேஸ்வரன் (முன்னாள் உதவிப் பண்ணை முகாமையாளர் அம்பேவல நியூசிலாந்து பாற்பண்ணை) அவர்கள் அவுஸ்திரேலியாவில் 13.10.2008 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நடராசா காலஞ்சென்ற நாகரத்தினம் தம்பதியினரின் அருமை மகனும் சின்னத்தம்பி - தங்கரத்தினம் தம்பதியினரின் அருமை மருமகனும் கோமளாதேவி (அவுஸ்திரேலியா) யின் அருமைக் கணவரும் ஆனந்தலிங்கம் (ஆசிரியர்), யோகமலர் தம்பதியினரின் பெறமகனும் தயாநிதி (ஓய்வு பெற்ற தாதியார் – வவுனியா), சியாமளா (தும்பளை), தங்கேஸ்வரி (ஆசிரியர் – பருத்தித்துறை), முரளிதரன் (ஆசிரியர் – வவுனியா), ஸ்ரீ சுப்பிரமணியம் (U.K), சுகந்தி (ஆசிரியை – திருகோணமலை), சத்யேந்திரன் (கதிரியலாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலசுப்பிரமணிம் (வவுனியா), திகழ்ஒளிபவன் (பருத்தித்துறை), கிருஷ்ணராஜா (பருத்தித்துறை), மேகராஜா (விவசாய போதனா ஆசிரியர், திருகோணமலை), ராஜநேசரஞ்சினி (ஆசிரியர் – வவுனியா), சுதாமதி (சித்த வைத்திய கலாநிதி – வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நந்தினி (சுவிற்சர்லாந்து), ஜெயரஞ்சினி (திட்டமிடல் உத்தியோகத்தர், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் பணிமனை வடக்கு, திருகோணமலை), லலிதா (ஆசிரியர் - பருத்தித்துறை), வனிதா (ஆசிரியர் - பருத்தித்துறை) ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் உருத்திராதேவி செல்வராஜா, வேதநாயகி தம்பி ஐயா, புஸ்பராணி சுந்தரலிங்கம்,வரதலக்சுமி பரமேஸ்வரன், வேலாயுதர், யோகரஜா ஆகியோரின் மைத்துனரும் தயந்தினி, சரண்யா, ரிவகணேஸ், துஷிகரன், சுயானி, சிபித்தா, சஞ்சிதா, அஸ்வின் ஆகியோரின் அன்பு மாமனாரும் சாம்பவியின் அன்புப் பெரியப்பாவும் சுயேந்தினி, சுதர்சினி, சுயந்தன், சுபாசினி, சுலக்சனா, அகல்யா, சுமங்கலி, தாட்சாயினி, திலக்ஷி, திருஷியா, கிருஷாந், நிமலன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 21.10.2008 அன்று அவுஸ்திரேலியா நேரம் காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை C.J அன்றூஸ் மலர்ச்சாலையில் ஓபேன் (Auberun) ஆஸ்திரேலியாவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக் கிரியைகளுக்காக றூக்வூட் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

தொடர்பு இலக்கங்கள்: Aust.: 0061 296494704
P.Pd.: 060 221 7007 Vavu.: 024 4589043


### இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

### SALE

Digital printing mechine 10' feet for bargain sale.0117200665
(சி/555471)

### வீடு வளவு விற்பனைக்கு

சங்கானை ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் 6 பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு.
தொடர்பு. ந.முருகேசு (செல்லத்துரை),
ஆஸ்பத்திரி ஒழுங்கை,
சங்கானை.
(79275)

### விற்பனைக்கு

12" CHINA மரச்சீவல் பட்டடையும், அரிசி தீட்டல் மிசினின் FAN பெட்டியும் விற்பனைக்குள்ளன.
தொடர்பு:- கு.சோதிநாதன் (சோதி)
நாயகி மில், கோகுல வீதி,
அன்னங்கை, கோண்டாவில் வடக்கு.
021 4591659. (79249)

### திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணைத் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன் முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ் பூத்த சுய தெரிவு முறை முன்னோடி, தனி மனித நிறுவுநர். சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துனர் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனுடன் தொடர்பு கொள்க. கொழும்பு நேரடித் தொலைபேசி - 2360488, 2360694, 4873929.


## சிறப்பாக நடைபெற்ற வாணிவிழா

பண்டத்தரிப்பு வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையத்தில் வாணி விழா நிகழ்வுகள் அண்மையில் சிறப்பாகக் கொண் டாடப்பட்டன.

சனசமூக நிலையத் தலைவர் சி.அருள்நேசராசா தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

இந்த விழாவில் பல்கலைக்கழகக் கல்விக்கு தெரிவானோர், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் ஆகியோர் கௌரவிக்கப்பட்டு, பரிசில்களும் வழங்கப்பட்டன. (288-204)

## 'ஜெய்க்கா' திட்டத்திற்கு 10 பாடசாலைகள் தெரிவு

கோப்பாய், ஒக்.18

''ஜெய்க்கா'' விசேட செயற்றிட்டத்திற்காக 2009 ஆம் ஆண்டுக்கு யாழ்.கல்வி வலயத்தில் 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், வண்ணை நாவலர் வித்தியாலயம், யாழ்.சன்மார்க்க வித்தியாலயம்,அரியாலை சிறிபார்வதி வித்தியாலயம், கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம், அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரி, ஊரெழு கணேச வித்தியாலயம், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம், கோப்பாய் மகா வித்தியாலயம் ஆகிய 10 பாடசாலைகளே தெரிவு செய்யப்பட்டவை ஆகும். (203-72)


### பூச்சாடிப் பிரியர்களுக்கு DSI

வந்துவிட்டது......
D.S.I றபர் துகள்களால் தயாரிக்கப்பட்ட சிறிய, பெரிய அளவிலான கலர்ப் பூச்சாடிகள் விற்பனைக்குண்டு. வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் இடம் மாற்றி வைக்கக் கூடியவை.
தொடர்புகளுக்கு:- D.S.I - Ranpa
விற்பனை முகவர்
இல. 13, நவீன சந்தை [மேல்தளம்]
ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.
021 222 7621


# 6 ஆம் மாத நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
27 . 06 . 2003



இறைவனின் இல்லத்தில்
19 . 04 . 2008

## செல்வி இந்துஜா விஜயகுமார்

அன்பின் உறைவிடமே
பாசத்திற்குரிய மகளே இந்து!
எமை விட்டு நீ பிரிந்து ஆறு மாதம் ஆனாலும்
உன் நினைவு எமை விட்டு நீங்காதம்மா!
நீ இன்றி எமக்கு ஏன் இவ்வாழ்க்கை....
உன் வழியில் கூற்றுவனும் எம்மை
அழைக்கானோ?

உன் நினைவால் வாடும்:
அம்மா, அப்பா,
அப்பப்பா குடும்பம், அம்மப்பா குடும்பம்.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை. (79298)




SALE
தீபாவளி அதிரடி
SALE
SALE

# மலிவு விற்பனை

மலிவு விலையில்!....!
அனைத்து ஆடைகளுக்குமான விலைக்கழிவை வந்து பாருங்கள்.
உண்மை புரியும்.
(31.10.2008 வரை)

மிலேனியம் பெஷன் & பொம்பே பஷார்
(மலாயன் கபே முன்பாக) இல.10 மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.


# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 11.03.1933
உதிர்வு: 31.10.2007

## அமரர் பரமு முத்துக்குமாரசாமி

(ஓய்வு பெற்ற கட்டிடப் பரிசோதகர், கல்வித்திணைக்களம்)

ஆருயிர்த் துணைவனாய்,
அன்புமிகு தந்தையாய்,
பாசமுள்ள மாமனாய்,
மழலை மொழி பேசும் பேரனாய்,
அன்புள்ள சகோதரனாய்,
உதவிக் கரம் நீட்டும் அயலவனாய்,
அரவணைக்கும் உறவினனாய்
கொடுத்துச் சிவந்த கரமும்
கொடைக் குணமும் போனதுவோ
ஆண்டு ஒன்று!

50, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை மேற்கு

—குடும்பத்தினர்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதிப்பிள்ளை நவசோதி பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைத்துறைச் சிறப்புப் பட்டதாரி.

பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற அறுபதுகளிலேயே தமிழ் இலக்கியத்துறையில் ஆர்வம் காட்டிச் செயற்பட்டவர் இவர்.

சிறுகதை, கவிதை, நாவல், வானொலி நாடகம், மேடை நாடகம், சிறப்புக் கட்டுரைகள் ஆகிய பல்துறைகளிலும் தமது முத்திரையைப் பதித்தவர்.

சிறுவர் இலக்கியம், ஆய்வு ஆகியவற்றில் பெரு ஆர்வம் காட்டிச் செயற் பட்டவர். இவரது 'ஓடிப்போனவன்' என்ற சிறுவர் நாவல் பலரது பாராட்டுக்கும் பாத்திரமாயிற்று.

அன்பின் அணைப்பில், வாழ்க்கைத்துணை, ஒரே வகுப்பிலா போன்றவை இவரது சிறுகதைகளில் சிறந்தவை.

'ஆவிகன்' என்ற புனைபெயரில் தரமான பல ஆக்கங்களைப் படைத்தளித்த இவர் வெண்ணிலா, தமிழோசை, கதைப்பூங்கா என்ற பெயர்களில் இலக்கியச் சஞ்சிகைகளையும் வெளியிட்டு வந்துள்ளார்.

முதலாவது மற்றும் இரண்டாவது அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாடுகளில் இவர் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துப் பேசினார்.

அரச கருமமொழித் திணைக்களத்தில் மொழி பெயர்ப்பாளராகத் தொழில் புரிந்தவர். அரச சுவடிகள் திணைக்களத்தில் தமிழ்ப் பிரிவுக்குப் பொறுப்பான உயர் பதவியை வகித்தவர்.

லண்டனில் வசித்தகாலை அமரராகி விட்டார்.

# அன்பின் அணைப்பில்

எங்கும் வெள்ளை வெளேரென பனித்திரை. வானைத் தொடும் உயர்ந்த மலைகளைக் காண முடியவில்லை. பாதாளம் போன்ற பள்ளத்தாக்குகள் இருந்த இடமே தெரியவில்லை.

காலைக் கதிரவன் அப்பனிமறைப்பின் ஒரு மூலையில் மெல்ல எழுகின்றான். தனது சிவந்த கதிர்களை நீட்டி அந்தப் பனித்திரையை கிழிக்கின்றான். இருந்த இடம் தெரியாமல், பனி எங்கையோ ஓடி மறைகின்றது.

இயற்கை அன்னை புத்தாடை புனைந்து புன்முறுவல் பூக்கிறாள்......... எங்கும் பச்சைப்பசேல் என்ற தோற்றத்தை வெளிக்காட்டுகின்றன, மலைத் தொடர்கள் அவை - பொன் விளையும் பூமி; ஆமாம், தேயிலைத் தோட்டங்கள். இலங்கைக்குச் செழிப்பை அளிக்கும் செல்வச் சுரங்கங்கள்! அந்த தோட்டங்களில் ஒன்றுதான் 'லக்ஷ்மி தோட்டம்'.

லக்ஷ்மி தோட்டத்தின் வளைந்து வளைந்து செல்லும் பாதை பாம்புபோலத் தோன்றியது. அப்பாதையில் ஒரு தொழிலாளர் கூட்டம் சென்றுகொண்டிருந்தது. அவர்கள், லக்ஷ்மி தோட்டத்தில் வேலை செய்பவர்கள்.

அதோ அந்தக் கூட்டத்தின் கடைசியிலே, தனித்து தளர்ந்த நடையில் செல்கின்றாளே, அவள்தான் பார்வதி. அவளுக்கு இரண்டு பிள்ளைகள். அவளுடைய கணவனாகிய சுப்பனுக்கு, நெடுநாள்கள் இவ்வுலகில் வாழப் பலனிருக்கவில்லை. தானுண்டு, தன்பாடுண்டு என்று இருக்கத் தெரியாதவன். ஏனைய தொழிலாளர்களைப் போல அவனும் தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்து கொண்டான். தொழிலாளர் சங்கத்தின் பெரும் தலைகள் கூறியதைப் போல ஏதோ நன்மை கிடைக்கும் என்ற எண்ணம் அவனை அதில் சேரவைத்தது.

தொழிலாளரின் சம்பள உயர்வுக்கான 'ஸ்றைக்' செய்ய வேண்டும் என்று சங்கத்தில் தீர்மானம் கொண்டு வந்தனர். தொழிலாளர்களின் குடும்பத்தைப் போல தனது 'ஆமா' போட்டுத் தன் சம்மதத்தைத் தெரிவித்தான் சுப்பன். வேலை நிறுத்தம் - தொழிலாளரின் உரிமைப் போராட்டம் ஆரம்பித்தது. முடிவு - மூன்று தொழிலாளரின் உயிர் பலியிடப்பட்டது. பலர் காயத்திற்கு உள்ளானார்கள்.

தனது உயிரும் பலியிடப்படுமென சுப்பன் நினைத்தேயிருக்கவில்லை. மக்களைக் காக்க வேண்டிய கனவான்கள்- பொலிஸ்காரர்கள் அவனுயிரைத் தமது துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்கினர்.

சுப்பனின் மறைவிற்கும்அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அனுதாபத் தீர்மானம் பசியைத் தீர்மானிக்குமானால் நல்லதுதான். ஆனால், சுப்பன் அனாதரவாக விட்டுச் சென்ற அவனது மனைவி, மக்களின் நீண்ட பசியை அது தீர்க்கவில்லையே.

பார்வதிக்கு விதவை என்ற பட்டத்தை உலகம் அளித்தது. 'அப்பா' என்று அன்புடன் அழைக்க யாருமற்றவர்களானார்கள் இரண்டு குழந்தைகளும்.

லக்ஷுமி தோட்டத்தில் வேலைக்குச் சென்று கொண்டிருந்த பார்வதியின் முகத்திலே வழமையான மலர்ச்சி இல்லை. அவளுடன் சென்று கொண்டிருந்தவர்கள் அதை அவதானிக்கத் தவறவில்லை. 'இறந்துபோன கணவனின் எண்ணம் வந்துவிட்டதாக்கும்' என்று எண்ணி பார்வதியோடு அதிகம் கதைக்காமல் சென்றனர்.

ஆனால், அவர்களிடையே குசுகுசுப்புக் காணப்பட்டது.

பார்வதியிடம் கலகலப்பு இல்லை. அமைதியான நடை. மௌனமாகச் சென்றாள். அவளது உள்ளமோ அவளைப்போட்டுச் சித்திரவதை செய்தது.

(14 ஆம் பக்கம் பார்க்க....)

---

# நெறிமுறை ஒழுக்க வாழ்வு என்றும் உயர்வுதரும்

நமது செயற்பாடுகள் அனைத்துமே பொருள் திரட்டுவது என்ற நோக்கில் உரு வானவையல்ல. நம் வாழ்க்கையும் அதை ஒப்புக் கொள்கிறது. வீடு கட்ட வேண்டும். அதற்குப் பணம் வேண்டும். வேண்டிய பொருள் வாங்க வேண்டும். அதற்குப் பொருள் வேண்டும். குளிக்க வேண்டும். அதற்குப் பணம் பிரயோசனப்படுமா? நல்ல நீர் அல்லவா வேண்டும்? உடம்பெல்லாம் புழுக்கமாக இருக்கிறது. அதற்குக் கொஞ்சம் பணத்தை எடுத்து உடம் பில் தடவினால் வேர்வை நின்று விடுமா? நின்றுவிடாது. நல்ல காற்றுத்தான் வேண்டும்.

இப்படி எல்லாக் காரியங்களும் ஒவ்வொரு தேவையை முன்னிட்டும் வெவ் வேறான துறையில் இயங்குகின்றன. அதனால் காரியங்களின் நோக்கமும் வெவ்வேறாக இருக்கிறது. நோக்கத்தின் கண் தேவையாக வெளிப்படுகிற காரியம், நோக்கத்திற்கு இடையூறான விளைவைக் கண்டால் பொங்குகிறது. வெறி கொள்கிறது. காரியத்தைப் பிறப்பித்த மனிதனையே கவிழ்த்து விட்டு விட்டு, அது வேறாகி விலகி ஓடிவிடுகிறது.

காரியத்தை உண்டு பண்ணுகிற தேவை யையும், தேவையை உண்டு பண்ணுகிற நோக்கத்தையும் உருவகப்படுத்துவது மனம். மனத்தைச் சுத்தப்படுத்திக் கொண்டு, 'இந்தக் காரியத்தைச் செய்யலாமா? இதில் நிறை என்ன, குறை என்ன?' என்று ஒரு கணம் சிந்தித்துவிட்டால், நோக்கம் தூய்மையான வழியில் செல்லும். அது ஓட்டுகிற வழியில் போகின்ற வினையும் (காரியமும்) தூய்மையாகும்.

துணைவர்கள் நல்லவர்களாக இருந் தால் செல்வம் ஒன்றை மட்டும் கொடுக்கும். செய்யப்போகும் காரியம் நல்லதாக இருந்தால், அவன் வேண்டுகிற எல்லாவற் றையும் கொடுக்கும் என்கிறது திருக்குறள்.

துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்.

வேண்டுகிற அனைத்துமே வேண்டுமா? அப்படியானால் வேண்டாதவற்றை விட்டு விட வேண்டும்.

வள்ளுவப் பெருமான் வழி நெடுக 'உல கத்திற்கு அஞ்சுதல் வேண்டும்' என்று சொல்லி வருவதை நாம் மறந்து விடக் கூடாது. உலகம் மனிதனின் செயலை அளக்கும் ஒரு கண்ணாடி. உலகத்தை ஒரு வன் மறந்துவிட்டாலும், அவனை உலகம் மறந்துவிடுவதில்லை. அவனை அளந்து மற்றவருக்குச் சொல்லும் சூத்திரதாரி அது. மனிதனின் செயல் கோணலாக இருந்தால் உலகக் கண்ணாடியிலும் அது விகாரமாக விழுந்துவிடும். அந்த நிலையில்தான் பழியும், பாவமும் ஏற்படுகின்றன. எனவே தான் உலக இயல்புக்கு ஒத்தபடியும், பழிக்கு அஞ்சியும் நடக்க வேண்டுமென்று அடிக்கடி வலியுறுத்திக்கொண்டு போகிறார் வள்ளுவர்.

பழிக்கு அஞ்சுகிறபோது தான் செயல் தூய்மையானதாக இருக்கும். அந்தச் செயல் தூய்மையிலேதான் புகழும் கிடைக்கிறது. ஆகையால் -

புகழையும், அந்தப் புகழுக்குக் காரணமான அறத்தையும் உண்டாக்காத செயல்களை எக்காலத்திலும் செய்யாமல் விட்டு விடவேண்டும்.

என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

துன்பம் என்பது தான் செய்த காரியத்தினாலோ, செய்யாமல் விட்ட காரியத்தாலோ ஏற்படும் ஒரு சோக விளைவு. மிகவும் கீழ்த் தரமானவர்கள், அறிவில் அழுக்குச் சேர்ந்தவர்கள் தனக்கு வந்த துன்பத்தைத் தீர்ப்பதற்காக இழிவான செயலைச் செய்வார்கள்.

பசி என்பது ஒரு துன்பம் தான். அந்தத் துன்பத்தைப் போக்கிக் கொள்வதற்கு உணவு வேண்டும். அறிவிலிகள் அந்த உணவைத் திருடிப் பெறுவார்கள். உடை யவர்கள் இந்த இழி செயலைப் பார்த்து விட்டால் அவனைப் பிடித்து அடித்துத் துன்புறுத்துவர். இப்பொழுது அவனுக்குப் பசி என்ற ஒரு துன்பத்தோடு 'அடி' என்ற மற்றொரு துன்பமும் சேர்ந்து கொண்டு விட்டது! அறிவிலிகள் துன்பங்களை இப்படித்தான் சேர்த்துக் கொள்கிறார்கள். ஆனால் -

அசைவற்ற தெளிந்த அறிவினை உடைய வர்கள் துன்பத்தில் சிக்குண்டாலும், அந் தத் துன்பத்தைப் போக்கிக் கொள்ள இழி வான செயல்களைச் செய்ய மாட்டார்கள்!

இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

துன்பங்கள் ஆளைப் பொறுத்து, சமயத் தைப் பொறுத்து ஒவ்வொரு நிறத்தை அடைகிறது. வாசனைத் தைலம் பூசி முடி வாரிக் கொள்கிறவனுக்கு வாசனைத் தைலம் இல்லை என்றால் அதுவே துன்பம். பாலுக்குச் சீனி இல்லை என்றால் அதுவும் துன்பந்தான். கூழுக்குப் போட உப்பில்லை என்பதும், நாம் பயணிக்கக் காத்து நிற்கும் பஸ் ஒரு மணி நேரமாக வரவில்லை என்பதும் துன்பங்கள்தாம். இவை எல்லாம் சபல உணர்ச்சியால் உற்பத்தியாகும் துன்பங்கள்.

பெரியவர்கள் கூறும் துன்பம் இத்தகையது இல்லை. தாய் பட்டினியாகக் கிடப்பதை மகன் பார்க்க நேரும் அவஸ்தையையே உண்மையான, உயர்ந்த துன்பம் என்கிறார்கள். பாலூட்டிச் சீராட்டிப் பாராட்டிய அன்னை பசி நோயால் வருந்தும் காட்சி எத்தனை உருக்கமானது? அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் மகன் நிலை எத்தனை துயர மானது. அவளுக்கு வேண்டிய உணவைக் கொடுக்க அவனுக்கு வசதி இல்லை. எம்முறை யாலும் உணவைப் பெற்றுத் தாய்க்குக் கொடுக் கவே அவனுடைய பாசம் தூண்டும்.

அந்த இக்கட்டில், தாய்க்கு எப்படியானாலும் உணவு கொடுக்க வேண்டிய கடமை நெருக்கடியில் கூடப் பெரியோர்கள் பழி எனச் சொன்ன காரியங்களைச் செய்யக் கூடாது.

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

பழியும், பாவமும் பயக்கும் காரியங்களைச் செய்யக்கூடாது என இதுவரை போதித்த வள்ளுவர் வினைத்தூய்மை இல்லாதவர்களின் கதியையும், பழிபாவத்திற்கு அஞ்சாத கொடுமைக்காரர்களின் முடி வையும் நினைந்து இரங்கிப்பாடுகிறார்.

கடிந்து கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்.

அந்தக் காரியங்கள் முடிந்தாலும் துன் பத்தையே தரும்.

வினைத் தூய்மை இல்லாமல் பொருளைச் சேர்த்துப் பாதுகாத்தல், பச்சை மண் கலத்திற்குள் நீரைவிட்டு அதைப் பாதுகாத்து வைப்பதைப் போன்றது.

சலத்தால் பொருள்செய்து ஏமார்த்தல் பசுமண்
கலத்துள் நீர் பெய்து இரீஇ யற்று.

'பசுமண் கலம்' என்பது வேக வைக்கப் படாத பச்சை மண் கலம். அதில் நீரைப் பாதுகாத்து வைக்க முடியாது. அதைப் போலத்தான் தீய காரியங்களால் பொருளைப் பாதுகாத்து வைப்பதும். இதுவும் நிலைக்காது.

வாழ்க்கையின் சிறப்புக்கு வினைத் தூய்மையே சுருதி. இந்தச் சுருதியை வைத்துக் கொண்டு எப்படி வேண்டுமானாலும் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ள இயலும். அதனால் பெருமை கிடைக்கும். சுருதி பிசகினால் அபஸ்வரம்; வாழ்க்கை அழிவு. ✱

- வாசவன் -

## - உலகத்தை மனிதன் மறந்து வாழ முயன்றாலும் உலகம் மனிதனை என்றுமே மறப்பதில்லை -



---

# இப்படியும் ஒரு மாப்பிள்ளை



அன்புளான் அறிவில் மிக்கான்
அமைதியே உருவம் ஆனான்
கண்ணெனும் கல்வி தன்னை
கருத்தொடு கற்றுத் தேர்ந்தான்
திண்டிடக் "கல்லைப்" போன்ற
திரண்ட தோள் வலிமை மிக்கான்
அழகுறத் தமிழைக் கற்று
அடைந்தனன் (எம்.ஏ) பட்டம்
மேடைகள் தோறும் ஏறி நாளும்
மேன்மை சேர்தமிழின் மாண்பை
அமிழ்தென இனிக்க வல்ல
அரியபேர் உரைகள் செய்வான்
கேட்டவர் வியந்து மெச்சி
கிளுகிளுப் பெய்தி நிற்பர்
குறிகளும் நெறிகள் யாவும்
குணமுளான் என்றே செப்பும்
இன்னிசை இராகம் சொட்ட
இனிய நற் தேவாரத்தை
பண்ணுடன் பாடக் கேட்போர்
பரவச மெய்தி நிற்பர்
எழுதிடும் எழுத்திலெல்லாம்
இன்பத் தமிழது நடனமாடும்
நடிப்பினில் பதக்கம் பெற்றான்
நாவன்மையில் இணையிலாதோன்
உயர் பெரு பதவி பெற்று
ஊதியம் நிறையப் பெற்றான்
அகவை நாற்பதைத் தாண்டினாலும்
அவன் திருமணம் முடித்தானில்லை
உடுப்பது வேட்டி அன்றி
நீள் கால்சட்டை அணிய மாட்டான்
காலணி செருப்பே அன்றி
கனத்த "சப்பாத்து" அணிந்தறியான்
வெண்புகை தொட்டறியான்
வீரன் போல் "மோட்டு" சயிக்கிள் ஓடி
வீணன் போல் அலைய மாட்டான்
அன்னைக்கோ இவனே மைந்தன்
அனைத்துமே இவனே ஆனான்
அடுக்களையில் அன்னைக்காக
அவன் பெரும் உதவி செய்வான்
முத்தவர் இவனைக் கண்டு மெச்சி
முழுதுமாய் வியந்து நிற்பர்
பற்பல திருமணங்கள் பேசினாலும்
பலனேதும் கிட்டவில்லை
வேட்டிக்கார மாப்பிளை இவனை
விரும்பவே மாட்டோ மென்றார்
'விஸ்கியை பிறண்டி'' தன்னை
விரும்பாத மூடனை நாம்
எப்படி கைப் பிடிப் போமென்று
ஏந்திழையார் தூற்றி நிற்பர்
வெண்புகை இழுக்கா வீணன்
வெறுங்காலில் நடக்கும் மூடன்
எப்படி இவனை நாங்கள்
ஏற்பது கணவனாக என்றார்
இவ்வாறே கன்னியர் எல்லாம்
இழித்தனர் பழித்து நின்றார்
தப்பாது தமிழைக் கற்று
தமிழ்மணம் கமழ வாழ்ந்தோன்
இப்போதும் தமிழ்த்தாயானை
இதயத்தில் இருத்தி விட்டு
தப்பாது தமிழ்த் தொண்டாற்றி
தாயோடு வாழ்கின்றானே!
'உத்தமப் பெண்டிர்' வாழும்
உவமையிலா நாடு வாழி!!
இல்லை, இல்லை வாழுமா?.........



விகடகவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் அணைப்பில்.....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அன்று அதிகாலையில் நடந்த அந்தச் சம்பவம், எண்ணத்திரையில் மீண்டும் மீண்டும் தோன்றியது. அவளது உள்ளத்தைக் கழுகுபோலக் கொத்திக் கொத்திக் குதறியது.

ஒரு கணக்கு அப்பியாசப் புத்தகம் வாங்கப் பதினைந்துசதம் கேட்டான் அண்ணன். 'லெற் பென்சில்' வாங்க பத்துச் சதம் கேட்டாள் தங்கை. 'காசு தராவிட்டால் பள்ளிக்குப் போகமுடியாது - மாஸ்ரர் அடிப்பார்' என்று காசு தரும்படி விடாப்பிடியாய் நின்றனர், இருவரும். பார்வதிக்கு அவர்களின் கரைச்சல் பொறுக்க முடியவில்லை.

மூன்று பேரின் மூன்றுநேரக் கஞ்சிக்காகப் படாதபாடுபட்டுக் கொண்டிருக்கும் அவளால் அந்த நிலையில் என்ன செய்யமுடியும்!

அவளிடம் அப்போது பணம் என்று இருந்தது இரண்டு ரூபாய் மூன்றுசதம்தான். அதில் இரண்டுரூபாய் அடுத்த லயத்தில் இருக்கும் மாரிமுத்துக்குக் கொடுக்க வேண்டிய கடன் காசு. அந்த மாரிமுத்துவின் நச்சரிப்பை இன்னும் பொறுக்க முடியாது. இன்றே கொடுத்து விடவேண்டும்.

அவள் அவசரமாகப் புறப்படும் நேரத்தில் பிள்ளைகள் காசு கேட்டுச் சிணுங்கியதைப் பார்வதியால் பொறுக்க முடியவில்லை.

''காலங்காத்தாலே யாரிடம் போய்க் கடன் கேட்க. நாளைக்குத் தர்ரேன் போங்கடா பேசமே'' என்று எரிந்து விழுந்தாள். அவர்களோ போவதாக இல்லை. விடாப்பிடியாய் நின்றனர்.

தோட்டத்திலே வேலை தொடங்குவதற்குச் சங்கு ஊதியது.

''பார்வதீ வேலைக்கு வரவில்லியா''- அடுத்த வீட்டு தங்கம்மாவின் குரல் காதுகளில் ஒலித்தது.

''நீ வைச்சீக்கிற காசைக் கொடேன் ஆயா''- வெடுக்கென்று கேட்டான் பையன்.

பார்வதிக்குப் பொத்தென்று கிளம்பியது ஆத்திரம். அந்த ஆத்திரத்தில் அவள் பத்திரகாளியானாள்.

சொருகியிருந்த அகப்பையை விருக்கென்று இழுத்தெடுத்தாள். இருவருக்கும் தாறுமாறாக அடித்தாள். துடிக்கத் துடிக்க அடித்தாள். அகப்பை முறிந்து விட்டது. அவளின் ஆத்திரமோ அடங்கவில்லை. இரண்டு கைகளாலும் மாறிமாறி அடித்தாள். ஆத்திரம் தீரும்மட்டும் அடித்து ஓய்ந்தாள்.

பையனின் உடம்பெங்கும் காயத்தழும்புகள், முருங்கக்காய் போல வீங்கிக் கிடந்தன. இளையவளின் முகம் 'பொம்' என்று வீங்கி விட்டது. ''போய்த் தொலைங்க பள்ளிக்கு''- பார்வதி சீறினாள்.

அண்ணன், தங்கையின் தோள்களில் கையைப் படர்த்தி அணைத்துக் கொண்டே லயத்தின் படியில் இறங்கினான். அப்போது அவனுக்கு அவனது தந்தையின் ரோசம் வந்ததோ என்னவோ! திடீர் என்று பின்னே திரும்பித் தாயை முறைத்துப் பார்த்தான்.

''நீ கூடாத அம்மா''- விம்மலுக்கும் பொருமலுக்குமிடையே சொல்லிவிட்டுத் திரும்பி நடந்தான்.

பார்வதியின் ஆத்திரம் அடங்கி அழுகையாக மாறிற்று. கண்ணீர் மல்க, தான் பெற்ற செல்வங்கள் கதறலும் கண்ணீருமாக கைகோர்த்துச் செல்வதைப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

தனக்கேற்பட்ட துயரத்தை ஓரளவு அடக்கிக் கொண்டான் பையன் - அவன் ஆண் குழந்தைதானே! ஆனால் தங்கை அழுதுகொண்டே மலைச் சரிவில் இறங்கிச் சென்றாள். அவளது விம்மல் ஒலி அவள் வெகுதூரம் போகுமட்டும் பார்வதியின் காதில் கேட்டுக் கொண்டேயிருந்தது. தாயின் நினைவு தன் பிள்ளைகளுடனே சென்று கொண்டேயிருந்தது.

தோட்டத்தில் வேலை செய்யக் கூடியநிலையில் அவள் இல்லை. அவளது மனம் வெடித்துச் சுக்குநூறாகிச் சிதறிக் கிடந்தது. ஆயினும் என்ன செய்வது. வேலைக்குப் போகவிடிலோ ஒருநாள் பட்டினி கிடக்க வேண்டியது தான். மனதிலே போராட்டம். உடலிலே சோர்வு. இவற்றைக் காட்டியது அவளது நடை.

மூன்று நேரக் கஞ்சியை எதிர்பார்க்கும்ஒருசாண் வயித்துக்கும், பாசவெள்ளத்தினுள் என்றோ அமிழ்ந்து போன உள்ளத்துக்குமிடையில் போராட்டம். ஓயாதா போராட்டம்!

அவளது நடை தளர்ந்தது;
போராட்டம் வலுத்தது;
நடையின்னும் தளர்ந்தது;
ஈற்றில்............

போராட்டம் முடிந்தது; ஒரு சாண் வயிறு செத்துமடிந்தது! நின்றாள்! - திரும்பிவிட்டாள்!

இப்பொழுது அவள் நடக்கவில்லை! ஒரே ஓட்டமாக ஓடினாள்! குடிசையை நோக்கியல்ல.

அதை அவள் தாண்டிவந்து விட்டாள். பள்ளிக்கூடத்தை நோக்கி ஓடினாள். ஒருநாள் பட்டினி கிடக்க வேண்டுமே என்ற எண்ணத்தை மறந்து ஓடினாள் - இல்லை! அந்த எண்ணத்தைக் காலால் மிதித்து சிதைத்துக் கொண்டே ஓடினாள்.

பள்ளிக்கூடத்தைக் கடந்து பார்வதி வாசலிலே அப்படியே நின்றுவிட்டாள். மாணவர்கள் வரிசையாக நின்று தேவாரம் பாடிக்கொண்டு இருந்தனர்.

''அம்மையே அப்பா, ஒப்பிலா மணியே, அன்பினில் விளைந்த ஆரமுதே.........''- இந்த அமைதியான சூழ்நிலையின் அந்த திருவாசகம் அவளை உருக வைத்தது. தட்டின் இடுக்கு வழியே எட்டிப் பார்த்தாள்.

அவளது மகன் முருகன் - பக்கத்தில் மகள் வள்ளி. அந்த முகங்களில் இன்னும் கண்ணீர் காயவில்லை. கை கூப்பி, கண்மூடி மாணவர்கள் வரிசையில் நின்று பாடிக் கொண்டிருந்தனர் முருகனை. கணீர் என்ற குரல் அவளுக்குத் தெளிவாக ஒலித்தது.

பார்வதியின் கண்களில் நீர் திரண்டது. கைகள் கூம்பின ''அன்பினில் விளைந்த ஆரமுதே.......''- ஆசிரியர் திருப்பித் திருப்பி அதைச் சொல்லிக் கொடுத்தார். அந்தத் தொடர், அவளது உள்ளத்தைக் கசக்கிப் பிழிந்தது. 'ஓ' வென்று அழவேண்டும் போல் இருந்தது. பார்வதி அழுகையை அடக்கிக் கொண்டாள்.

தேவாரம் முடிந்ததும் ''கடவுளே! ஆசிரியர் கொப்பி, பென்சிலும் கொண்டு வராததற்காக என் குழந்தைகளை அடிக்காமல் பார்த்துக்கொள்'' என்று பார்வதி மன்றாடிக் கொண்டாள். ஆசிரியர் முன் செல்ல அவளுக்குத் துணியவில்லை.

குழந்தைகளை எப்படி ஆற்றுவது, அவர்களின் காயங்களை எப்படிப் பார்ப்பது? அடியின் மறைவிலேயே வந்து விட்டாள். சற்று நேரத்தின் பின் என்ன தோன்றியதோ, தட்டியின் இடுக்குகளுக்கிடையே பார்வையைச் செலுத்தினாள். அவள் கண்டது - ஆசிரியர் அவனை அணைத்து அவனின் காயத்திற்கு மருந்து இட்டுக் கொண்டி ருந்தார். தன் பெரும் மூச்சு - ஆசிரியர் உருவத்தில் இறைவனைக் கண்டாள் பார்வதி.

''ஏண்டா! உன் அப்பன் செத்த பிறகு உன் அம்மாவுக்கென்ன வெறியா வந்தது''- ஆசிரியரின் வார்த்தைகள் அம்பாக வந்து அவளைத் துளைத்து உள்ளத்தைத் தைத்தன. இனி அவளுக்கு அங்கு நிற்க முடியாது. ஆனால் அவளது உள்ளம் வெடித்துச் சுக்கு நூறாகியது. குடிசையை நோக்கிச் சென்றாள். துயரவெள்ளத்தை தாங்கிக் கொண்டிருந்தாள்.

வெள்ளத்தின் பாய்ச்சல் வேலியை உடைத்து விட்டது.

குடிசைக்குள் குப்புற விழுந்து குமுறிக் குமுறி அழுதாள்!

அவளது தலைக்கு மேல் ஒரு மணித்தியாலமாகிவிட்டது. லயத்தின் படியில் நின்றுகொண்டிருந்தாள் பார்வதி. அவளது உள்ளத்திலே உவகை; முகத்தில் மலர்ச்சி. பாடசாலையிலிருந்து கைகோர்த்துக் கொண்டுவரும் தன் குழந்தைகளை நோக்கி விரிந்த கைகளுடன் ஓடினாள். இருவரையும் இரண்டு கைகளுள்ளும் அணைத்துக் கொண்டு, குடிசைக்குள் நுழைந்தாள். மாறி மாறி இருவருக்கும் முத்தங்கள் சொரிந்தாள்.

''அம்மா எங்க மாஸ்ரர் நல்லவரு'' - முருகன் பேசினான். பார்வதி ஊமையாகி விட்டாள்.

''எங்க மாஸ்ரர், எனக்கு கொப்பியும் தங்கச்சிக்கு லெற் பென்சிலும் வாங்கிக் கொடுத்தாரு''- பார்வதி இப்பொழுதும் பேசவில்லை. தன் இரு குழந்தைகளையும் மார்போடு அணைத்துக்கொண்டு கண்ணீர் சொரிந்தாள்.

தான் செய்த குற்றத்தை மன்னிக்கும் படி அவள் உள்ளம் மன்றாடியது.

''ஏ......மா அழறே'' - பெற்றெடுத்த தாயின் கண்ணீர் வள்ளியின் உள்ளத்தை உருக்கியது.

''ஐயோ, கண்ணே''- பார்வதி அலறியே விட்டாள்.

தன் இரு குழந்தைகளுக்கும் தான் உண்டாக்கிய காயத்தழும்புகளில் மாறி மாறி முத்தமாரி பொழிந்தாள். பாசவெள்ளம் பாய்ந்தோடியது. அதைவிட மாற்றுமருந்து வேறு எதையும் அவளால் கொடுக்க முடியவில்லை.

''உங்க ரெண்னு பேரையும் காலேலை நன்னா அடிச்சுட்டேன். என்னை மன்னிச்சுக்கோங்க'' - தாயின் கண்ணீரைத் துடைத்தாள் வள்ளி.

''அம்மா! அண்ணனும் நானும் பணிஸ் வைச்சிருக்கோம். நாமமூனுபேருஞ் சாப்பிடுவோம்''- வள்ளி பேப்பரில் சுற்றி இருந்த பணிஸை வெளியே எடுத்தாள்.

குழந்தைகளை இறுக அணைத்தாள் பார்வதி. வேலைக்குப் போகாததால் அன்றைய கூலி தனக்கு இல்லை என்பதை அந்த நிலையில் அவளால் எப்படி உணரமுடியும்?

அதை உணரமுடியாமலாக்கி விட்டது- அவளின் பாசம்!

அதை அழித்து விட்டது - அவளின் அன்பு!

அன்பின் அணைப்பில் துன்பம் ஏது!

[ நன்றி :சுதந்திரன் சிறுகதைத் தொகுதி ]

* * *

## சொற்சிலம்பம் - போட்டி இல: 32

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | 5 | 6 |
| 7 | | | 8 | | | | |
| | | 9 | | | | 10 | |
| 11 | 12 | | | | 13 | | |
| 14 | | | | 15 | | | 16 |
| | | 17 | 18 | | | 19 | |
| | 20 | | | | 21 | | |
| 22 | | | | | | | |

அனுப்புபவர் பெயர்:..................................................

விலாசம்:..................................................

..................................................

கையொப்பம்:..................................................

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.*
*அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 32**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)**
**லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

*என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (29.10.2008) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக் கலாம்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல.32இல் வெற்றிபெற்றோர் விபரம் 02.11.2008 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

**இடமிருந்து வலம்**
1. நட்சத்திரம்/கற்பில் சிறந்தவள்/ வசிட்டன் மனைவி.
5. அரசன்/கடவுள்/வீடு.
7. புசித்தால் போய்விடும்.
8. பிதுக்குதல்.
9. சைவர்களின் முழுமுதற் கடவுள்.
10. இது அறுபத்து நான்காம்.
11. கூடுதல்.
13. கிணற்றில் தண்ணீர் அள்ள உதவும் .
14. கொடுக்கும்.
15. சிவாஜி கணேசனுக்கு கைவந்த கலை.
17. இரவு அல்ல.
19. மண்ணுக்குள் மறை.
20. கை கூப்பு.
22. மேனி.
23. மைதானம்.

**மேலிருந்து கீழ்**
1. அளவுக்கு அதிகம்.
2. நாக்கு அறியும் சுவை இது.
3. செய்தி/புதினம்.
4. வலு.
5. பதறுகை.
6. தமிழ் நாட்டின்சிவதிருத்தலமொன்று
9. தில்லைப்பதிக்கு மறுபெயரொன்று.
12. சிஷ்யன் கற்பது இவரிடம்.
13. மீனவர்கள்கடற்கரையில்அமைப்பது.
15. வழங்கு.
16. நிலத்துக்குள்ளிருந்து கிடைப்பது.
18. தடி.
20. தாண்டு.
21. ஏற்கனவே எழுதப்பட்டு விட்டது..

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 30 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) ஸ்தாபகர் (5) துவை (7) வரலாறு (8) விவா (9) ரம் (10) வாராவாரம் (13) மகம் (14) பலவான் (16) பதி (18) ஆக்கல் (19) தரும் (20) மோதல் (21) அரப்பு (22) தின் (23) கொழும்பு

**மேலிருந்து கீழ்**
(1) ஸ்வரம் (2) தாரம் (3) பலா (4) கறுவா (5) துவரம்பருப்பு (6) வைரம் (8) விவாக (11) ராமன் (12) வில்கல் (14) பக்தன் (15) வால் (17) திம்பு (18) ஆமோதி (19) தரம் (21) அழு

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 30 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர்

**1 ஆம் பரிசு**
சி.கஜாகரன் ,
உபதபாற் கந்தோர் ஒழுங்கை.
மானிப்பாய் வீதி,
தாவடி தெற்கு, தாவடி.

**2 ஆம் பரிசு**
க.சுதாகரன்,
புள்ளி விபரக்கிளை,
கச்சேரி,
யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
செல்வி ஆ.[illegible],
தரம் 11B
யா/வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

**பாராட்டுப் பெறுவோர்**

(1) திருமதி [illegible],
'ஸ்ரீ இல்லம்' இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

(2) சி.கோகுலவர்த்தனி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

(3) [illegible] கதிரமலை,
'தாயகம்' சிறுவர் இல்லம்,
பொற்பதி வீதி, கோண்டாவில்.

(4) தி.[illegible],
கீரிமலை வீதி,
பண்டத்தரிப்பு.

(5) [illegible] சேகரன்,
இல: 8, பிளச்சா ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் பின்னகர்வின் உண்மை வடிவம் என்ன?

பல தசாப்தங்களைத் தாண்டி நீண்டு தொடரும் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒரு முக்கியமான திருப்பத்தில் வந்து மையம் கொண்டுள்ளது. வர லாற்றின் மோசமான திருப்பம் இது. இந்த இக்கட்டான இடத்தில் வைத்து எமது போராட்டத்தை நாமே புரிந்து கொள்ள முற்படுவதென்பது கேலிக்கிடமானது மட்டுமல்ல நகைப்புக்குரிய தும்கூட.

ஒரு போராட்டம் தொடர்பான புரி தல் என்பதை பொதுவாக இரு வகை மைப்படுத்தலாம். ஒன்று அந்தப் போராட்டத்தை நடாத்தும் அக்குழுமம் தம்ம ளவில் அதைப் புரிந்து கொள்வது இரண்டு தமது போராட்டத்திற்கு வெளியில் ஒரு புரிதலை ஏற்படுத்துவது. உண்மையில்ஆரம்ப கட்டத்திலிருந்து நகரத்தொடங்கிவிட்ட ஒரு போராட்டத்தைத் தொடர்ந்து இவ்விரு பிரிவுகளாகப் பிரித்து வைத்துப் பார்ப்பது அபத்தம் மட்டுமல்ல ஒரு வகையான உள்ளக மோசடியும் கூட. ஏனெனில் தாம் ஏதோ ஒரு வகையில் அடக்குமுறைக்குள்ளாகிறோம்- ஒடுக்கப்படுகிறோம் என்ற நீண்ட புரிதலின் விளைவாகவே அக்குழுமத்திலிருந்து அப்போராட்டம் மேலெழுந்ததாகப் பொருள் கொள்ள வேண்டும். எனவே ஒரு போராட்டம் தொடர்பான தொடர் புரிதல் என்பது காலப் போக்கில் அக் குழுமத்திற்கு வெளியிலேயே நடைபெற வேண்டிய தொடர் நிகழ்வாக இருக்கிறது.

ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான புரிதலின் நிலை என்ன? நாம் சுற்றி சுழன்று மீண்டும் பழைய இடத்திற்கே திரும்பியிருக்கிறோம். அல்லது தொடங்கிய இடத்திலேயே நீண்ட காலம் தங்கிவிட்டோம் போல் தெரிகிறது. ஏனெனில் அண்மையக் கள நிலவரங்களை முன் வைத்து நாம் உளறத் தொடங்கியிருப்பதும் அதனூடாக நாம் அடைந் திருக்கும் களைப்பு மேற்படி புரிதலைத் தவிர வேறெதனையும் கற்பிக்க வில்லை.

இந்த உண்மையை இந்த இக்கட் டான சூழலில் வைத்து புரிந்து கொள்ள நேரிடுவது துரதிஸ்டவசமானது மட்டுமல்ல பெரும் துயர் தருவதும்கூட.

போராட்டம் என்பதன் பொருள் விரிவானது. இதை சிறிய கட்டுரை ஒன்றினூடாக வியாக்கியானம் செய்யமுடியாது. அத்தோடு இதற்கு ஒற்றைப் பரிமாணத்தில் விளக்கமும் அளிக்க முடியாது. நாம் ஒரே ஒரு உண்மையை மட்டும் முன்வைத்து இக்கட்டுரையை வளர்த்துச் செல்வோம். அதாவது ஒரு போராட்டத்தின் இறுதி இலக்கை கள நிலவரங்கள் தீர்மானிப்பதில்லை – அப்போராட் டத்தின் படிமுறை வளர்ச்சியில் மட்டுமே பிரதான பாத்திரம் வகிக்கின்றன. இந்த அரசியல் போராட்டத் தத்துவத்தை நாம் அர்த்தத் தெளிவின்றி புரிந்து வைத்திருப்பதன் விளைவுதான் 30 வருட கால போராட்டத்தை 3 மாதங்களில் மாறிப்போயிருக்கும் கள நிலவரங்களுடன் ஒப்பிட்டு உளறத் தொடங்கியிருப்பது.

மாறிப்போயிருக்கும் கள நிலவரங் களை மையப்படுத்தி போராட்டம் குறித்த பிரக்ஞையின்றி நாம் அல்லா டத் தொடங்கியிருப்பதால் நாம் அதை மட்டும் கருப்பொருளாக்கி போராட்டம் குறித்த ஒரு தேடலை நிகழ்த்துவோம்.

இந்த இடத்தில் ஒன்றை நினைவில் கொள்வோம். மேற்படி களநில வரங்களை மையப்படுத்திய தேடல் என்பது ஒரு போராட்டத்தின் உண்மை முகத்தையும் அதன் அரசியல் கனபரிமாணத்தையும் அதன் இறுதி இலக் கையும் ஒரு நேர்கோட்டில் வைத்து இடைவெட்டக்கூடியதல்ல. மாறாக அதன் மையத்தை ஊடறுக்காமல் அதைச்சுற்றி பயணிப்பவை. எனவே கள நிலவரங்கள் மட்டும் ஒரு போராட்டத்தின் பரிமாணத்தை ஆய்ந்தறிய உதவாது என்பது மட்டுமல்ல அவை மையக் காரணிகள் இல்லையென்பதையும் நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

புலிகள் தோற்றுக்கொண்டிருக் கிறார்கள். எங்கும் இதுதான் பேச்சு. இலங்கை அரசியல் மட்டத்தில் மட்டுமல்ல இலங்கைத் தீவிற்கு வெளியிலும் பெரும்பாலும் இது நம்பப்படுகிறது. தெற்காசியச் சூழலிற்கான சர்வதேச காய்நகர்த்தல்கள்கூட இதை ஒரு முடிவாகவே ஏற்றுக்கொண்டு நகர்த்தப்படும் செய்தி உங்களில் பலருக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் உண்மை என்னவோ அது தான். புலிகளின் தோல்வியை புலிக ளைத் தவிர எல்லோரும் ஏற்றுக்கொண் டிருப்பது மறுக்கப்பட முடியாத உண்மை. ஏனெனில் புலிகள் அடிப் பார்கள் வெடிப்பார்கள் என்று எழுதப் படுகிற தமிழ்த்தேசிய ஊடக ஆய்வுகள்கூட புலிகளின் தோல்வியிலிருந்தே கட்டியெழுப்பப்பட்டுக் கொண் டிருப்பதை கூர்ந்து அவதானிப்பவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

இந்த ஒட்டுமொத்த சிந்தனைக ளின் விளைவுதான் தமிழ் மக்களின் பதட்டமாக - அச்சமாக மாறிப்போயுள் ளது.

உண்மையில் புலிகள் தோற்றுக் கொண் டிருக்கிறார்களா? இது கொஞ்சம் சிக்கலான கேள்வி. ஆனால் இந்த சிக்கலான விடயத்தை பலர் தமிழ்ச்சூழ லில்க்கூட அநாவசியமாகக் கையாள் வதுதான் அதிர்ச்சியளிக்கிறது. ஒரு விடுதலைப்போராட்ட அமைப்பிற்கு முன்னால் – அதன் பரிமாண வளாச்சியில் தோல்வி என்ற பதம் எந்த வகையில் பொருந் துகின்றது என்பதே சிக்கலுக்குரிய கேள்வியாக இருக்கும் போது சில முடிவுகளை வெளியிடு வதை எந்த அடிப்படைக்குள் சேர்த்து வைத்து புரிந்து கொள்வதென்று தெரியவில்லை.

ஒரு விடுதலைப் பேராட்ட அமைப் பின் அகராதியில் தோல்வி என்ற சொல்லாடலே இருக்க முடியாது. இது உள்ளூர் வரலாறு இல்லை – உலக வரலாறு. தோல்வி என்ற பதம் நீக்கப்பட்டு பின்னடைவு என்றே சொல்லே அண்மைக்காலம் வரை புழக்கத்திலிருந்து வந்தது. இது கூட பின்னகர்வு என்ற பதமாக பரிணாம மாற்றமடைந்து நீண்ட நாள்களாகி விட்டது.

தமிழ்த்தேசிய ஊடகச் சூழலில்கூட இந்தப் பதம்தான் பிரயோகத்திலுள்ளது. ஆனால்இது குறித்த முழுமையான புரிதலின்றி - அர்த்தத்தெளிவின்றி பிரயோகித்ததன் விளைவு தான் தற்போதைய களநிலவரங் களின் முன் தமிழ்த் தேசிய எதிர்ப்பாளர்களால் இந்த சொற் பிரயோகங்கள் கேலிக் குள்ளாகியிருக்கிறது - அதன் வழி தமிழ் மக்களும் நம்பிக் கையிழந் திருக்கிறார்கள்.

ஒரு விடுதலைப்போராட்ட அமைப் பின் படைத்துறை வெற்றியென்பது அப்போராட்டத்தின் ஒரு பாய்ச்சலாகவும் தோல்வி என் பது அப்போராட்டத்தின் அரசியற் தளம்பலையும் குறிக்கும். இது ஒரு பொதுவான வாய்ப் பாடு. ஆனால் ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பைப் பொறுத்தவரை பல சமயங்களில் தோல்விகூட பெரும் அரசியல் பாய்ச்சலாக மாறிவிடும் அபூர்வம் நிகழ்ந்துவிடுவதும் உண்டு. தமிழீழ விடுதலைப்போராட்டத்திலேயே இதற்கு தெளிவான உதாரணங்கள் நிறைய உண்டு.

தொண்ணூறுகளின் நடுப்பகுதிகளில் சந்திரிகா அம்மையார், 122 மி. மீ ஆட்லறி எறிகணைச் செலுத்திகளைக் கொண்டு யாழ். குடாவை முற்றுகைக்குள்ளாக்கி புலிகளைப் பின்னடையச் செய்தார். மரபுவழி இராணுவத்தின் தேவையை மட்டுமல்ல 122 மி.மீ ஆட்லறி எறிகணைச் செலுத்திக ளினது தேவையையும் வலிமையையும் உணர்ந்து புலிகள்பின்வாங்கினார்கள். அந்தப் பின்னடைவைக் கூட ஒரு வரலாற்று இடப்பெயர்வின் மூலம் அரசியல் வெற்றியாக மாற்றினார்கள். சிங்களத்தின் வெற்றிச் செய்தியை விட புலிகளுடன் ஒட்டுமொத்த மக்களும் வெளியேறியது குறித்தான நிகழ்வு அன்று உலக அரங்கில் தமிழர் தாயகம் தொடர்பான ஒரு முக்கிய செய்தியைப் பதிவு செய்தது.

இதுதான் ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பின் தோல்வியில் கூட அந்த அமைப்பு சார்ந்தும் அதன் நோக்கம் சார்ந்தும் எழுதப் படும் பன்முக அரசியல் பரிமாணம் ஓயாத

**பிரான்ஸிலிருந்து பரணி**

அலைகள் – 03 அடித்த போது – சிங்களம் சிதறி ஓடிய போது எந்த அரசியலும் எழுதப்பட்ட தாக எமக்குத் தெரியவில்லை.

யாழ். குடாவிலிருந்து பின்வாங்கி மரபு வழி இராணுவத்தை உருவாக் கியதோடு மட்டுமல்லாமல் 120 மி.மீ , 122 மி.மீ ஆட்லறி எறிகணைச் செலுத்திகளையும் கையகப் படுத்தினார்கள் புலிகள். விளைவு சிங்களம் புறமுது கிட வேண்டிய நிலை ஏற்பட்டது. படைவலுச் சமநிலை தோன்றியது. புரிந்து ணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியது. இது தோல்வியிலிருந்து கற்ற பாடங்களினூடாக ஒரு விடு தலை அமைப்பு எழுதிய அரசியல் வரலாறு.

ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பு அடையும் இராணுவ வெற்றிகள் தொடர்ந்து தக்கவைக்கப்பட வேண்டியதும், அதை அரசியல் வெற்றியாக மாற்றுவதும் என்று அவ்வமைப்பின் படை நகர்த்தல்களுக்குப் பல பரிமா ணங்கள் இருக்கின்றன. ஆனால் அரச எந்திரத்தின் - இராணுவத்தின் வெற்றிகள் மட்டுமல்ல தோல்விகள் கூட பலவீனமான அடித்தளத்திலி ருந்து மேலெழுபவை.

அன்று கிழக்கை ஆக்கிரமித்த சிங் களம் இன்று வன்னியை ஆக்கிரமித் துக்கொண்டிருக்கிறது. புலிகள் பின் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். மஹிந்த அரசு செய்துகொண் டிருக்கிற பாரிய தவறு இது என்பதை வரலாறு எழுதிச்செல்லும் காலம் வெகு தொலைவில் இல்லை.

புலிகளின் தோல்வி என்பது ஒட்டு மொத்த தமிழ்மக்களின் அரசியல் தோல்வி என்ற உண்மை பல சமயங்களில் சிங்கள அரசாலும் அதன் உதிரிகளாலும் மறைக்கப்பட்டே வந்திருக்கிறது. இன்று வன்னியில் புலிகளின் பின்னகர்வு அந்த வர லாற்று உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது. புலிகளின் தோல்வி இலங்கைத் தீவில் தமிழ்மக்களின் அரசியற்தோல்விக்கு வழி வகுத்துவிடும் என்று பல தரப் பாலும் இன்று தெளிவாகவே உணரப் பட்டிருக்கிறது. தமிழகத்தில் இன்று தோன்றியிருக்கும் எழுச்சி இதன் தொடர்ச்சியேயாகும்.

இப் புரிதல் இன்று புலிகளின் பின்னகர்வினூடாகப் பெறப்பட்டதென் பதை யாரும் மறுக்க முடியாது. புலிகள் விரும்பிப் பின்னகரவில்லை. நீண்ட காலம் சமாதானம் நிலவி - அதிலிருந்து வெளியேறாமலே சில படை நடவடிக்கைகளை நடத்தி நிலங்களை ஆக்கிரமித்தது மட்டுமல்ல இடைப்பட்ட சமாதான காலத்தில் ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பின் செயற்பாடுகளை முடக்கிவிட்டு அதைத் தமக்குச் சாதகமாக்கி சில சூழ்ச்சிகள் மூலம் வலுச் சமநிலை யைத் தம்பக்கம் திருப்பி வைத்துக் கொண்டு நிலங் களை விழுங்க முறபடும் ஒரு இராணுவ எந் திரத்திற் கெதிராக முடிந்தளவு எதிர்ப்பைக் காட்டும் புலிகள் அதன் எத்தனங்கள் சாத்திய மற்றுப் போகும் சூழலில் பின்னகர்ந்து தமது இலக்கை அரசியல் வெற்றியை நோக்கி குவிக்கிறார்கள்.

புலிகளின் தோல்வி இந்திய அரசின் நிலைப்பாட்டில் - குறிப்பாக தமிழகத்தில் பெரும் அரசியல் வெற் றியாகக் குவிந்திருக் கிறது. இது நாளை தமிழர் தாயகம் தொடர் பாகத் தரப் போகும் அரசியல் விளைவு தமிழீழத் தனியரசை நோக்கித் தள்ளப் போகிறது. இது நாம் தற்காலிகமாக மடுவையும் மாங்குளத்தையும் இழந்து பெற்ற வெற்றி. எனவே ஒரு விடுத லைப் போராட்டத்தின் இறுதி இலக்கை வெற்றியோ அல்லது தோல் வியோ தீர்மானிப்பதில்லை - நிலங்கள் கைப்பற்றப்படுவதும் இழக்கப்படுவதும் கூட தீர்மானிப்பதில்லை. அந்தப் போராட் டம் தொடர்ந்து தக்க வைக்கப்படுவதிலேயே எல்லாம் தீர்மானிக்கப்படுகிறது. ★

# போருக்குள் வாழும் வன்னி மக்கள் அதிலிருந்து மீள்வது எப்போது?

ஒவ்வொரு விடுதலைப் போராட்டமும் அந்தப் போராட்டம் பிரதிநிதித்துவப்படுத் தும் மக்களின் ஆதரவிலும் பங்குபற்ற லிலுமே தங்கியிருக்கும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் படி முறை சார்ந்த வளர்ச்சிப் போக்கின் ஒவ் வொரு காலகட்டத்திலும் தமிழீழ மக்களின் ஆதரவும் பங்களிப்பும் இருந்தன.

மக்களின் பங்களிப்பு இல்லாவிட்டால் நமது போராட்டம் இவ்வாறானதொரு வளர்ச் சியை அடைந்திருக்க முடியாது.

ஏடறிந்த வரலாற்றின் விடுதலைப் போர் கள் எவையும் மக்களின் பங்களிப்பு இல்லா மல் வெற்றி பெற்றதும் இல்லை. இந்த வர லாறு விடுதலைப் போராட்டங்களுக்கு வேராக இருக்க, ஆதிக்க சக்திகளுக்கோ அச்ச மூட்டும் ஒன்றாகவே இருந்து வருகிறது.

இதன் காரணமாகவே ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களின் பின்னணியில் இருக்கும் மக்கள் ஆதரவினைச் சிதைக்க ஆதிக்க சக்திகள் கடும் பிரயத்தனங்களை எடுப்பதுண்டு.

ஆரம்பத்தில் சலுகைவாத அரசியல் சக்தி களைப் பயன்படுத்தி மக்களைத் திசை திருப் பும் முயற்சிகளில் ஈடுபடும் இவ்வாறான சக்திகள் அதில் தோல்வியடையும் சந்தர்பங் களில் போராட்டத்தின் ஆதாரமாக இருக்கும் மக்கள் மீது மிலேச்சத்தனமான ஒடுக்கு முறைகளைக் கட்டவிழ்ப்பதுண்டு. ஆனால், இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் தெளி வாக இருக்கும் மக்கள் கூட்டமொன்றின் ஆதரவைப்பெற்ற விடுதலைப் போராட்டங் களே வெற்றி பெற்றிருக்கின்றன. அவ்வா றான விடுதலைப் போராட்டங்களை எந்த வொரு ஆதிக்க சக்தியும் தோற்கடிக்க முடியாது.

இந்தப் பின்புலத்தில் நமது விடுதலைப் போராட்டத்தைப் பார்ப்போமானால், சிங்கள அரச, தமிழீழ விடுதலை அரசிய லின் அடித்தளமாக இருந்த நமது மக்களின் ஆதரவுத் தளத்தை சிதைப்பதற்கு பிரித்தா ளுதல், சலுகைவாத அரசியல் சக்திகளை வளர்ப்பதன் மூலம் மக்கள் மத்தியில் குழப் பங்களை உண்டு பண்ணுதல், மக்கள் மீது தொடர்ச்சியான ஒடுக்குமுறைகளைக் கட்ட விழ்ப்பதன் மூலம் போராட்டத்தின் மீதான அவர்களது ஆன்ம ஈடுபாட்டைச் சிதைத்தல் எனப் பல செயற்பாடுகளைக் கடந்த காலத் தில் மேற்கொண்டிருக்கிறது. ஆனால், அவ் லாற்றில் என்றுமே இல்லாதவாறான ஒரு நிலைமையாகும். இந்த நிலைமை ஏன் ஏற்பட்டது - என்பதை இதயசுத்தியுடன் சிந் திக்க வேண்டிய தார்மீக பொறுப்பு நமக் குண்டு. கடந்த காலங்களில் விடுதலைப் புலிகள் தமது ஆட்சி எல்லையை வடக்கு - கிழக்கு தழுவியதாகப் பேணிவந்தனர்.

நமது மக்களும் பரந்தளவில் விடுதலை அரசியலின் பின்பலமாகத் தொழிற்பட் டனர். இதன் காரணமாகப் போராட்டத்திற் கான ஆளணிச் சேர்க்கையும் சகல பகுதிக ளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அந்தந்தப் பகுதிகளின் சனச்செறிவிற்கும், போராட்டத்துடன் அவர்கள் கொண்டிருக்கும் ளையும் பிரித்தாளும் நோக்கிலேயே தமது இராணுவ மற்றும் அரசியல் காய்களை நகர்த்தி வருகின்றது.

வன்னியில் தினமும் மக்கள் குடியிருப் புகள் மீது குண்டுகளைப் போடுவதிலிருந்த மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அரச சார்பற்ற நிறுவனங் களை வெளியேற்றியது வரை அனைத்தும் மக்களைப் புலிகளிடமிருந்து பிரித்தாளுவ துதான் நோக்கம்.

ஆனால், அரசு எதிர்பார்த்தது போன்று வன்னி மக்கள் புலிகளிடமிருந்து விலகிவர முயலவில்லை. மாறாக மேலும் மேலும் புலிகளின் பலமான பகுதிகளை நோக்கியே திரண்டு வருகின்றனர். வரும் மாதங்களில் மேலும் உச்சத்தை அடையவுள்ள போர்ச் சூழலில் அவர்கள் பல்வேறு நிலையிலும் நமது தேசத்தின் இராணுவ வலுவுடன்

வாறான ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் நமது மக்கள் கடந்து வந்திருக்கின்றனர்.

இந்தப் பின்புலத்தில் இன்று நமது தேசம் அதன் உச்சக்கட்டத்தை எதிர்கொண்டு நிற்கிறது. ஆனால், இதிலுள்ள ஒரு வேதனை என்னவென்றால், இன்று தமிழர் தேசம் எதிர்கொண்டிருக்கும் ஒரு முக்கிய வரலாற்றுத் திருப்புமுனையைக் கடந்து செல்வதற்கான முழு விலையையும் வன்னி மக்கள் மட்டுமே கொடுக்க வேண்டியிருப் பதுதான்.

இன்று தமிழீழ வரலாற்றை நகர்த்திச் செல்லும் புர[illegible] மக்கள் மட்டு[illegible] நமது தேசிய விடுதலைப் போராட்ட வர பிணைப்பிற்கும் ஏற்ப நிகழ்ந்தது.

புதிய தலைமுறையினர் பலர் போராட்டத் தில் இணைந்தவாறு இருந்தனர். ஆனால், புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தில் கிழக்கில் கருணா விடயத்தால் ஏற்பட்ட உள்நிலை சிதைவுகள் அதுவரை நமது தேசத்தின் இரா ணுவ வலுவில் திகிலடைந்திருந்த தென்னி லங்கைத் தரப்பினர் அதிக ஆர்ப்பாட்டங் களுடன் களமிறங்க வழிவகுத்தது.

இன்று அதற்கான முழு விலையையும் வன்னி பெருநிலப்பரப்பின் மக்கள் கொடுத்து வருகின்றனர். இன்று அரசு வாகரை, சம்பூர் பகுதியில் மக்களை விடுதலைக்கான ஆளணிச் சேர்க்கையிலிருந்து பிரித்தாண்டது போல், வன்னி பெருநிலப்பரப்பின் மக்க இணையக்கூடும்.

நமது கடந்த கால அனுபவத்தில், நமது விடுதலைப் போர் சில தற்காலிகமான நெருக் கடிகளை எதிர்கொள்ளும் போதெல்லாம் அதற்கான முழுத் தியாகங்களையும் செய்த வர்களாக வன்னிப்பெரு நிலப்பரப்பின் மக்களே இருந்திருக்கின்றனர்.

இன்றும் அவர்கள் பெருந்தியாக மொன் றிற்குத் தயாராகி விட்டனர். ஆனால், நமக்கு நாமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி வன்னிக்கு வெளியில் இருக்கும் நமது நிலைப் பாடு என்ன? இந்த விடுதலை வேள்வியில் நமது பங்களிப்பு என்ன?

(தொடர்ச்சி 16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கலந்துரையாடல்

ஆசிரியர் நியமனத்திற்கான மீள் பரிசீலனைக்கு அழைக்கப்பட்ட பட்டதாரிகள் அனைவரையும் சமூகசேவை சமூக நலத்துறை அமைச்சரைச் சந்திப்பதற்கு நாளை (20.10.2008) திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். பெருமாள் கோயில் முன்பாகத் தவறாது சமூகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(79326) **பட்டதாரிகள் செயற்குழு.**

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### வெற்றுப் பொருள்களுக்கான கூறுவிலை கோரல்

| வெற்றுப் பொருள்கள் | எண்ணிக்கை |
|---|---|
| அரிசிப் பை | 5931 |
| மாப் பை | 4438 |
| சீனிப் பை | 2304 |
| சிறிய உரப்பை | 308 |
| சாக்கு | 16 |
| ஏனைய வகைப் பை | 678 |

மேற்படி வெற்றுப் பொருள்களுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலை விண்ணப்பங்கள் 2008.10.24ஆம் திகதிக்கு முன்னதாக,

**பொது முகாமையாளர்,**
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
127, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு 'வெற்றுப் பொருள்களுக்கான கூறுவிலை விண்ணப்பம்' என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதப்பட்டு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்,**
யாழ்ப்பாணம் பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம் (வ-து).
2008.10.19

(சி/555994)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி கௌசலா சற்குணராஜா
அவர்களின் பாசமிகு தாய்
திருமதி சிவபாக்கியம் நாகரத்தினம்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் ஆசிரியரினதும் அவரது குடும்பத்தினரதும் துயரில் பங்குகொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இளவாலை.

பாடசாலைச் சமூகம்
யாழ்.புனித ஹென்றியரசர் கல்லூரி.

(சி/555496)

## மரண அறிவித்தல்

### இராசசிங்கம் சிறீதரன்

கொழும்பைப் பிறப்பிடமாகவும் நியூயோர்க், அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட இராசசிங்கம் சிறீதரன் (16.10.2008) வியாழக்கிழமை நியூயோர்க்கில் காலமானார்.

அன்னார் அமரர்களான திரு.திருமதி இராசசிங்கம் தம்பதியரின் இளைய மகனும் சறோஜினியின் அன்புக் கணவரும் வருணேஷ், நரேஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரத்துவமடைந்த திரு.திருமதி இராமலிங்கம் தம்பதியரின் மருமகனும் திருமதி பத்மினி பஞ்சாட்சரம், சிறீரஞ்சன், திருமதி சாந்தினி நரேந்திரன் ஆகியோரின் சகோதரரும் திருமதி மீனலோஜினி திருஞானசம்பந்தன், திருமதி இரஞ்சினி விஸ்வநாதன், திருமதி இராஜினி குமாரவடிவேல் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.10.2008) திங்கட்கிழமை நியூயோர்க்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(79324)

**போருக்குள்.....**

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பழமொழி இருக்கிறது. தமக்குள் குழம்பும் குடி ஒன்றாகவே கெடும். இன்று நமது தேசத்திற்கு நேர்ந்தது இதுதான்.

நமக்குள் பிரதேசம், பல்வேறு கட்சிகள் என குழம்பியதன் விளைவை இன்று நாம் அனுபவிக்கின்றோம். ஊர் கெட்டதால் தென்னிலங்கைத் தரப்பினருக்குக் கொண்டாட்டம். எனவே, வன்னியின் மக்கள் விடுதலைத் தீயில் வெந்து கொண்டிருக்கும்போது, நாம் நமக்குள் பேதமையைத் தூண்டும் சிந்தனைகள் அகற்றும் பணிகள் குறித்துச் சிந்திக்கலாம். இது குறித்து தமிழர் தேசிய ஊடகங்கள் கூடுதலான அக்கறை எடுக்க வேண்டிய தேவையிருக்கிறது. இன்றைய சூழலில் புலிகளுக்கு எதிராக முன்வைக்கப்படும் அனைத்து வகை வாதங்களும் தமிழர் விடுதலைப் போராட்டத்தைச் சிதைப்பதற்கான சூழ்ச்சிகளேயன்றி வேறியில்லை.

வன்னிப்பெரு நிலப்பரப்பிற்கு அப்பால் இருக்கும் அனைத்துத் தமிழர்களுக்கும் இது உணர்த்தப்பட வேண்டும். இன்று தமிழர் தேசியம் எதிர்கொண்டிருக்கும் தற்காலிக நெருக்கடியைப் புலிகள் தலைமையில் வன்னிப்பெரு நிலப்பரப்பின் மக்கள் அறுத்தெறிவர்.

அதில் இம்மியளவும் எவரும் நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை. அது எழுதி வைக்கப்பட்ட விதி. நாம் நமது பணிகள் குறித்து சிந்திப்போம். கருவுற்றிருக்கும் உயிர் வெளியில் வரவேண்டுமானால் சற்று வலி பொறுத்துத்தான் ஆகவேண்டும். வலிக்கு அஞ்சினால் புதிய உயிரை தரிசிக்க முடியாது. ★

யாழ்.நகரின் முன்னணி தளபாட உற்பத்தியாளர்
KKJ
Workshop & Sale Centre
பதிவு இல. J/DS/BR/989

நீங்கள் விரும்பிய வடிவங்களில்
உங்களுக்கு ஏற்ற தரங்களில் தளபாடங்களை
செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

எம்மிடம்
★ பாடசாலை தளபாடங்கள்
★ அலுவலக தளபாடங்கள்
★ வீட்டுத் தளபாடங்கள்
★ சிறுவர்களுக்கான விளையாட்டுத் தளபாடங்கள்
★ உருக்கு, மர தளபாடங்கள்

என்பனவற்றையும் உங்களுக்கு விரும்பிய
வடிவங்களில் மனத்திருப்தியுடன் செய்து
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்
K.K.J.Workshop & Sale Centre
இல.11, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 9037203

## மரண அறிவித்தல்

### திருமதி சுரேஸ்குமார் ஞானலக்சுமி (றமா)

வன்னியர் கோயிலடி, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் தோணிக்கல், வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுரேஸ்குமார் ஞானலக்சுமி (17.10.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் மற்றும் பராசக்தி தம்பதியரின் அன்பு மகளும் சுரேஸ்குமாரின் அன்பு மனைவியும் யதுஷனின் அன்புத் தாயும் சசீகரன், மணிமேகலை, சசிறூபன், சசிவரதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மேகநாதன், சரோஜினிதேவி, வதனா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2008) ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சசீகரன் (சகோதரன்).
அந்தோனியார் வீதி, மாதகல்.

(77331)

## மீண்டும் வாராதோ?



ஜெயச்சந்திரன் ஜெயராஜ்

சேர்கமின்றி வாழ்ந்த நாம்
ஓயாத செல்லடியால்
ஓலமிட்டு ஓடிவந்து
ஊன் உறக்கமேதுமின்றி
தவித்து நின்றோம்!

சீரோடு இருந்த எம்
தூய தமிழ்ப் பூமியிலே
ஷெல்வந்து வீழ்ந்தவுடன்
சீரழிந்ததெம் வாழ்வு!
அகதியென்ற பெயர் சூட்டி
அமர்த்தி வைத்தீர் அக்கினியில்!

தகரக் கொட்டில்
தண்ணீருக்குப் பஞ்சம்?
நினைத்துப் பார்த்ததில்லை
நிலையற்ற இவ்வாழ்வை!
குளிப்பதற்குக் காத்திருந்து
சவுனிமீன் கழுவினாற்போல்
குளித்துவிட்டு வரும் வாழ்வு!

எம்பள்ளிதனை நினைத்தால்
இந்தப் பாலை மரத்தடியில்
படிக்க மனம் வருமா?
செல்லடித்து ஓய்ந்திருந்தும்
சேனையூரில் இன்னும் எம்
செல்வம் எடுத்து ஓயவில்லை!

இப்படியிருக்க குடி
எப்போது ஏற்றுவது?
எம் ஊர் பார்க்க
இன்றோ நாளையோ என்று
இரண்டு வருடமாய்
எங்களூர் மக்களுடன்
ஏங்கி ஏங்கித் தவித்து நிற்கும்
முத்தூரின் புதல்வன்!

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து மட்டக்களப்பு சாஹிரா நலன்புரி நிலையத்தில் வாழும் ஜெயச்சந்திரன் ஜெயராஜ் அகதி வாழ்க்கையில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் தனது உள்ளக்கிடக்கையையும் மீண்டும் வாழ்வோம் சஞ்சிகையோடு பகிர்ந்து கொண்டார்.

நன்றி மீண்டும் வாழ்வோம்
(12.10.2008)

Inter press

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் சொந்த மருத்துவ முறைகள் கைவிட்டுப் போனதால் மக்கள் இலகுவில் நோய்த்தாக்கத்திற்கு ஆளாகிறார்கள்

பழம்பெரும் சித்த மருத்துவ முறைகளைக் கடைப்பிடிக்கத் தவறியமையால் தான் இன்று மக்களின் ஆயுள்காலம் மிக




வும் குறைவடைந்துள்ளது. அத்துடன் எமது உடல் இலகுவாக நோய்த்தாக்கத்திற்கு உள்ளாவதற்கும் காரணம் பழம்பெரும் மருத்துவ முறைகள் கைவிடப் பட்டமையே.

இவ்வாறு தெரிவிக்கிறார் யாழ்.பல்கலைக் கழகச் சித்த மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் திருமதி சிவஞானமணி பஞ்சராஜா.

சித்த மருத்துவத்துறையின் தற்போதைய நிலையை அறிந்து அவற்றை வெளிப் படுத்தும் நோக்குடன் அவரைச் செவ்வி கண்டோம். அப்போதே அவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

விசேட செவ்வியின்போது அவர் தெரிவித்த கருத்துகளும் விவரங்களும் வருமாறு:

பண்டைய மக்களின் வாழ்க்கையில் சித்த மருத்துவம் ஒரு முக்கிய இடத்தைப் வகித்தது. இப்போது அது அருகிச் சென்று

## மூலிகைக் குளியலும் ஒடியல் பிட்டும் மீண்டும் பிரபல்யம் அடைகின்றன

கொண்டிருக்கின்றது. இதனால் மக்களின் ஆயுள்காலம் குறைவடைவதுடன் அவர்கள் பல்வேறு நோய்களுக்கும் உள்ளாகின்றார்கள்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்துறை இப்போது புதிய வளர்ச்சி கண்டு வருகின்றது. இவ்வருடம் அது வெள்ளி விழாவைக் கொண்டாடுகின்றது.

கைதடியில் இயங்கிவரும் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையில் தற்போது 60 மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்ந்து வருகின்றார்கள். சித்த மருத்துவ மாணவர்கள் 5 வருடங்கள் தமது வைத்தியக் கல்வியைக் கற்கின்றார்கள். அதன் பின்னர் ஒரு வருடம் அவர்கள் இலங்கையில் உள்ள வெவ்வேறு வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சியை மேற்கொள் கின்றார்கள்.

சுதேச மருத்துவத்துறை மூன்று பிரிவுகளைக் கொண்டது.

★ *சித்த மருத்துவத்துறை*

இது தமிழர்களுக்குரியதாக விளங்குகின்றது. தமிழர்கள் இதைத்தான் பெரும்பாலும் பின்பற்றுகிறார்கள்.

★ *ஆயுள்வேத மருத்துவத்துறை*

இது சிங்கள மக்களுக்குரியது.

★ *யுனானி மருத்துவத்துறை*

இதனை முஸ்லிம்கள் பின்பற்றுகிறார்கள்.

சித்த மருத்துவம் தமிழர்களின் பாரம்பரிய கலை கலாசாரத்துடன் இணைந்ததாக உள்ளது. கூடுதலாக வடக்கு - கிழக்கில் அதற்கான வரவேற்பு அதிகமாக உள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறைக்கு ஒவ்வொரு வருடமும் 50 மாணவர்கள் மானியங்கள் ஆணைக்குழுவால் உள்வாங்கப் படுகின்றார்கள். ஜி.சி.ஈ உயர் தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி பயின் றவர்களே இதற்கு விண்ணப்பிக்க முடியும். தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்கள் இத்துறைக்கு உள்வாங்கப்படுகின்றார்கள். சிங்கள மாணவர்கள் சித்த மருத்துவத்தைக் கற்பதில்லை. அவர்கள் ஆயுள்வேத மருத்துவத்துறையில் நுழைகின்றார்கள். நாட்டுச் சூழ்நிலை காரணமாக முஸ் லிம் மருத்துவ மாணவர்கள் இங்கு வருவதில்லை. அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் உள்ள யுனானி மருத்துவத்துறைக்கு மாறிச் சென்று விடுகின்றார்கள்.

### 1984இல் கைதடியில்

1929ஆம் ஆண்டு முதல் சுதேச மருத்துவ நிறுவனத்தில் சித்த, ஆயுள்வேத, யுனானி ஆகிய மூன்று துறைகளும் ஒன்றாக இயங்கி வந்தன. 1983ஆம் ஆண்டுக் கலவரத்தின் பின்னர் 1984ஆம் ஆண்டு சித்த மருத்துவத்துறை யாழ்.பல்கலைக் கழகத்தின் கீழ் வந்தது. அன்றில் இருந்து அது கைதடியில் இயங்கி வருகின்றது. இராஜகிரியவில் உள்ள சுதேச மருத்துவ நிறுவனம் கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவத்துறையில் இதுவரை 25 அணிகள் உள்வாங்கப்பட்டுள்ளன. இந்த வருடம் நாம் 25ஆவது ஆண்டை நிறைவு செய்கின்றோம். இந்த வெள்ளி விழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் தற் போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எமது சித்த மருத்துவத்துறையைப் பொறுத்தமட்டில் நாட்டுச் சூழ்நிலை காரணமாகக் கற்கைநெறியைத் தேர்வு செய்வோர் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றது. தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்கு 5 வருடங்கள் கல்வி கற்பிக்கப் படுகின்றது. அதன்பின்னர் அவர்களுப் பல்கலைக்கழகத்தில் வருடாவருடம் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் சித்த மருத்துவ மாணியும் சத்திரசிகிச்சைமாணியும் (BSMS) என்னும் பட்டம் வழங்கப்படுகின்றது. இதன்பின்னர் வைத்தியசாலையில் உள்ளகப் பயிற்சியை மேற்கொள்கின்றார்கள். பின்பு அவர்கள் தம்மை ஆயுள்வேத மருத்துவச் சபையில் பதிவுசெய்த பின்னர் தமது வைத்தியத் தொழிலை மேற்கொள்ள முடியும்.

இனக்கலவரத்தைத் தொடர்ந்து 1984ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழகக் கலைப் பீடத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்ட சித்த மருத்துவத்துறை பின்னர் 1993ஆம் ஆண்டு துணைவேந்தரின் கீழ் கொண்டுவரப்பட்டது.

### சித்த வைத்தியத்துறை பீடமாக வேண்டும்

25 ஆண்டுகள் தொடர்ந்து ஒரு துறையாக இயங்கிவரும் சித்த மருத்துவம் இதுவரை பீடமாகத் தரமுயர்த்தப்படாமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும். எனினும் தற்போது அதற்கான முயற்சிகள் முழு மூச்சில் நடைபெற்று வருகின்றன.

மூதவை, பேரவை ஆகியவற்றின் சிபார்சுடன் சித்தமருத்துவ பீடமாகத் தரமுயர்த்துவதற்கான முன்மொழிவுகளை நாம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் ஒப்படைத்துள்ளோம். வெகுவிரைவில் அந்த முயற்சி கைகூடும் என்ற நம்பிக்கை எம்மிடம் உள்ளது.

தற்போது எமக்குக் கட்டட வசதிகள் போதியளவு உள்ளன. எனினும் சில கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. அந்தக்கட்டடங்கள் பல்வேறு நவீன வசதிகள் கொண்டனவாகத் திருத்தியமைக்கப்படவேண்டும். பெண்கள், ஆண்கள் எனத் தனித்தனியே விடுதிகள் உள்ளன. இதில் பெண்கள் விடுதி புனரமைப்புச் செய்யப்பட்டு அதில் மாணவிகள் தங்கியிருந்து கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்கள். ஆண்கள் விடுதி இதுவரை திருத்தப்படவில்லை. அது சேதமடைந்த நிலையிலேயே காணப் படுகின்றது. இதனால் ஆண் மாணவர்கள் தனியார் வீடுகளில் தங்கியிருந்தே கல்வியைத் தொடர்கின்றார்கள்.

### கற்றல் நடவடிக்கைகள் தடையின்றி முன்னெடுப்பு

தற்போது பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் நிதி எமது கல்வி நடவடிக்கைகளுக்கு ஓரளவு போதுமானதாக உள்ளது. இதன் மூலம் நாம் கற்றல் நடவடிக்கைகளை தடையின்றி முன்னெடுத்து வருகின்றோம்.

12 விரிவுரையாளர்கள் தற்போது கடமையாற்றுகின்றார்கள். அவர்கள் அனைவரும் இந்தியாவிலும், யாழ்ப்பாணத்திலும் பட்ட மேற்படிப்பை மேற்கொண்டவர்கள். சித்த மருத்துவத்துறை பீடமாகத் தரமுயர்த்தப் படும்போது அதன்கீழ் 8 துறைகள் உருவாக்கப்படும். அவ்வாறு உருவாக்கப்பட்டால் எமக்கு விரிவுரையாளர் பற்றாக்குறையும் ஏற்படும். அத்துடன் தளபாட வசதிகள் மற்றும் இதர வசதிகளும் செய்ய வேண்டி ஏற்படும்.

எமது மாணவர்கள் கல்வியை முடித்துப் பட்டம் பெற்றவுடன் வேலை கிடைக்கின்றது. தற்போது 40 வெற்றிடங்கள் உள்ளன. எனினும் அவற்றுக்கு நியமிப்பதற்கு பட்டம் பெற்றவர்கள் இல்லை. எனவே எதிர் காலத்தில் உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

### சித்த மருத்துவ மருந்துகள் கொழும்புக் கண்காட்சிக்கு

அடுத்த மாதம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாபெரும் கண்காட்சி ஒன்று நடைபெறுகின்றது. இதில் கைதடி சித்த மருத்துவத் துறையினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களும் இடம்பெறுகின்றன. அத்துடன் எமது விரிவுரையாளர்களால் வெளியிடப்பட்ட புத்தகங்களும் அங்கு காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.



## யாழ்.பல்கலைக்கழகச் சித்த மருத்துவத்துறை தலைவர் டாக்டர் சிவஞானமணி விசேட செவ்வி

சித்த மருத்துவம் ஒரு பக்க விளைவுகள் அற்ற மருத்துவ முறையாகும். பழம் பெரும் மருத்துவ முறைகள் இன்று நம்மிடையே அருகி வருகின்றன. பண்டைய காலத்தில் கடவுள் நம்பிக்கையுடன் சேர்த்து சித்த மருத்துவ அறிவும் மக்களிடையே புகுத்தப்பட்டது. இதனால் பண்டைய மக்கள் அதனை மிகத்தீவிரமாக - பயபக்தியாகக் கடைப்பிடித்தார்கள். அதன் பலனாக எமது முன்னோர்கள் நீண்ட ஆயுளைக் கொண்டவர்களாக இருந்துள்ளார்கள். தற்போது சராசரி ஆயுள்காலம் 60 வயதாகக் குறைவடைந்துள்ளது. இதற்குப் பிரதான காரணம் சித்த மருத்துவ முறைகளைக் கைவிட்டமைதான்.

எனினும் வடக்கு - கிழக்கில் பல்வேறு இடங்களில் இப்போதும் சித்த மருத்துவ முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. உதாரணமாக குழந்தை பெற்ற தாய்மார்களுக்கான மூலிகைக் குளியல், குழந்தைகளுக்கான கிரந்தி எண்ணெய் தேய்த்தல் என்பன இப்போதும் நடைமுறையில் உள்ளன. அத்துடன் சாமைச்சோறு, ஒடியல்மா பிட்டு, குரக்கன் பிட்டு போன்ற உணவு வகைகளை இன்று பலர் விரும்பிச் சாப்பிடுகின்றார்கள். இவற்றை உண்டதால் தான் எமது முன்னோர்கள் திடகாத்திரமானவர்களாகக் காணப்பட்டார்கள்.

ஆனால் இன்று நிலைமை அவ்வாறு இல்லை. அவசர உல கத்தில் நாம் விரைவாகத் தயாரிக்கக்கூடிய உணவு வகைகளையும், இலகுவான உணவு வகைகளையும் நாடுகின்றோம். இவை எமது பசியைத் தீர்க்கின்றனவே தவிர எமது உடலுக்கு வேண்டிய

## சித்த மருத்துவத்துறை தொடர்பான விழிப்புணர்வை மாணவரிடம் ஏற்படுத்தவேண்டும்

சக்தியைக் கொடுப்பதில்லை.

எமது பாரம்பரிய உணவு முறைகளான மோர் குடித்தல், மரக்கறி வகைகளை உண்ணுதல், பழங்கள் சாப்பிடுதல் போன்ற வற்றினால் எமது உடல் போதிய சக்தியைப் பெறுகின்றது.

### பாடசாலைகளில் சித்த மருத்துவக் கருத்தரங்குகள்

சித்த மருத்துவம் தொடர்பான விழிப்புணர்வை எமது மக்கள் மத்தியில் அதிகரிப்பதற்கு நாம் அண்மையில் 'மூலிகைகளும் நோய்களுக்குரிய பரிகாரங்களும்' என்னும் தலைப்பில் மருத்துவக் கண்காட்சி ஒன்றை நடத்தியிருந்தோம். இந்தக் கண்காட்சி எமது மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. தற்போது பாடசாலைகள் தோறும் சித்த மருத்துவம் தொடர்பான கருத்தரங்குகளையும், போட்டிகளையும் நாம் நடத்தி வருகின்றோம்.

சித்த மருத்துவத்தின் மூலம் பல தீராத நோய்கள் குணமாகின்றன. இலகுவில் மாற்ற முடியாத நோய்களான பாரிச வாதம், நாடி விரணம் (Varicose Ulcer) என்பவற்றுக்கு எமது வைத்தியசாலையின் உள்ளக நோயாளர் பிரிவில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டு அதற்குச் சிறந்த பயன் கிடைத்துள்ளது. தோல் நோய்கள், மூட்டுவாத நோய்கள், இருமல், வயிற்றுப்புண் போன்றவற்றுக்குச் சிறந்த மருந்துகள் வழங்கப்பட்டு அதன்மூலம் நல்ல சுகம் கிடைக்கின்றது. தற்போது குழந்தைகளுக்கான கிரந்தி எண்ணெய், இருமல் மருந்து என்பவற்றைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் ஆர்வம் காட்டுகின்றார்கள்.

சிக்குன்குனியா நோய் பரவிய காலப் பகுதியில் அரச அதிபரின் துணையுடன்

**செவ்வி: அதிரன்**


குடிநீர் தயாரித்து வழங்கியிருந்தோம். அதற்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்புக் கிடைத்தது. அந்தக் குடிநீரைத் தொடர்ந்து வழங்குமாறு சில மக்கள் கேட்டுக் கொண்டனர். இதனையடுத்து நாம் ஆயுள்வேத ஆணையாளருடன் கலந்துரையாடி அவரின் அனுமதியுடன் கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் இந்த மருந்து தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இவற்றைவிட விசேட அம்சமாக மக்களும், மாணவர்களும் மூலிகைகளை இனங் காணும் பொருட்டு மூலிகைத் தோட்டம் ஒன்று எமது வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 300 மூலிகைகள் இங்கு உள்ளன.

இறுதியாக யாழ்ப்பாண மக்களுக்கு மிகவும் தேவையான இந்த சித்த மருத்துவத்துறை விரைவில் பீடமாகத் தரமுயர்த்தப்படவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அதற்கான முயற்சிகளை அனைவரும் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டும். அத்துடன் எமது மக்கள் முன்னோர்களைப் போன்று சித்த மருத்துவ முறைகளில் ஆர்வம் காட்டி சிறந்த தேக ஆரோக்கியமுடையவர்களாக - நீண்ட ஆயுள் கொண்டவர்களாக வாழ வேண்டும் என்பதே எமது அவா. அதற்காக நாம் எம்மால் இயன்ற ஒத்துழைப்பை வழங்குவோம் - என்றார்.

## நீதியின் பால் பசி தாகம் உள்ளோர்...

நீதிக்கு எதிராக இயேசுவை நடக்கத் தூண்டுகிறார்கள். ஆனால், இயேசுவோ 'அவர் அவர்களுக்கு உரியதை, அவர் அவர்களுக்கு அளிப்பதே நீதி; சொருடையதை சொருக்கும், கடவுளுடையதை கடவுளுக்கும் கொடுப் பதே நீதி' என்கிறார். கடவுளுக்குரியதை மட்டும் கடவுளுக்குக் கொடுத்து விட்டு மனிதருக்குரியதை மனிதனுக்குக் கொடுக்காமல் இருப்பதும் தவறு; மனிதனுக்கு உரியதை மட்டும் மனிதனுக்குக் கொடுத்துவிட்டு கடவுளுக்கு உரியதை கடவுளுக்குக் கொடுக்காமல் இருப்பதும் தவறு.




உண்மைக் கடவுள் ஒருவர். அவரால் படைக்கப்பட்ட உண்மையான மனிதர்கள் கடவுளை மட்டுமோ, மனிதனை மட்டுமோ, உண்மையென்று நினைத்து ஒருவரை வெறுத்து மற்றவரை அன்பு செய்யும் அனைவரும் பொய்யர்களே! அவர்கள் விசுவாசம் உண்மையான விசுவாசம் ஆகாது. அவர்கள் ஒருபோதும் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டவராகக் கருதப்படமாட்டார்கள்.

உண்மையான இறை ஊழியர்களாக நாம் திகழ நினைத்தால் இறைவனுக்கு நமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் காணிக்கையாக்கி, மனிதர்களுக்காக நாம் துண்டுதுண்டாக வெட்டப்படவும் தயாராக இருக்க வேண்டும். காரணம் நம் உடலிலுள்ள ஒவ்வொரு அங்கமும் அயலானுக்குப் பணிபுரிய ஆண்டவரால் நமக்கு அருளப்பட்ட அற்புத வரமாகும்.

- நசரேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் எதிர்கொண்டிருப்பது இறுதிக்கட்டச் சமரா?

வன்னிச் சமர்க்களத் தில் புலிகள் என்ன செய்யப் போகிறார்கள்? இப்போது நடக்கிற சமர்கள், அரசு தரப்பு குறிப்பிடுவது போன்று இறுதிக் கட்டத்தை நோக்கிய பயணமா? என்பன பலராலும் பேசப்படு கின்ற விடய மாக இருக்கிறது. இந்த நிலையில், இப்போது படையினர் வன்னியின் மேற்குப் போர் அரங்கில் - அதாவது, ஏ - 9 வீதிக்கு மேற்காக - எங்கெங்கு நிலை கொண்டிருக்கிறார்கள், அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார் கள், அவர்களின் பலம் என்ன பலவீனம் என்ன என்பவை பற்றி பார்த்தால், இந்த ஒட்டு மொத்த சமர்களின் பரிமாணத்தை ஓரளவுக் காவது விளங்கிக் கொள்ள முடியும். வன்னியின் மேற்குச் சமர் அரங்கில் இப்போது இலங்கை இராணுவத்தின் 5 டிவிசன்கள் நிலைகொண்டிருக்கின்றன. இவற்றில் இரண்டு தற்காப்பு டிவிசன்கள் அல்லது அரைத்தாக்குதல் டிவிசன்கள் ஆகும்.

ஓமந்தை மற்றும் அதை அண்டிய பகுதிகளில் நிலைகொண்டிருப்பது 56 ஆவது டிவிசன். மேஜர் ஜெனரல் ஜெகத் ரம்புக்பொத்த தலைமையிலான இந்த டிவிசனின் ஒரு

> **இனிமேலும் விட்டுக்கொடுக்க முடியாத எல்லைக்குள் புலிகள் பின் தள்ளப்பட்டு விட்டனர் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த நிலையில் அடுத்து என்ன நிகழும்?**

பகுதித் துருப்புக்கள் மட்டுமே வன்னியின் மேற்குச் சமர்முனையில் நிலை கொண்டிருக்கின்றன.

எஞ்சியவை ஓமந்தைக்குக் கிழக்கே முன்னரங்க நிலைகளினது பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன.

அடுத்து - அண்மையில் படையினரால் கைப்பற்றப்பட்ட மடுவை அண்டிய பிரதேசங்களில், புதிதாக உருவாக்கப்பட்ட தற்காப்பு அல்லது அரைத் தாக்குதல் டிவிசனான 61 ஆவது டிவிசன் நிலைகொண்டிருக்கிறது. மேஜர் ஜெனரல் லலித் தவுலகல தலைமையிலான இந்த டிவிசனில் இரண்டு பிரிகேட்டுகள் மட்டுமே இப்போதைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

இவை இரண்டுமே இப்போதைய வன்னிச் சமர்களில் புலிகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் அளவுக்கு, நெருக்கடிகளைக் கொடுக்கின்ற நிலையில் இல்லாத படைப் பிரிவுகளாகும். கைப்பற்றிய பிரதேசங்களை தக்க வைத்துக் கொள்வதற்கு அப்பால் இவை வேறெந்த வம்புக்கும் செல்வதில்லை. இவற்றைத் தவிர 57, 58, 61 ஆகிய மூன்று டிவிசன்கள் தான் இப்போது பிரதானமாக புலிகளுக்கு எதிரான சமர்களை நடத்திக் கொண்டிருக் கின்றன. இந்த மூன்று டிவிசன்களிலும் மொத்தமாக 18,000 தொடக்கம் 20,000 வரையான துருப்புக்கள் இருக்கலாம் என்று கணிக் கப்பட்டுள்ளது.

இவற்றுள் பிரிகேடியர் சவீந்திர டி சில்வா தலைமையிலான கொமாண்டோ பிரிகேட்டின் இரண்டு பற்றாலியன்கள், பிரிகேடியர் நிர்மல் தர்மரட்ண தலைமையிலான விசேட படைப்பிரிவின் இரண்டு ஸ்குவாட்ரன்கள் என்பனவும் முன்னரங்கப் பிரதேசத்தில் நடவடிக்கை களில் ஈடுபடுத்தப் பட்டிருக்கின்றன.

## 57 ஆவது டிவிசன்

முதலில் 57 ஆவது டிவிசன் பற்றிப் பார்க்கலாம். கடந்த ஆண்டில் வன்னிப் படை நடவடிக்கைக்கென்றே உருவாக்கப்பட்ட இராணுவத்தின் சிறப்புப் படைப் பிரிவு இது. மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் இதன் பொதுக் கட்டளை அதிகாரி. 1983 இல் கொக்காவிலில் நிலை கொண்டிருந்த இராணுவ பிளட்டூன் ஒன்றின் கொமாண்ட ராகவும், பின்னர் 1990 இல் கிளிநொச்சியிலும் இவர் பணியாற்றியிருக்கிறார். இப் போது கொக்காவில், கிளிநொச்சி நோக்கிய பிரதான நகர்வுகளை இவரே நெறிப்படுத்துகிறார். மடுப் பெரும்பாகப் பிரதேசத்தைக் கைப்பற்றிய பின்னர் பெரிய மடு, பள்ளமடு நோக்கிய நகர்வுகளிலும் - அடுத்து சிராட்டக் குளம், கல்விளான், வவுனிக் குளம், துணுக்காய், மல்லாவி, வன்னி விளாங்குளம் என்றும் முன்னேறிய இந்த டிவிசன்தான் இப்போது கிளிநொச்சி, கொக்காவில், மாங்குளம் போன்ற ஏ - 9 வீதியின் முக்கிய நகரங்களைக் குறிவைத்திருக்கிறது.

அங்கதன்.

விடுதலைப் புலிகளுக்கு அதிக நெருக்கடியைக் கொடுக்கின்ற படைப்பிரிவாக இதையே கருதலாம். இந்த டிவிசனில் இதுவரையில் 3 பிரிகேட்கள் இயங்கி வந்தன. ஆனால், தற்போதுமேலதிகமாக ஒரு பிரிகேட் சேர்க்கப்பட்டு நான்காக அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

கேணல் ரவிப்பிரிய தலைமையிலான 57 - 1 பிரிகேட், கேணல் சேனாரத் பண்டார (இவர் கடந்த மாத நடுப்பகுதியில்தான் லெப்.கேணல் தரத்தில் இருந்து கேணலாகப் பதவி உயர்த்தப்பட்டார்) தலைமையிலான 57 - 2 பிரிகேட், லெப் . கேணல் பிரதாப் திலகரட்ணதலைமையிலான57-3பிரிகேட் ஆகியனவே இதுவரையில் செயற்பட்டு வந்தன.

ஒக்டோபர் முதலாம் திகதி முதல் உத்தியோக பூர்வமாக இயங்க ஆரம் பித்திருக்கும் 57 - 4 பிரிகேட்டின் கட்டளை அதிகாரியாக, 11 ஆவது இலகு காலாற்படை பற்றாலியனின் தளபதி யாக இருந்த லெப். கேணல் சேனக விஜேயரிய நியமிக்கப்பட்டி ருக்கிறார்.

அக்கராயன்குளத் துக்கு தெற்கு, மேற் குப் பகுதிகளில் 57-1 பிரிகேட்டும், அக்கரா யன் குளத்துக்கு கிழக்காகவும் கொக்காவிலுக்கு வடக்கேயும் 57-2 பிரிகேட்டும், கொக்கா வில் மேற்கு மற்றும் அதற்கு தெற்காக 57-4 பிரிகேட்டும், மாங்குளம் நோக்கி 57-3 ஆவது பிரிகேட்டும் இப்போது முன்னேற்ற நகர்வில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன.

• அக்கராயனுக்கு கிழக்காகவும் கொக்காவிலுக்கு வடக்தாகவும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்ற 57-2 பிரிகேட்டில் உள்ள லெப்.கேணல் வெலிக்கல தலைமையிலான 4ஆவது சிங்க றெஜிமண்ட் கிளிநொச்சி நகர எல்லையில் இருந்து 2 கி.மீ தொலைவில் நிலைகொண்டிருப்பதாக இராணுவம் கூறுகிறது. அதே வேளை இந்த பிரிகேட்டில் உள்ள மேஜர் சஞ்ஜய பெர்னாண்டோ தலைமையிலான 3ஆவது கஜபா றெஜிமென்ட் மற்றும் லெப்.கேணல் எப்சித திசநாயக்க தலைமையிலான 8ஆவது இலகு காலாற் படை ஆகியனவும் அக்கராயன் - திருமுறிகண்டி வீதியை மையப்படுத்தியும், கொக்காவிலுக்கும் திருமுறிகண்டிக்கும் இடைப்பட்ட ஏ-9 வீதியை இலக்கு வைத்தும் நகர்வுகளில் ஈடுபட்டுள்ளன.

அடுத்து புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற லெப்.கேணல் சேனக விஜேசூரியவின் தலைமை யிலான 57-4 பிரிகெட் கொக்காவில் மற்றும் அதற்குத் தெற்காக உள்ள பகுதிகளை நோக்கிய முன்னகர்வில் ஈடுபட்டிருக்கிறது.

இதில் லெப்.கேணல் ரஞ்சித் அபே ரட்ண தலைமையிலான 7ஆவது இலகு காலாற் படை, லெப்.கேணல் ஜெகத் கொடித்துவக்கு தலைமையிலான 10ஆவது இலகு கரலாற் படை, மேஜர் தம்மிக திச நாயக்க தலைமையிலான 16ஆவது சிங்க றெஜிமென்ட் ஆகிய மூன்று பற்றாலியன் கள் ஏ-9 வீதியை நோக்கி பரவலான நகர் வில் இறங்கியிருக் கின்றன.

57-4 பிரி,கேட்டில் 2500 படையினர் இருப்பதாகவும் இத்தோடு சேர்த்து மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் தலைமையிலான 57 ஆவது டிவிசனின் ஆளணிப்பலம் 10,000 ஆக அதிகரித்திருப்பதாகவும் சில ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன. அதில் உண்மையில்லை.

அதுமட்டுமன்றி புதிதாக உருவாக்கப் பட்டிருக்கும் 57-4 பிரிகேட்டில் ஆக மொத்தம் 3பற்றாலியன்களே இணைக்கப்பட்டிருக்கின்றன. 57-2 பிரிகேட்டில் இருந்த 7ஆவது இலகு காலாற்படையும் கடந்த மாத இறுதி வரை அதேபிரிகேட்டில் இருந்த 10 ஆவது இலகு காலாற்படையும் இந்தக் களமுனைக்குப் புதியவை அல்ல. 1997 இல் உருவாக்கப் பட்ட 16ஆவது சிங்க றெஜிமென்ட் மட்டுமே இந்தப் போர் முனையில் புதிதாகச் சேர்க்கப் பட்டிருக்கின்ற பற்றாலியன் ஆகும்.

இலங்கை இராணுவத்தில் ஒரு பற்றாலியனில் ஆகக்கூடியது 650 படையினருக்கு மேல் இல்லை. அதுவும் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்ற 57-4 பிரிகேட்டில் 2000பேர் கூட கிடையாது. அவற்றில் இரு பற்றா லியன்கள் அதே டிவிசனைச் சேர்ந்த வையாக இருக்கின்ற போது 57 ஆவது டிவி சனில் 2500 மேலதிக படையினர் சேர்க்கப் பட்டு அதன் பலம் 10,000 ஆக அதிகரிக்கப்பட்டிருப்பதாக கூறப் படுவதெல்லாம் பொய்ப்பிரசாரமே.

அடுத்து, வன்னிவிளாங்குளம் மாங்குளம் பகுதிகளை நோக்கிய முன்னகர்வில் லெப். கேணல் பிரதாப் திலகரட்ண தலைமையிலான 57-3 ஆவது பிரிகேட் ஈடுபட்டிருக்கிறது. லெப்.கேணல் கீத்சிறி லியனகே தலைமையிலான 7ஆவது சிங்க றெஜிமென்ட், லெப்.கேணல் சந்திரசோம தலைமையி லான 9 ஆவது கஜபா மற்றும் 9 ஆவது விஜயபா றெஜிமென்ட் ஆகிய பற்றாலியன்கள் இதில் உள்ளடங்கியுள்ளன.

வன்னிவிளாங்குளத்தில் இருந்து அக்கராயன் வரை - கிட்டத்தட்ட ஒரு 'ப'வடிவில் முன்னரங்க நிலைகளைக் கொண்டு 57ஆவது டிவிசன் களம் இறக்கப்பட்டிருக்கிறது. திருமுறிகண்டிக்கும் மாங்குளத்துக்கும் இடைப்பட்ட ஏ-9 வீதியை நோக்கியவாறு பக்கவாட்டு நகர்விலும் - அக்கராயன், திருமுறிகண்டி அச்சில் நேராகவும் இது புலிகளுடன் மோதிக் கொண்டிருக்கிறது.

இந்தப் படைப்பிரிவு இப்போது பெரும் பிரதேசத்தை புலிகளின் எதிர்த் தாக்குதலில் இருந்து காப்பாற்றிக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறது. புலிகள் நினைத் தால் எந்த நேரத்திலும் பக்கவாட்டிலாயினும் சரி, நெற்றிப் பொட்டிலாயினும் சரி வலிந்த தாக்குதல்களைத் தொடுக்கின்ற சந்தர்ப்பங் கள் அதிகமாக உள்ளன.

மோதல்களில் அதிகளவில் சேதங்களை எதிர்கொள்வதாலும், தற்காப்பில் அதிகளவு கவனம் செலுத்த வேண்டியிருப்பதாலும் இந்த டிவிசனின் சுமை அதிகம்.

57-2 ஆவது பிரிகேட்டைச் சேர்ந்த 8ஆவது இலகு காலாற்படை பற்றாலியனின் கட்டளை அதிகாரியான லெப்.கேணல் எப்சித திசநாயக்க, புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்துப் பார்த்து தூக்கமின்றி இரவைக் கழிக்க வேண்டியிருப்பதாக தெரிவித்திருக்கிறார்.

57ஆவது டிவிசனின் பிரிகேட் பற்றாலியன் கொம்பனி கொமாண்டர் கள் அனைவருமே எந்த நேரமும் தொலைத் தொடர்பு சாதனத்துடனும் பிரதேச வரைபடத் துடனும் தான் திரிகின்றனர்.



சாதாரண படையினரின் நிலையும் இதே தான். காரணம் புலிகள், கிளிநொச்சியைக் காப்பாற்றும் நோக்கில் தம்மீது பாரிய வலிந்த தாக்குதலை தொடுக்கலாம் என்று படையினர் எதிர்பார்க்கின்றனர். இந்த எதிர்பார்ப்பு கடந்த இரண்டு, மூன்று வாரங்களில் மிகவும் தீவிரமாக அதிகரித்திருக்கிறது. உண்மையில் படையினர் ஓர் உளவியல் போருக்குள் சிக்கிப்போயிருக்கின்றனர் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. லெப்.கேணல் எப்சித திசநாயக்க புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்து தூக்கமின்றி இரவுகளைக் கழிப்பதாகக் குறிப்பிட்டதானது முன்னெச்சரிக்கையாக இருப்பதை மட்டும் குறிப்பிடவில்லை.

இது அவர்களின் பயத்தின், பலவீனத்தின் வெளிப்பாடாகவும் தெரிகிறது. எந்தவொரு இராணுவமும் 24மணி நேரமும் விழிப்பு நிலையில் இருக்கத்தான் வேண்டும். அதையே தூக்கமின்றி இரவுகளைக் கழிப்பதாக களமுனைக் கட்டளை அதிகாரி ஒருவர் வெளிப்படையாகக் குறிப்பிடுகிறார் என்றால் அது சலிப்பின் வெளிப்பாடே.

தொடர்ச்சி யான போரால் படையினர் களைத்து, சலித்து விட்டனர் என்பதே உண்மை. களமுனையில் உள்ள படையினர் ஓய்வின்றித் தவிக்கின்றனர். உடைமாற்றக் கூட அவர்க ளுக்கு நேரம் கிடைப்பதில்லை. புதிய உணவு கூட படையினருக்கு ஒழுங்

> **இரண்டு வருடங்களாக சமரைப் புலிகள் நடத்தியிருக்கின்றனர். இந்தளவுக்கும் செலவிடப்பட்ட ஆயுதங்கள் எங்கிருந்து கிடைத்தன? அவை தொடர்ந்தும் கிடைப்பதற்கான வழிகள் உள்ளனவா?**

காகக் கிடைப்பதில்லை. இது இராணுவத்தின் முதன்நிலைப் படைப்பிரிவாக இப்போது கருதப்படும் 57ஆவது டிவிசனின் பிரதானமான பலவீனமாகப் பார்க்கப்படுகிறது.

## 58 ஆவது டிவிசன்

வடமேற்குக் கரையோரத்தில் நாச்சிக் குடாவுக்குள் நுழைய முடியாதபடி புலிகளின் பலமான காப்பரண்களுக்கு முன்னால் முட்டிமோதிக் கொண்டிருக்கின்ற 58ஆவது டிவிசனின் நிலை குறித்து இப்போது பார்க்கலாம்.

பிரிகேடியர் சவீந்திர டி சில்வா தலைமையிலான இந்த டிவிசனில் மொத்தம் 3 பிரிகேட்கள். இவை அனைத்துமே நாச்சிக் குடாவுக்குத் தெற்காக மேற்குக் கரையோரத்தில் இருந்து கிட்டத்தட்ட வன்னேரிக்கு கிழக்குப் பக்கம் வரை முன்னரங்க நிலைகளைக் கொண்டிருக் கின்றன.

11 ஆவது இலகு காலாற்படை, 12ஆவது கஜபா றெஜிமென்ட், லெப்.கேணல் லால் சந்திரசிறி தலைமையிலான 9 ஆவது கெமுனு வோச், லெப்.கேணல் நந்தன துனுவில தலைமையிலான 12ஆவது கெமுனு வோச், லெப். கேணல் கமால் பின்னவெல தலைமையி லான 6ஆவது கெமுனு வோச், மேஜர் சமீர தலைமை யிலான 10ஆவது கஜபா றெஜி மென்ட், லெப். கேணல் சமிந்த ஜெயசுந்தர தலைமையிலான 8ஆவது கெமுனு வோச் மற்றும் 15ஆவது கெமுனு வோச், 2ஆவது கொமாண்டோ பற்றாலியன் என்று இதன் கீழ் உள்ள பற்றாலியன்களின் தொகை அதிகம்.

மன்னார் போர் அரங்கில் பெரும் இழப்புகளைச் சந்தித்த இந்த டிவிசன் அடுத்த கட்டமாக நாச்சிக் குடாவைக் குறிவைத்திருப் பினும் அதை நேரிடையாகச் செய்ய முடியா திருக்கிறது. இதனால், வன்னேரியை அடுத்த பண்டிவெட்டிக்குளம், கரம்பைக் குளம், பகுதி கள் ஊடாக முன்னகர்ந்து மணியகுளம், கரியாலை நாகபடுவான் ஊடாக நாச்சிக்குடாவுக்குள் பின்புறமாகச் சென்று ஏறும் முயற் சியில் இறங்கியிருக்கிறது. தலையைச் சுற்றி மூக்கைத் தொடும் முயற்சி இது.

புலிகளின் வலுவான எதிர்த்தாக்குதல்களால் - பெருமளவு உயிரிழப்புகளைச் சந்தித்து வரும் 57, 58 ஆவது டிவிசன்களில் நாவாந்தம் டசின் கணக்கானோர் காயமடைந்து வருவது முக்கியமான விடயம்.

## 62ஆவது டிவிசன்

பிரிகேடியர் பண்டார தலைமையிலான 62ஆவது டிவிசன் கடைசியாக ஆரம்பிக்கப் பட்ட படைப்பிரிவாகும். இந்த டிவிசனில் இரண்டு பிரிகேட்கள் மட்டும் உள்ளன. பாலமோட்டை, நல்வி மற்றும் அதற்கு கிழக்கு, மேற்கு பிரதேசங்களில் இதன் நகர்வுகள் இடம்பெறுகின்றன. ஏ-9 வீதியை மாங்குளத்துக்கும் ஓமந்தைக்கும் இடையில் குறுக்கறுத்துக் கைப்பற்றுவதே இதன் பிரதான திட்டம். ஆனால், புலிகளின் எதிர்ப் பினால் அதிகம் முடங்கிப் போயிருக்கின்ற படைப் பிரிவாக இதைக் கருதலாம்.

ஒட்டுமொத்தமாகச் சொல்லப் போனால் வன்னியின் மேற்குப் போர் அரங்கில் புலிகளுக்கு எதிராக வியூகம் வகுத்திருக்கின்ற குறைந்தது நான்கு டிவிசன்களிலும் உள்ள படையினரின் தொகை 30 ஆயி ரத்துக்கும் குறை யாமல் இருக்கும். பரந்துபட்ட பிரதேசத்தில். பெருமளவிலான படையினரைக் களம் இறக்கி புலிகளின் ஆளணி வளத்தையும், சூட்டு வலுவையும் பரவலாக்கிவிட்டு, சந்தர்ப்பம் வாய்க்கும் ஏதாவதொரு சிறிய இடைவெளிக் குள் புகுந்து பாரிய சேதத்தை ஏற்படுத்தலாம் என்று படைத் தரப்பு நம்புகிறது.

புலிகள் நாச்சிக்குடா வரைக்கும் மேற்கு கரையோரத்தாலும் மல்லாவி, துணுக்காய், அக்கராயன் என்று நடுப்பகுதியாலும் படையினரின் முன்னகர்வுக்கு நெகிழ்ந்து கொடுத்த காலம் இப்போதுமாறிவிட்ட தென்றே சொல்லலாம். இப்போதுதான் புலிகளின் மூர்க்கமான எதிர்ப்பையும் பெரும் இழப்புகளையும் படையினர் சந்தித்துக்கொண்டிருக்கின்றனர்.

ஆனாலும், இனிமேலும் விட்டுக் கொடுக்கமுடியாத எல்லைக்குள் புலிகள் பின்தள்ளப்பட்டு விட்டனர் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தநிலையில் அடுத்து என்ன நிகழும் என்றோ கிளிநொச்சியைப் புலிகள் விட்டுக்கொடுக்கமாட்டார்கள் என்றோ அல்லது அதையும் கைவிட்டு விடுவார்கள் என்றோ எதிர்வு கூறுவது சாத்தியமானதல்ல.

ஆனால், ஒருவிடயத்தை இங்கு முக்கியமாகக் கவனிக்கவேண்டும். புலிகள் மீது போர் தொடுத்திருக்கின்றது ஒரு வல்லமை மிக்க அரசு. அதற்கு ஆயுதங்களைக் கொட்டிக்கொடுத்து முதுகில் தட்டிக்கொடுக்கின்ற கூட்டாளிகள் அதிகம் உள்ளனர். அதே வேளை புலிகளின் எதிர்த்தாக்குதல் வலு என்பது தனியே ஆளணியோடு மட்டும் மதிப்பிடத்தக்கதல்ல. அதற்கும் அப்பால் ஆயுதங்களும் மிக அவசியம். கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாக சமரைப் புலிகள் நடத்தியிருக்கின்றனர். இந்தளவுக்கும் செலவிடப்பட்ட ஆயுதங்கள் எங்கிருந்து கிடைத்தன? அவை தொடர்ந்தும் கிடைப் பதற்கான வழிகள் உள்ளனவா? அப்படி யான வழிகள் அடைபட்டுப் போனால் அடுத்து என்ன நடக்கும்? அதற்கான மாற்றுவழிகள் உள்ளனவா? இந்தக் கேள்விகளுக்கான பதில்களே வன்னிப் போரின் அடுத்த கட்டத் தின் போக்கைத் தீர் மானிக்கப்போகின்றன. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழர் விரோத அணியில் கூட்டு இணையும் சக்திகள்

ஈழத் தமிழருக்கு நியாயம் தேடிக் கொடுப்பதற்கான எழுச்சி-கிளர்ச்சி-தமிழகத்தில் பிரவாகம் எடுக்கத் தொடங்கியதுமே, தென்னிலங்கைச் சிங்களத்துக்காகக் காவடி தூக்கும் தமிழக சக்திகளும் தங்கள் பங்கு கைவரிசையை தம்பாட்டுக்கு ஆரம்பித்து விட்டன.

அந்த வரிசையில் வழமைபோல, சென்னையிலிருந்து வெளியாகும் 'த ஹிண்டு' பத்திரிகையும் அதன் பிரதம ஆசிரியர் என்.ராமும் தங்கள் பங்கு கைங்கரியத்தை ஒப்பேற்றத் தொடங்கி விட்டனர்.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான தமிழகத்தின் எழுச்சிக் குரலை சகிக்க முடியாத 'த ஹிண்டு' பத்திரிகை ஒரு புறம் அந்த எழுச்சியை பயங்கரவாத இயக்கமான புலிகளுக்கு ஆதரவான கிளர்ச்சி என்று காட்டி, அதனை அடக்குவதற்குக் கங்கணம் கட்டிப் பிரசாரத்தை முன்னெடுக்கின்றது.

மறுபுறத்தில், தென்னிலங்கை பௌத்த-சிங்களப் பேரினவாதம் புரியும் கொடூரங்களை மறைத்து, அப்பேரினவாதத்தின் இனப்படுகொலை நடவடிக்கைகளை ஒளித்து, தென்னிலங்கைச் சிங்கள அரசு நியாயமாகச் செயற்படுகின்றது என்று இந்திய மக்களுக்கு-அப்பத்திரிகை காட்ட முயல்கிறது.

1980 களின் கடைசியில் இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ்காந்தியைத் தவறாக வழி நடத்தி, இலங்கை-இந்திய ஒப்பந்தம் என்ற பெரும் சகதிக்குள் விழவைத்தவர்களில் முக்கியமானவர் அப்போது 'த ஹிண்டு'வின் இணை ஆசிரியராக இருந்த இதே ராம்தான்.

ஈழத் தமிழ் மக்களின் மீது இந்தியாவினால் வல்வந்தமாகத் திணிக்கப்பட்ட அந்த இலங்கை-இந்திய, ஒப்பந்தத்தின் மூல வடிவமைப்பாளர்களுள் பிரதானமானவர் இந்த ராம்.

அவரது பங்களிப்போடு உருவான இந்த இலங்கை-இந்திய ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படாமல், செயலிழந்து, உக்கி, உருக்குலைந்து வெறும் காகிதாதியாகிப் போனதால், அதற்குக் காரணமானவர்கள் புலிகள் என்று கருதி அவர்கள் மீது சீற்றமும், வெறுப்பும், எரிச்சலும், விசனமும் கொண்டுள்ளார் இந்த ஆசிரியர் ராம்.

அதனால்தான், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையும் மீறிய ஒரு விடயத்துக்காகத் தமிழகத்தில் எழுச்சி கிளம்பி-

அந்தக் கிளர்ச்சி ஆதரவு, ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமைக்காகப் போராட்டம் நடத்தும் புலிகளுக்கு சாதகமான பண்பியல் தமிழகத்தில் பீறிட்டு எழுந்த போது-

அதை சகிக்க முடியாமல் துள்ளிக் குதிக்கிறார் 'த ஹிண்டு' பத்திரிகையின் பிரதம ஆசிரியர்.

சுமார் மூன்று வருட கால நிறைவேற்று அதிகார ஆட்சியை நிறைவு செய்யும் கட்டத்தில் இருக்கும் சிங்களத்தின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இக்காலத்தில் ஈழத் தமிழர்களுக்குத் தந்தது எல்லாம் போரும், இராணுவ நடவடிக்கைகளும், யுத்தக் கொடூரங்களும், பேரழிவுகளும், அனர்த்தங்களும், அகதி வாழ்க்கையும், ஏதிலி நிலைமையும்தான். ஈழத் தமிழர்கள் மீது இத்தகைய கொடூரத்தை - கோரத்தை - மோசமாக ஏவிவிட்ட தென்னிலங்கைத் தலைவர்கள் மஹிந்த ராஜபக்ஷவைத் தவிர வேறு யாருமில்லை என்ற தனிப்பெரும் பெருமையைத் தென்னிலங்கை மக்கள் மத்தியில் சுவீகரித்துக் கொண்டவர் மஹிந்த ராஜபக்ஷ மட்டுமே.

அவருக்கு எதிரான கிளர்ச்சி தென்னிந்தியாவில் - தமிழகத்தில்-வெடித்திருக்கும் இந்நிலையில் -

ஈழத் தமிழர்களுக்கு நியாயம்-நீதி-வழங்கப்போகும் ஒரே ஆட்சித் தலைமை மஹிந்தரின் அரசுதான் என்ற பிரசாரத்தைத் தூக்கிப் பிடிக்கிறது 'த ஹிண்டு'.

இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சினைக்கு நீதியான - நிலைத்த தீர்வைத் தருவதுதான் தனது ஒரே நோக்கு - இலக்கு - என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த கூறுகின்றார் என்ற விடயத்தை பெரும் எடுப்புப் பிரசாரமாக முன்வைக்கிறது இந்தப் பத்திரிகை.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி முறையில் - போர்மூலம் - சமாதான வழியில் - தீர்வு காண்பதற்கு இருந்த சகல வாய்ப்புகளையும் சிதறடித்து, இணக்கத் தீர்வுக்கான வாய்ப்புகளை தனது பௌத்த - சிங்கள மேலாதிக்கச் சிந்தனையில் எழுந்த பேரினவாத மேலாண்மைப் போக்கினாலும் இராணுவ வல்லாதிக்க வெறியினாலும் குழப்பியடித்தவர் இந்த சிங்களத்தின் இன்றைய தலைவர்.

புலிகளை அடியோடு அழித்து, இனப்பிரச்சினைத் தீர்வில் தமிழருக்கு இருக்கக்கூடிய ஒரேயொரு பேரம்பேசும் வலுவை இல்லாதொழித்த பின்னர் தமிழருக்குத் தீர்வைத் தருவாராம் மஹிந்தர். அதை நம்பி - புலிகளையும் காட்டிக் கொடுத்துவிட்டு - காத்திருக்க வேண்டுமாம் தமிழர்கள் - என்ற மாதிரிப் போகின்றது 'த ஹிண்டு' வின் கதை.

தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, அதைத் துண்டாடி, பெரும் படை நடவடிக்கைகள் மூலம் அதை சின்னாபின்னமாக்கிச் சீரழித்து நாசமாக்கிய பின்னர், தீர்வு என்ற பெயரில் மஹிந்தரின் அரசு தூக்கிப் போடும் பிச்சையை ஈழத்தமிழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று 'த ஹிண்டு' எதிர்பார்ப்பது அதன் நூற்றி முப்பது ஆண்டு காலப் பணிக்கு பேரிழுக்குத் தரும் வழிகாட்டலாகும்.

# இலங்கையின் தந்திரோபாயத்தை இந்திய அரசு புரிந்து கொள்ளத் தமிழக உணர்வெழுச்சி உதவும்

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஒக.19

ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக இந்தியாவைக் கையாளுகின்ற இலங்கை அரசினுடைய தந்திரோபாயத்தை இந்தியா புரிந்து கொள்ளத் தமிழகத் தின் உணர்வெழுச்சி உதவும்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

'கிளர்ந்தெழும் தமிழக உறவுகளுக்கு நன்றி' என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈழத் தமிழ் மக்கள் மீதான கண்மூடித்தனமான போரைத் திணித்திருக்கும் இலங்கை அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுகின்ற தமிழக உறவுகளுக்குப் பல்கலைக்கழகச் சமூகமாகிய நாங்கள் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். ஈழத்தில் இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு எதிரான போரை பெருமளவில் முன்னெடுத்து வருகின்றது. இதனால் எமது மக்கள் உணவு, இருப்பிடமின்றி, அகதிகளாக மீண்டும் மீண்டும் இடம்பெயரும் அவல நிலையும், பருவ மழை வெள்ளத்தில் அல்லலுருகின்ற கொடூரமும் தொடர்ந்து செல்கின்றது. இனவாத வெறி கொண்டு மக்கள் குடியிருப்புக்களை யுத்த முனைகளாகத் திறந்து கண் மூடித்தனமான போரை இலங்கை அரசு திட்டமிட்டு நடத்திவருகின்றது.

இந்நிலையில் ஈழத்தில் அல்லலுறும் மக்கள் மீது மிகுந்த அக்கறை காட்டி குரலிடுகின்ற தார்மீகப் பொறுப்பில் தமிழக மக்கள் பங்கெடுத்து வருவது மகிழ்ச்சி தருகின்ற விடயமாகும். எமது தொப்பிள் கொடி உறவுகளான தமிழக உறவுகள் எமக்காக பல்வேறு வழிகளில் போராட்டங்களை நடத்துவது எமக்குப் பெரிய ஆறுதலையும், நம்பிக்கை யையும் தருகின்றது. இதன் மூலம் இந்திய மத்திய அரசினுடைய நிலைப் பாட்டில் மாற்றம் ஏற்படும் என நம்புகின்றோம். நமக்கு எதிராக இந்தி யாவை கையா ளுகின்ற இலங்கை அரசினுடைய தந்திரோபாயத்தினை இந் தியா புரிந்து கொள்ள இந்த உணர் வெழுச்சி உதவும் என நம்பு கின்றோம்.

இராணுவத் தீர்வில் பெரும் முனைப்புடன் ஈடுபடுகின்ற இலங்கை அரசினுடைய கடும்போக்கினை இந்தியா உடனடியாகத் தலையிட்டு நிறுத்த வேண்டும். அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக நடக்கும் போரை நிறுத்திச் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். எமது மக்களின் நிம்மதியான வாழ்வையும், உரிமைகளையும் பெறுவதற்குத் தமிழக மக்களின் உணர்வெழுச்சி உதவும் என்பதில் பெரும் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம். ஈழத்தில் அமைதி ஏற்படுவதற்கு எமது உறவுகள் உணர்வெழுச்சிப் போராட்டங்களை மென்மேலும் முன்னெடுப்பார்கள் என்ற திடகாத்திரமான நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம்.

ஈழத் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கின்ற அரசியல் தலைவர்கள், ஊடகத் துறையினர், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், திரை உலகத்தினர், நீதித் துறையினர், வணிகத்துறையினர் என்று ஒட்டு மொத்தத் தமிழக மக்களுக்கும் பல் கலைக்கழக சமூகத்தினராகிய நாங்கள் மீண்டும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

# தமிழக அனைத்துக் கட்சி மாநாட்டின் முடிவை மத்திய அரசு நிச்சயம் பரிசீலனைக்கு எடுக்கும்

## முதல்வர் கருணாநிதியின் நம்பிக்கை இது

சென்னை, ஒக்.19

ஈழத் தமிழர்கள் மீதான யுத்தத்தை நிறுத்தி இலங்கையில் அமைதி ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசை இந்தியா வலியுறுத்தவேண்டும் என்று கோரி தமிழகத்தின் அனைத்துக்கட்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மத் திய அரசு நிச்சயமாக பரிசீலனைக்கு எடுத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கும் என்று தாம் உறுதியாக நம்புகிறார் என தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்திருக்கிறார்.

இந்த விவகாரம் தொடர்பாக நேற்று கருத்து வெளியிட்ட கருணாநிதி "தமிழகத்தின் சர்வகட்சிக் குழுவின் கோரிக்கையை ஏற்று இந்திய மத்திய அரசு ஈழத்தமிழர்களை படுகொலையில் இருந்தும் துன்ப துயரங்களிலிருந்தும் விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும். அதில் நான் நல்ல நம்பிக்கையுடன் இருக்கிறேன்" - என்று கலைஞர் கூறினார்.

"தமிழகத்திலிருந்து வேண்டுகோள் முன்வைக்கப்பட்டவுடனேயே பிரதமர் மன்மோகன் சிங் இந்த விடயத்தில் தலையிட்டு அப்பாவித் தமிழர்கள் பாதிக்கப்படுவதை நிறுத்துமாறும் அவர்களின் மனித உரிமைகளை மதித்து நடக்குமாறும் இலங்கை அரசுக்குச் சொல்லிவிட்டார். எனவே இந்த விடயத்தில் மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கிறது என்பது இதன் மூலம் தெளி வாகிறது" என்றும் கருணாநிதி சொன்னார்.

"மத்திய அரசிலுள்ள எமது அமைச்சர்களும் எம்.பிக்களும் தமது பதவிகளை இராஜினாமாச்செய்து கடிதமெழுதி என்னிடம் தந்துவிட்டார்கள். இருந்தாலும் இது தொடர்பான இறுதி முடிவை எதிர்வரும் 28ஆம் திகதிதான் நாங்கள் எடுப்போம். ஈழத் தமிழர்கள் விடயத்தில் நல்லதொரு தீர்வு கிட்டாவிட்டால் - அதற்கு இந்தியஅரசுஇலங்கையை வலியுறுத்தத் தவறினால் தி.மு.க. தனது நிலைப் பாட்டில் உறுதியாக இருக்கும்" என்றும் சொன்னார் கலைஞர் கருணாநிதி.



## இரண்டு பேர் பங்கு பற்றும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தினர் நடத்தும் இரண்டு பேர் பங்குபற்றும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றினை நடத்தவுள்ளனர்.

இந்தச் சுற்றுப்போட்டியில் பங்கு பற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பங்களை சங்க செயலாளர் கி.மனோகரன், இல.186/26, பருத்தித் துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஒரு கழகத்தில் இருந்து இரண்டு அணிகள் வீதம் பங்குபற்ற முடியும் என தெரிவிக்கப்படுகின்றது. (204)

## கொழும்பில் இன்று மென்பந்து கிரிக்கெட்

கொழும்பு, ஒக்.19

இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தின் கொழும்புக் கிளை தனது இரண்டாம் வருட நிறைவை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்துகின்றது.

ஆறு பேர்கொண்ட அணிகளுக்கு இடையில் தலா ஐந்து ஓவர்களைக் கொண்டதாக இந்த சுற்றுப்போட்டி ஆட்டங்கள் அமையும்.

கழகத் தலைவர் பாலசுப்பிரமணியம் ஐங்கரனின் வழிகாட்டலில் தெகிவளை பிறேசர் மைதானத்தில் இன்று இச்சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் நடைபெறும். (உ)

## குடாநாட்டில் இம் மாதம் 17 வரை 70.9 மில்லி மீற்றர் மழை பதிவு

யாழ்ப்பாணம், ஒக்.19

குடாநாட்டில் நேற்று முன்தினம் வரை ஒக்ரோபர் மாதத்தில் 70.9 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளது.

திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி புஸ்பநாதன் இத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தகவல் தருகையில் அவர் கூறியவை வருமாறு:-

இந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 17 ஆம் திகதி காலை 8.30 மணி வரை 70.9 மில்லி மீற்றர் மழை பதிவாகிள்ளது. ஒக்ரோபர் மாதத்தின் வருடாந்த சரா சரி மழை வீழ்ச்சி 242.8 மில்லி மீற் றராகும்.

கடந்த வருடம் ஒக்ரோபர் 17 ஆம் திகதியே மழை ஆரம்பித்தது. இதனால் செப்ரெம்பர் 10 ஆம் திகதியே நெல் விதைப்பு ஆரம்பித்தது. கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 2.2 மில்லி மீற்றர் மழை மட்டுமே பதிவாகியது. செப்ரெம்பர் மாதம் 95.7 மில்லி மீற்றர் மழை பெய்திருந்தது.

தற்போது ஒக்ரோபர் மாதம் -17 ஆம் திகதி வரை 70.9 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது. இதனால் தற்போதே நெல் விதைப்புப் பணிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது- என்றார்.

இதேவேளை-

நவம்பர், டிசெம்பர் மாதங்களில் மிகவும் வலிமையான தாழமுக்கம் ஏற்பட்டு புயல் உருவாகக் கூடிய அளவுக்கு வழிமண்டல நிலை காணப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (202-302)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 04 | 20.10.2008 திங்கட்கிழமை |
| திதி: | சஷ்டி பி.ப.01.22வரை |
| நட்சத்திரம் : | திருவாதிரை மு.இ.09.49 வரை |
| சுபநேரம் : | 12.02-01.32 |
| ராகுகாலம் : | 07.32-09.02 |

## நவக்கிரியில் விபத்து கணவன், மனைவி காயம்

தெல்லிப்பழை, ஒக்.19

புத்தூர் மேற்கு, நவக்கிரியில் மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்துக்குச் சமீபமாகவுள்ள வளைவு வீதியில் 'ஹைஏஸ்' வான் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் வந்த பெண் உட்பட இருவர் கடும்காயங்களுக்கு உள்ளானார்கள்.

வடமராட்சியில் நிகழ்ந்த மரண நிகழ்வு ஒன்றுக்காக கொழும்பிலிருந்து விமானம் மூலம் வந்திருந்த ஒரு குடும்பத்தினரை ஏற்றிவந்த வாகனமும் செல்வநாயகபுரம், அச்சுவேலியைச் சேர்ந்த மோட்டார் சைக்கிலும் விபத்துக்குள்ளாகின.

இவ்விபத்தில் 'ஹைஏஸ்' வானின் முன்புறம் முழுமையாகச் சேதமடைந்ததுடன்,மோட்டார் சைக்கிளும் கடுமையான சேதத்துடன் நொருங்கிக் கிடந்தன. மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த பாக்கியநாதன் இராகுலன் என்பவரும் அவரது மனைவியும் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (1-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொகாலி டெஸ்ட் போட்டியில்

# கங்குலியும் டோனியும் கைகொடுக்க தலைநிமிர்ந்து நிற்கிறது இந்திய அணி

### 100 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறுகிறது ஆஸி.

மொகாலியில் நடைபெற்றுவரும் இந்திய - அவுஸ்திரேலிய அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 469 ஓட்டங்களைக் குவித்து வலுவான நிலையில் இருக்கிறது.

ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று இந்திய அணியின் சௌரவ் கங்குலியும், அதிரடி வீரர் மகேந்திரசிங் டோனியும் இணைந்து சிறப்பாக ஆடி ஓட்டம் குவித்தனர்.

இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதலாம் நாளான நேற்றுமுன்தினம் இந்திய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 311 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

கங்குலி 54 ஓட்டங்களுடனும் இஷாந்த் சர்மா ஒரு ஓட்டத்துடனும் களத்தில் இருந்தனர். நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் இஷாந்த் சர்மா ஆஸி. வீரர் சைடில் வீசிய பந்தில் ஹடிச்சிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அவரது இடத்துக்கு களம் இறங்கினார் அதிரடி மன்னன் டோனி.

ஒரு முனையில் கங்குலி மெல்ல மெல்ல ஓட்டம் எடுத்து சதத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்க, மறுமுனையில் வழக்கம் போல வாணவேடிக்கை காட்டி அதிரடியாக ஓட்டம் குவித்தார் டோனி. 225 பந்துகளில் சதத்தைத் தொட்டார் கங்குலி. அவரது டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இது 16ஆவது சதம். சதமடித்த மகிழ்ச்சியில் குதூகலித்த கங்குலி அந்தச் சந்தோசம் அடங்குவதற்கு முன்பாகவே அவுஸ்திரேலிய வீரர் வைற்றினால் வீழ்த்தப்பட்டார். வைற் வீசிய பந்தில் பிரட்லீயிடம் பிடிகொடுத்து 102 ஓட்டங்களுடன் கங்குலி வெளியேற, வந்தார் ஹர்பஜன்சிங்.

வந்த வேகத்திலேயே வெறும் ஒரு ஓட்டத்துடன் பவிலியன் திரும்பினார் ஹர்புஜன். அவரைத் தொடர்ந்து வந்த சகீர்கானும் அவசரப்பட்டு 'ரண் அவுட்' முறையில் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஒரு முனையில் 8 பவுண்டரிகள் 4 சிக்ஸர்களுடன் 92 ஓட்டங்களை எடுத்திருந்த டோனி சைடில் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து சதம் அடிக்கும் வாய்ப்பை நழுவவிட்டார். அத்தோடு இந்திய அணியின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. மொத்தமாக 469 என்ற வலுவான ஓட்ட எண்ணிக்கையுடன் அந்த அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு முதலாவது ஓவரிலேயே அதிர்ச்சி காத்திருந்தது. முதல் டெஸ்ட் போட்டியின் இரு இன்னிங்ஸ்களிலும் ஆஸி. வீரர் ஹைடனைப் பதம் பார்த்து அனுப்பிய சகீர்கான் இந்த முறையும் அவரை டக் - அவுட் ஆக்கினார்.

ஹைடனுக்குப் பிறகு வந்த ஆஸியின் நம்பிக்கை நட்சத்திரங்கள் கடிச் (33) ரிக்கிபொண்டிங் (5) கிளார்க் (23) ஆகியோரும் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றம் அளித்தனர். நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் 102 ஓட்டங்களுக்கு 4 முக்கிய விக்கெட்டுக்களை இழந்திருந்தது ஆஸி. மைக் ஹஸி 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருக்கிறார். ஆட்டத்தின் மூன்றாம் நாள் இன்றாகும்.

# ஈழத்தமிழர்களின் படுகொலையைக் கண்டித்து தமிழக நடிகர்கள் இராமேஸ்வரத்தில் இன்று பேரணி!

சென்னை, ஒக். 19

* இலங்கை அரசு நடத்தும் தமிழினப் படுகொலையைக் கண்டித்தும்–
* தமிழ் மக்களை கொல்லப் பயன்படுத்தப்படும் ஆயுதங்களை இலங்கை அரசுக்கு வழங்குவதை உடனடியாக நிறுத்துமாறு கோரியும்–
* போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, மருந்துப் பொருள்களை செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் வழங்கக் கோரியும் –

தமிழக நடிகர், நடிகைகள் இன்று இராமேஸ்வரத்தில் பேரணியையும் பொதுக் கூட்டத்தையும் நடத்த உள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் பங்கு கொள்வதற்காக தமிழகத்தில் இருந்து நடிக நடிகைகள் நேற்று ரயில் மூலம் இராமேஸ்வரத்தைச் சென்றடைந்தனர்.

இன்று நடைபெறும் பேராட்டத்துக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகி உள்ளன என இயக்குனர் பாரதிராஜா தெரிவித்தார்.

# எக்காரணம் கொண்டும் விடுதலைப்புலிகளுக்கு காங்கிரஸ் கட்சி ஆதரவு தரமாட்டாதாம்

புதுடில்லி, ஒக்.19

இலங்கை நிலைமை குறித்து கவலை வெளியிட்டுள்ள இந்திய காங்கிரஸ் கட்சி எக்காரணம் கொண்டும் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு வழங்கமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் ஊடகப்பிரிவுப் பொறுப்பாளர் எம்.வீரப்பா மோடி இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பொதுமக்கள் உயிரிழப்பது குறித்து மட்டுமே தமது கட்சி கவனம் செலுத்துவதாகவும் அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

விடுதலைப்புலிகள் அமைப்பு இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ளதால் அதற்கு ஆதரவாக செயற்படமாட்டோம் - என்று அவர் தெளிவுபடத் தெரிவித்தார். (அ-1)

# கிளிநொச்சி கச்சேரி தர்மபுரத்துக்கு மாற்றம்

கிளிநொச்சி, ஒக்.19

கிளிநொச்சி அரச செயலகம் (கச்சேரி) தர்மபுரத்தில் செயற்பட ஆரம்பித்துள்ளது என்று கிளிநொச்சி அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கிளிநொச்சி நகரில் இயங்கி வந்த அரச செயலகத்தில் பணியாற்றிய பெரும்பாலான அலுவலர்கள் இடம்பெயர்ந்த காரணத்தால், செயலகத்தை கிளிநொச்சியில் இயக்க முடியாத நிலையில் தர்மபுரத்திற்கு மாற்றியுள்ளதாக அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

ஆஸ்பத்திரி விஸ்வமடுவுக்கு

கிளிநொச்சி நகரில் உள்ள ஆஸ்பத்திரியின் 50 வீதமான பொருள்கள் விசுவமடுவுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. சிறு வசதிகளுடன் கிளிநொச்சி நகரில் வைத்தியசாலை இயங்குகிறது என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (அ-1)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வது முகர்ஜியின் கொழும்பு விஜயத்தின் முக்கிய நோக்கம் என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை ஜனாதிபதி மற்றும் முக்கிய தலைவர்களை கொழும்பில் சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்து பேச்சு நடத்துவார் என்று இந்திய அரசு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. (அ-1)

## நாச்சிக்குடாவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் படைத்தரப்பு மேலும் தெரிவித்தது.

இத்தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் தகவல்கள் வெளியாகவில்லை.

அதேவேளை–

அக்கராயன் குளத்துக்கு வட்க்கே 1.5 கிலோ மீற்றர் தூரத்தில் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள 57 ஆவது பிரிவுக்கு உதவியாக எம். ஐ.ரக ஹெலிகொப்டர்கள் தாக்குதல் நடத்தின என்றும் பாதுகாப்பு தரப்பு தெரிவித்தது. (அ-1)

## இந்தியா தலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலையிட அனுமதிக்க முடியாது. உள்நாட்டுப் பிரச்சினைக்கு இலங்கை விரும்புவது போன்று தீர்வுகாண இந்திய உதவ வேண்டும். இந்தியா உதவ முன்வராவிட்டால் அதற்கு எதிராகப் போராட்டங்கள் நடத்த முடிவு செய்துள்ளோம்.

இந்தப் போராட்டம் நாடு முழுவதும் நடத்தப்படும் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## நிலைமையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அனுப் பவும் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மற்றொரு தகவல் தெரிவித்தது. (அ-1)

## இந்தியாவின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது - என்றும் இந்தியப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் இடித்துரைத்தார்.

போர் நடைபெறும் பகுதியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருள்கள் தங்கு தடையின்றிக் கிடைப்பதனை எப்போதும் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும் -

விடுதலைப்புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்களின் போது அங்கு வாழும் தமிழ்மக்களின் உரிமைகளும் நலன்களும் நசுக்கப்படக்கூடாது -

இலங்கைப் பிரச்சினைக்கு யுத்தம் ஒரு போதும் தீர்வாகாது. அமைதியான சூழலில் நடத்தப்படும் பேச்சுவார்த்தையின் மூலம் ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு காணப்படுவது அவசியமும் அவசரமுமானதாகும் - என்று வலியுறுத்தினார்.

தமிழகத்தில் அனைத்துக் கட்சி மாநாடு நடத்தப்பட்டு, இலங்கையில் இராணுவ நடவடிக்கையை நிறுத்த இரண்டு வார கால அவகாசம் கொடுத்து நாடாளுமன்ற தமிழக எம்.பிக்கள் கூண்டோடு இராஜிநாம செய்யப் போவதாக தீர்மானம் மேற்கொண்டதன் பின்னர், நேற்று இரண்டாவது முறையாக இலங்கைப் பிரச்சினை குறித்துப் பிரதமர் கருத்து வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவை இந்தியாவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஊடகத்துறை அமைச்சரைப் பணித்திருந்தார்.

இந்தக் குழுவில் அரசுக்கு ஆதரவளிக்கும் தமிழ்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை இடம்பெறச் செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆனால்- இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களை குழுவில் இடம்பெறச் செய்ய எடுக்கப்பட்ட முயற்சி தோல்வி கண்டு விட்டதாக நம்பகமாக தெரியவந்தது.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான போராட்டங்கள் தமிழகத்தில் நாளாந்தம் உச்சமடைந்துள்ள நிலையில் தமது விஜயம் பயனளிக்கக் கூடியதாக இருக்காது என இ.தொ.கா காரணம் தெரிவித்து குழுவில் அங்கம்வகிக்க மறுத்து விட்டதாக நம்பகமான வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

இதேவேளை- இக்குழுவில் அங்கம் வகிக்க ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இணக்கம் தெரிவித்துள்ளார்.

## இடம்பெயர்ந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கிவருகின்றோம்.

உணவுக்குப் புறம்பாக அவர்களுக்கு பல்வேறு உதவிகள் தேவைப்படுகின்றன. அவர்களுக்கு இருப்பிட வசதிகள் உட்பட பல வசதிகளைச் செய்துவருகிறோம். கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்து பல் வேறு இடங்களில் வசிக்கும் 40 ஆயிரம் குடும்பங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கிவருகின் றோம் - என்றார் அவர். (அ-1)


**விற்பனைக்கு**

மிகவும் நல்ல நிலையில் உள்ள Canon NP-1215 SHARP -SF-1118 போட்டோப் பிரதி இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு.

Com-e
222, K.K.S. Road,
(ஆல் சிலோன் டிஸ்ரி பியூட்டர்ஸ் அருகில்), யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0776 271500



**முதலாவது பிறந்தநாள் வாழ்த்து**

**ஆரபி**



சபேசன்- பிறேமினி தம்பதியினரின் செல்வப் புதல்வி ஆரபி தனது முதலாவது பிறந்த நாளை இன்று (19.10.08) ஞாயிற்றுக்கிழமை கொக்குவிலிலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக்கொண்டாடுகின்றார்.

இவரை அப்பப்பா, அப்பம்மா, சுவிசில் வசிக்கும் பெரியப்பா குடும்பம், அக்கா- கருணி, கனடாவில் வசிக்கும் அத்தை குடும்பத்தினர், மச்சான்-மயூரன், அராலியில் வசிக்கும் அம்மம்மா, மாமி, பெரியம்மா, பிரான்சில் வசிக்கும் தாத்தா, மாமன் குடும்பம், மச்சாள் மார்களான துளசி, சோபிகா, அத்தான்-நிசாகரன், வாசன், சங்கவி, நிருத்திகா, நிருசன், அண்ணன்- சாகித்தியன் ஆகியோர் அராலி காளியம்பாள் அருள்பெற்று சீரும், சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்:
அச்சக வீதி, கொக்குவில்.
பெரியம்மா (ஆரபி).



**RAM COMMUNICATION**

உள்நாட்டு வெளிநாட்டுக்கான

துரித தபால்கள் பொதிகள்

வாடிக்கையாளர்களின் நலன்கருதி சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ கனடாவிற்கான 5 கிலோவிற்கு குறையாத 1kg பொதிகளுக்கு 1200/= வீதமும் 10kg இற்கு மேற்பட்ட 1kg பொதிகளுக்கு 1000/= வீதமும் மேலும் லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 5 kg இற்கு குறையாத 1kg பொதிகளுக்கு 1500/= வீதமும் மற்றும் வேறு நாடுகளுக்கும் மிகக்குறைந்த கட்டணங்கள் அறவிடப்படும்.

E.mail:n.RAMcom@yahoo.com
RAMcom2008@Hotmail.com
T.P.: 021 - 222 8428
Fax: 021 - 222 2007

Internet Browsing
சேவை
தீபாவளித் திருநாள் அன்று வழமையான கட்டணத்திலும் பார்க்க அரைவாசிக் கட்டணங்கள் அறவிடப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
RAM com
மற்றும்
Photocopy, Internet call, Local, IDD, E.mail
Computer Typing, Scanning, Lamination
மேலும்
Reload, Kit, SLT mastalk card
கையடக்க உதிரிப்பாகங்கள் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

No. 6, ஆஸ்பத்திரி வீதி, New Market, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org